பக்கங்கள் : 18+VIII=26

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 தை 17 ஞாயிற்றுக்கிழமை (30.01.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :65



தளபதிகளும் பொறுப்பாளர்களும் பாலாவை வழி அனுப்பிவைக்கும் போது...

சுனாமியால் பாதிக்கப்பட்ட

# வடக்கு - கிழக்கு மீனவர்கள் மீளவும் தொழிலை ஆரம்பிக்க விசேட திட்டம்

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிமுகம்

கிளிநொச்சி,ஜனவரி 30

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மீனவர்கள் தமது தொழிலை உடன் ஆரம்பிக்க உதவும் வகையில் 'மீண்டும் வேலைக்கு' எனும் பாரிய திட்டம் ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆரம்பித்துள்ளது.

அக்கழகத்தின் நிர்வாகப் பணிப்பாளர் றெஜி இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

இத்திட்டம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுனாமியால் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் மீனவர்களே. அவர்களுக்கு நிவாரணத்தை வழங்கிக்கொண்டிருப்பதால் அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டாது.

இழப்புக்களைச் சந்தித்த அவர்கள், துயரில் இருந்து மீள்வதற்கும் தமது கவலைகளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி நிலையங்களுக்கு மின்சாரம் 25 ஜெனரேட்டர்கள் வந்து சேரும்

யாழ்ப்பாணம்,ஜன.30

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கின் மூன்று மாவட்டங்களில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கென 25 ஜெனரேட்டர்கள் வழங்கப்படவுள்ளன.

புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு இந்த ஜெனரேட்டர்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களின் வசதிக்காக மின்சாரம் வழங்கப்படவிருக்கின்றது.

மின்சாரம் வழங்க வசதியாக யாழ்ப்பாணத்துக்கு 7 ஜெனரேட்டர்களும், கிளிநொச்சிக்கு 7 ஜெனரேட்டர்களும் முல்லைத்தீவுக்கு 10 ஜெனரேட்டர்களும் அனுப்பிவைக்கப்படும்.

அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் ஊடாக இந்த ஜெனரேட்டர்கள் வழங்கப்படும்.

அதேவேளை -

வடக்கு - கிழக்கு மாகாண சபை, யாழ். செயலகத்துக்கு ஐந்து ஜெனரேட்டர்களை வழங்கியுள்ளது. அவை மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்டுள்ளன. (எ-3)

## பாலசிங்கம் தம்பதியர் லண்டன் பயணம்

கிளிநொச்சி,ஜன.30

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் அழைப்பின் பேரில் கடந்த 21ஆம் திகதி வன்னி வந்த மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் பாரியாருடன் நேற்று லண்டன் திரும்பினார்.

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் கிளிநொச்சி உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் இருந்து ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலி மூலம் பாலசிங்கம் தம்பதியர் கட்டுநாயக்கவுக்குப் புறப்பட்டனர்.

பெரும் எண்ணிக்கையில் கூடியிருந்த போராளிகள், தளபதிகள் கையசைத்து பாலசிங்கம் தம்பதியரை வழி அனுப்பி வைத்தனர்.

அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்

(16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே சூரியகாந்தியில்

★ சுனாமியின் காயங்கள் ஆறத் தொடங்கிவிட்டனவா?

★ அராலித்துறைக் கண்ணித் தாக்குதலின் அவிழா முடிச்சுகள்.....

★ பொறுமைக்கு உதாரணம் பூமி பூகம்பம் வந்துவிட்டால்....
- இயற்கை அனர்த்தங்கள் தொடர்.

★ கடலம்மா...
- ஒரு நெய்தல் நிலக்கதை.

★ "....படிக்கிறதுக்கான சூழ்நிலை இல்லை பரீட்சையை ஒத்திவைக்கக் கேட்கலாம்..."
- மாணவர்களின் மனப்பதிவு - தொடர்.

இவைகளுடன் யாழ்-பாணம். யாரொடு நோவோம். நினைக்க... சிரிக்க... சிந்திக்க...

## கொரிய அமைச்சருடன் இளம்பரிதி பேச்சு

யாழ்ப்பாணம்,ஜன.30

யாழ்ப்பாணத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் வருகைதந்த கொரிய அமைச்சர் தலைமையிலான உயர் மட்டக் குழு, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை நேற்றிரவு யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியது.

இக்கலந்துரையாடலில் தமிழ்க்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளா?

### கொழும்புக் கருத்தரங்கில் ஆனந்தசங்கரி விதண்டாவாதம்

கொழும்பு.ஜன.30

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 22 தமிழ்க் கூட்டமைப்பு எம்பிக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளா? விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளா? என்ற விதண்டாவாதம் ஒன்று கொழும்பில் நேற்று இடம் பெற்றிருக்கிறது.

அரசமைப்பு விவகார, நல்லிணக்க அமைச்சின் ஏற்பாட்டில் 'சுனாமி அனர்த்தத்தின் பின்னர் சமாதான முயற்சிகளின் எதிர்காலம்' என்ற தலைப்பில் இலங்கை மன்றக் கல்லூரியில் நேற்று ஒருநாள் கருத்தமர்வு ஒன்று இடம் பெற்றது.

இக்கருத்தமர்வை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்து சமாதானத்தின் அவசியத்தை வலியுறுத்தினார்.

இதில் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, ஈ.பி.டி.பியைச் சேர்ந்த விக்னேஸ்வரன், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த(சு.க.), முன்னாள் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா (ஐ.தே.க.), அமைச்சர் ஹேம விதாரண

(16ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கக் கடற்படையினர் பெப்.15 இல் வெளியேறுவர்

### தூதரக அதிகாரி நேற்றுத் தகவல்

கொழும்பு.ஜன.30

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதங்களில் இருந்து மக்களை மீட்கும் பணியில் ஈடுபடுத்தவென இலங்கை வந்த அமெரிக்கக் கடற்படையினர் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முற்றாக வெளியேறிவிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்கத் தூதரகத்தினால், நேற்றுக் கொழும்பில் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே இது தெரிவிக்கப்பட்டது.

மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த ஆயிரத்து 600 வீரர்கள் விமானங்கள், ஹெலிகள் சகிதம் கடந்த 9ஆம் திகதி இலங்கையில் கால்பதித்தனர். கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகில்

(16ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பி. - சு.கட்சி முறுகல்

## ஜனாதிபதி தலைமையில் நாளை சமரசச் சந்திப்பு

கொழும்பு.ஜன.30

அரசின் பங்காளிக்கட்சிகளான சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் உருவாகியுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வுகாணும் சமரசச் சந்திப்பு ஒன்று நாளை திங்கட்கிழமை ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இரு கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துவரும் கருத்துக்களால் உருவாகியுள்ள நெருக்கடி நிலைக்கு தீர்வுகாணும் நோக்கில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மாளிகையில் நாளை மாலை 6 மணிமுதல் இடம்பெறும் இச்சந்திப்பில் இரு கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்வர். (எ-3)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் மீண்டும் கோழிக் குஞ்சு உற்பத்தி

## பெப்ரவரி முதல் பண்ணையாளருக்கு விநியோகம் என அறிவிப்பு

அச்சுவேலி,ஜன.30

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இருந்து மீண்டும் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

பெப்ரவரி 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஒருநாள் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும். ஒருநாள் கோழிக் குஞ்சுகளில் முட்டை இனக் கோழிக்குஞ்சுகள் 45 ரூபா வீதமும் சேவல் கோழிக்குஞ்சுகள் 7 ரூபா வீதம் விற்பனை செய்யப்படும்.

மேற்படி கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையத்தில் இடைக்காலத்தில் கோழிக்குஞ்சு உற்பத்தி இடைநிறுத்தப்பட்டிருந்தது. இனிமேல் செவ்வாய்க்கிழமைகள் தோறும் ஒருநாள் கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

பண்ணையாளர்கள் மற்றும் கோழி வளர்ப்போர் பிராந்திய கால்நடை வைத்திய அதிகாரிகள் அலுவலகங்கள் ஊடாகவும் -

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைமையகத்திலும் -

நேரடியாக கைத்தொழில்பேட்டை கோழிக் குஞ்சு உற்பத்தி நிலையத்திலும் - பதிவு செய்து ஒருநாள் கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையக் கால்நடை வைத்தியர் செல்வி அமுதா தெரிவித்தார். (எ-11)

# கச்சதீவு அந்தோனியார் வருடாந்த உற்சவம்

நல்லூர்,ஜன.30

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஒரேயொரு தினம் மட்டும் நடைபெறவிருக்கும் மேற்படி ஆலயத்தில் நெடுந்தீவு பங்குத் தந்தை வண. பிதா ஜெபநேசரட்ணம் அடிகள் திருப்பலி ஒப்புக்கொடுப்பார்.

கச்சதீவு உற்சவம் தொடர்பான கூட்டம் நாளை திங்கட்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது. (8-111)

# நவீனமுறையிலான மீன்பிடி வடக்கு மீனவருக்கும் தேவை

## அரசு உதவ மறுக்கின் போராட்டம் என்கிறார் சமாசத் தலைவர்

யாழ்ப்பாணம்,ஜன.30

சுனாமி ஆழிப்பேரலையினால் அழிந்துபோன பாரம்பரிய மீன்பிடித் தொழிலைக்கைவிட்டு, நவீனமுறை மீன்பிடித் தொழிலை வடக்கில் மேற்கொள்ள அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் க.சூரியகுமார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கட்டுமரத்தினையும், படகினையும் பயன்படுத்தி இதுவரை காலமும் எம்மவர்கள் கடற்றொழிலை மேற்கொண்டுவந்தனர். ஆனால் தென்னிலங்கை மீனவர்களோ மானிய அடிப்படையில் அரசு வழங்கும் கடனுதவிகளைப் பயன்படுத்தி நவீன மீன்பிடி முறைகளைக் கடைப்பிடித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில், அண்மையில் இடம்பெற்ற ஆழிப்பேரலை வடபகுதி மீனவர்கள் இதுவரை காலமும் பயன்படுத்தி வந்த கட்டுமரங்களையும், படகுகளையும் நாசம் செய்துவிட்டனர்.

எனவே, இந்த நிலைமையைப் பயன்படுத்தி வடபகுதி மீனவர்களும் நவீன மீன்பிடி முறைகளைக் கடைப்பிடிக்க தகுந்த முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டும். அரசு இதுவிடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நவீன மீன்பிடிமுறைகள் பின்பற்றப்பட வேண்டுமானால் மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் அரசு கடன் வழங்கவேண்டும்.

இதுவிடயத்தில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படாவிடில் மீனவர்களின் நலனுக்காகப் போராட்டம் நடத்தவேண்டிய நிலையும் ஏற்படலாம் - என்று அவர் மேலும் கூறினார். (எ-7)

# சாயி சமித்தி குடிதண்ணீர் வசதி

கோப்பாய்,ஜன.30

கோப்பாய் சாயி சமித்தி இருபாலை கிழக்கில் 50 குடும்பங்களுக்குக் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான நிதியுதவியை சாயி அன்பர் ஒருவர் சாயி சமித்தி ஊடாக வழங்கியுள்ளார். (த-72)

# இது சுனாமி வழக்கு!

கொழும்பு,ஜன.30

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று ஒருமாதம் கடந்துவிட்டது. ஆனால் அதன் பிரதிபலிப்புகளும், சோகங்களும் அது குறித்த பல்வேறு நிகழ்வுகளும் இன்னும் ஓய்ந்துவிடவில்லை.

அவ்வாறான சுனாமிப் பிரதிபலிப்புச் சம்பவங்களில் ஒன்றுதான் இதுவும்.

கடந்த மாதம் 26ஆம் திகதி கொழும்பிலிருந்து மாத்தறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலை 'ஹிக்கடுவ' என்ற இடத்தில் சுனாமி அலைகள் மோதித் தள்ளியதால் அதில் பயணித்துக்கொண்டிருந்த நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தமை அனைவரும் அறிந்ததே.

அந்த அனர்த்தத்தில் மயிரிழையில் உயிர் தப்பிய - ஆனால், தனது மனைவி, தாய், மாமியார் ஆகியோரைப் பறிகொடுத்த ஜெயசிறி பெரேரா என்பவர் பொலீஸ் தலைமையகத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறார்.

முதலில் சுமார் 5 அடி உயரத்துக்கு கொந்தளித்து வந்த அலை ரயில் பெட்டிகளைத் தாக்கியபோது உள்ளே கணிசமான அளவு நீர் புகுந்துவிட்டது. எனினும் அப்போது தனது தாய், மனைவி, மாமியார் ஆகியோர் உயிருடனேயே இருந்தனர் என்றும் -

அப்போது ரயிலினுள் மேல் பக்கமாக இருந்த இரும்புக்கம்பி ஒன்றில் தொங்கியவாறு தனது கையடக்கத் தொலைபேசியை எடுத்து அவசர பொலீஸ் பிரிவினருக்குத் தகவல் கொடுத்தபோதும் அவர்கள் அங்கு வரவில்லை என்றும் -

பின்னர் 36 ஆவது நிமிடத்தில் 20 அடி உயரத்துக்கு எழும்பிவந்து தாக்கிய இரண்டாவது அலையே தனது உறவினர்களின் உயிரைப் பறித்தது என்றும் அவர் தனது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவேதான் தகவல் கொடுத்தவுடன் அவசர பொலீஸார் அங்கு வந்திருந்தால் தனது உறவினர்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்பதே அவரது வாதம்.

கடற்கோள் தொடர்பாக ஹவாய் தீவிலுள்ள கடற்கோள் முன்னெச்சரிக்கை நிலையம் முற்கூட்டியே இலங்கை பூகற்பவியல் நிபுணர்களுக்குத் தகவல் கொடுத்திருந்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினார்கள் என்று அவர்கள் மீதும் இவரது குற்றச்சாட்டு விழுந்திருக்கிறது.

'சுனாமி' அனர்த்தம் ஏற்பட்டதும் நாடாளுமன்ற உறுப்பினரான (முன்னாள் பிரதி நிதி அமைச்சர்) பந்துல குணவர்த்தன என்பவரை ஹெலியில் சென்று காப்பாற்றிய பொலீஸார் நூற்றுக்கணக்கான பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டனர் என்றும் ஜெயசிறி தனது மனுவில் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவர் தனது மனுவில் பொலீஸ் தலைமையகத்தின் ஏ.எஸ்.பி., பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், விமானப்படைத் தளபதி மற்றும் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிட்டிருக்கிறார். (த)

# வீடமைப்பு அதிகார சபை வீடுகளின் அழிவுகளை மதிப்பிடும் பணி ஆரம்பம்

வலி.வடக்கு,ஜன.30

பருத்தித்துறை மற்றும் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீடுகளின் அழிவு விவரங்களை மதிப்பிடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் இந்த விவரங்களைச் சேகரித்து வருகின்றனர்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான பல நூற்றுக்கணக்கான வீடுகள் இப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் குடியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இவற்றுடன் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வழங்கிய வீடமைப்புக் கடன மூலமும் நூற்றுக்கணக்கான வீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு மேற்படி இரண்டு பிரதேச செயலர் பிரிவுகளிலும் அமைக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான வீடுகள் சுனாமி கடல் அனர்த்தத்தின்போது அழிவைச் சந்தித்திருந்தன.

இவ்வாறு அழிவைச் சந்தித்த வீடுகளின் அழிவு சம்பந்தமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு வசதியாக மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் கடமையாற்றும் அனைத்து வீடமைப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் பருத்தித்துறை, மருதங்கேணி பகுதிகளில் கடமையாற்றப் பணிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் இப்பணியை விரைவுபடுத்துவதற்கு வசதியாக மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் வீடமைப்பு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் ஆறுபேரும் தற்காலிகமாக யாழ்ப்பாணம் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் - கூறப்பட்டது. (எ-86)

# கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலயம் தனியார் காணிக்கு இடம்மாற்றம்

வலி.தென்மேற்கு,ஜன.30

கடந்த 10 வருடகாலமாக சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்குச் சமீபமாகவுள்ள தனியார் கட்டடத்தில் இயங்கி வந்த கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம் கடந்த 10ஆம் திகதி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கு சமீபத்திலுள்ள தனியார் காணியில் இடம்மாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகின்றது.

கல்வித் திணைக்களம் ஒதுக்கீடு செய்த நிதியைக்கொண்டு இக்காணியில் புதிய வகுப்பறை மண்டபங்கள் நிறுவப்பட்டுள்ளன. இங்கு மலசலகூடம் ஒன்று உள்ள போதிலும் மாணவர்களின் தேவைக்கு போதியதாக இல்லை என்று கூறப்பட்டது.மேலும் ஒரு மலசலகூடம் தேவைப்படுகின்றது.

கிணறு ஒன்று உள்ளபோதிலும் சுத்தமான குடி தண்ணீரைப்பெற முடியாமல் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கரிமலையில் இயங்கிவந்த இந்த மகாவித்தியாலயம் 1990ஆம் ஆண்டில் அந்தப் பகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்தது. இதுவரை ஒன்பது இடங்களில் இந்த மகா வித்தியாலயம் மாறிமாறி இயங்கி வந்துள்ளது.

தற்போது இயங்கும் இந்த இடம் பத்தாவது இடமாகும். இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் (அகதி முகாமகளில்) வசித்துவரும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே இங்கு பெரும்பாலும் கல்வி பயின்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-135)

# பாதிக்கப்பட்டோருக்கு இதுவரை எவரும் தொழில் வாய்ப்புக்களை வழங்கவில்லை

## புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் உதயனுக்குத் தகவல்

**- முல்லைத்தீவிலிருந்து கேசவன் -**

விசுவமடு,ஜன.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடற்றொழில் வாய்ப்பை வழங்குவது பற்றி பல்வேறு நிறுவனங்களும் அரச அதிபருடன் கலந்துரையாடி வருகின்றன.

ஆனால் இதுவரை எவரும் தொழில் வாய்ப்புக்கான உபகரணங்களையோ வள்ளங்களையோ, வலைகளையோ வழங்கவில்லை.

இவ்வாறு தெரிவித்தார் புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் செ.தயானந்தா.

முல்லை மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு மற்றும் மீள்குடியமர்வுப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து 'உதயன்' செய்தியாளருக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 950 குடும்பங்கள் 10 பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சமைத்த உணவுகளை வழங்கி வருகின்றது. 1,384 வரையான குடும்பங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களில் சில குடும்பங்களினை எடுத்து முல்லைத்தீவு அரச அதிபர் பிரிவில் தற்காலிகக் கொட்டகைகள் போடப்பட்டு மீளக்குடியமர்த்தப்படுகின்றது.

இவர்களில் அநேகமானோர் கடற்றொழில் செய்வதால் முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவில்தான் வசிக்கவிரும்புகிறார்கள்.

அடுத்த வாரமளவில பாடசாலைகளில் தங்கியிருப்பவர்களின் தொகை குறையும். அத்துடன் உறவினர் வீடுகளில் தங்கியிருப்பவர்களின் தொகையும் குறையும். ஏனெனில் வீடுகள் பாதிக்கப்படாதவர்கள் அநேகமாக மாத்தளனில் இருந்து வட்டுவாகல் வரையானோர் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

**கே.:** மீளக்குடியமரும் மக்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

**ப.:** பல்வேறு நிறுவனங்கள் வந்து மக்களின் தொழில் வாய்ப்புகள் பற்றி அரச அதிபருடன் கதைத்திருக்கிறார்கள். இன்னும் ஒருவரும் தொழில்வாய்ப்புக்களை செய்யக்கூடிய உபகரணங்களையோ, வள்ளங்களையோ வலைகளையோ கொடுக்கவில்லை.

**கே.:** உறவினர் வீடுகளில் தங்கியிருப்போருக்கு எத்தகைய உதவிகள் வழங்கப்படுகின்றன?

**ப.:** தனியார் வீடுகளில் தங்கியிருப்போருக்கு பல்வேறு தொண்டர் நிறுவனங்கள் கொடுத்த பொருள்களில் ஓரளவுக்கு ஒருகிழமைக்குப் போதுமான [illegible]கக் கொடுத்திருக்கிறோம். உலக உணவு ஸ்தாபனம் 2 வாரத்துக்கான உணவினை வழங்கியுள்ளது. முதல் படியாக 250 தனியார் வீடுகளில் தங்கியுள்ள குடும்பங்களுக்கு தலா 35 கிலோ நிறையுடைய பொருள்களை வழங்கியுள்ளோம்.

அரசிடம் இருந்து நிவாரண முத்திரை வந்திருக்கின்றது. ஒரு நபருக்கு ஒரு கிழமைக்கு 375 ரூபா பெறுமதியாக முத்திரையினை வழங்கவிருக்கின்றோம்.

மக்கள் வங்கி ஒரு குடும்ப அங்கத்தவரைக் கொண்டவருக்கு 2500 ரூபாவும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு 5000 ரூபாவும் சுனாமி அனர்த்த நிதியம் என்ற ஒரு சேமிப்பு வைப்பினைச் செய்யவுள்ளது.

இந்த நிதியிலிருந்து தமது தேவைக்கேற்றால்போல் அவர்கள் எடுக்கலாம் என மக்கள் வங்கி முகாமையாளர் கூறியுள்ளார்.

**கே.:** மீட்புப் பணிகள் எப்படியிருக்கின்றன?

**ப.:** மீட்புப் பணிகளைப் பொறுத்தளவில் அரசு பெரியளவில் உதவி செய்யவில்லை. விடுதலைப் புலிகள்தான் அதனைச் செய்தார்கள் அவர்கள்தான் தங்களின் கனரக வாகனங்களை முற்றுமுழுதாய் பயன்படுத்தியிருக்கிறார்கள். அரசிடம் இருந்து இன்றுவரை எந்தக் கனரக வாகனமும் கிடைக்கவில்லை. ஆக இரண்டு தண்ணீர் பவுசர்கள்தான் அரசிடமிருந்து வந்திருக்கின்றது.

# மக்களின் எதிர்ப்பை அடுத்து குழாய் பொருத்துதல் நிறுத்தம்

கோப்பாய்,ஜன.30

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து வெளியேறும் கழிவுநீரை கோப்பாய் கண்ணகை அம்மன் கோயில் குளத்திற்குச் சேர்ப்பிக்கும் திட்டத்திற்கு அப்பகுதி மக்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து திட்டத்தின்படி நீரை வெளியேற்றுவதற்கான குழாய்களைப் பொருத்தும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்திற்கு கோப்பாய் பகுதி மக்கள் பலத்த எதிர்ப்பை பல்வேறு சமூக அமைப்புகளூடாக வெளிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-72)

# ஈராக்கில் இன்று வாக்களிப்பு

## வன்முறைகள் தொடர்வதால் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

பக்தாத்,ஜன.30

சதாம் ஹுசைனை ஆட்சியில் இருந்து அகற்றி ஈராக்கில் அமெரிக்கப் படைகள் கைப்பற்றிய பின்னர் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பொதுத்தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

ஈராக்கியத் தேர்தல் தொடர்பாக ஜனநாயக நடைமுறையை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் ஈராக்கியப் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டு முடித்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய முக்கியத்துவம் வாய்ந்த இத் தேர்தலுக்கான கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை பாதுகாப்புப் படையினர் செய்து முடித்துள்ள போதிலும், அமெரிக்க, ஈராக்கியப் படையினர் மீதும் வாக்குச் சாவடிகள் மீதும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பக்தாத் மற்றும் ரமடி ஆகிய இடங்களில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு தாக்குதல்களில் அமெரிக்கப் படை வீரர்களும் பத்துக்கு மேற்பட்ட ஈராக்கியப் படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

வாக்களிப்பைச் சுமுகமாக நடத்துவதற்கான முன்னேற்பாடாக நேற்றுச் சனிக்கிழமை முதல் அமெரிக்கப் படையினர் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளனர். எல்லைகள் மூடப்பட்டதுடன், பொது மக்களது நடமாட்டமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழும் ஈராக்கியர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

ஈராக்கில் மோதல்களுக்கிடையில் சிக்கி உயிரிழக்கும் சிவிலியன்கள் விடயத்தில் 60 வீதமான மரணங்களுக்கு கூட்டுப்படைகளும் ஈராக்கியப் படைகளுமே பொறுப்பேற்கவேண்டும் எனப் படுகாயமுற்றோர் தொடர்பான புள்ளிவிவரம் சேகரித்த பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

ஈராக்கில் இயங்கும் அல்கெய்டா அமைப்புடன தொடர்புடைய மூன்று தீவிரவாதிளைத் தாம் கைதுசெய்துள்ளதாக ஈராக்கிய அரசு தெரிவித்துள்ளது. அல்கெய்டா அமைப்பின் பக்தாத் பொறுப்பதிகாரி எனக் கருதப்படும் அபு முஸாப் அல் ஸர்குவாஷி என்பவரும் இவர்களில் ஒருவராவர்.

ஈராக்கிய இடைக்கால அரசின் பிரதமரான இயத் அல்லாவிக்கு ஆதரவான வேட்பாளர் ஒருவரைக் கொலை செய்ததுடன், அக்காட்சியைச் சர்வதேச செய்திவலைப்பின்னல் மூலம் ஒளிபரப்பியதாகவும் இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

தேர்தல் தினமான இன்று வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

காலை 7 மணிக்கு ஆரம்பிக்கப்படும் வாக்களிப்பு மாலை ஐந்து மணிவரை இடம்பெறும். 5300 வாக்களிப்பு நிலையங்களில் 28ஆயிரம் வாக்குச் சாவடிகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அடுத்தவாரத்தில் நான்கு அல்லது ஐந்து தினங்களுக்கு வாக்கு எண்ணிக்கை இடம்பெறும. பெப்ரவரி மாத முற்பகுதியில் இறுதித்தேர்தல் முடிவுகள் வெளியிடப்படும். மார்ச்மாத முற்பகுதியில் பிரதமர் நியமனம் இடம்பெறும். மார்ச் மாத பிற்பகுதியில் அரசு உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.



அங்கு இடம்பெறும் வன்முறைச் சம்பவங்கள் காரணமாகப் பல வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்ததுடன், தேர்தலில் தாம் போட்டியிடுவது குறித்த செய்தியைப் பகிரங்கப்படுத்துவதையும் தவிர்த்துவிட்டனர்.

பல இடங்களில் வாக்களிப்பு நிலையங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் நோக்கில் கிளர்ச்சியாளர்கள் மோட்டார் ஏவுகணை மற்றும் கைக்குண்டுகள் சகிதம் அயுததாரிகளாகக் காணப்பட்டனர்.

இதன் காரணமாகப் பல வாக்களிப்பு நிலையங்களின் அமைவிடம் குறித்த விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டன. அதுமட்டுமன்றி வாக்குப்பெட்டிகளின் விநியோகம்கூடப் பாதுகாப்புப் படையினரால் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டது.

தேர்தல் சமயத்தில் இறுக்கமாக பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்கும் நேரத்தில் நூற்றுக்கணக்கான மேலதிகப் பொலீஸார் கடந்த மூன்று நாள்களாகச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (8)

உலக அரங்கில்

# அந்தமானில் தொடரும் பூமிநடுக்கம் இதுவரை 170 தடவைகள் அதிர்வு

போர்ட்பிளேர்,ஜன.30

அந்தமான் தீவில் பூமி அதிர்ச்சி அலை இன்னும் ஓயவில்லை இது விஞ்ஞானிகளை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி உலகை உலுக்கிய கடல் பூகம்பத்தால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டது அந்தமான் தீவு பகுதியாகும். சுனாமி அலை தாக்குதலுக்குப் பிறகு அந்தமான் தீவை விட்டுக் குடும்பம் குடும்பமாக மக்கள் வெளியேறி வருகிறார்கள்.

அன்று முதல் அந்தமான் தீவில் பூமி அதிர்ச்சி தொடர்ந்து நீடித்து வருகிறது. கடந்த 27ஆம் திகதி அதிகாலை வரை 15முறை நிக்கோபார் தீவில் பூமி குலுங்கியது. அவற்றில் 10அதிர்வுகள் கமோர்ட்டா தீவை மையமாக கொண்டு நிகழ்ந்துள்ளன.

முறையே இரவு 10.35, 11.09, 12.23, 1.40, அதிகாலை 4.57, 9.02 மணிக்கு பதிவான இந்த பூமி அதிர்ச்சிகள் 5.1 முதல் 5.5 ரிச்டர் அளவு சக்தி வாய்ந்ததாக இருந்தன.

பின்னர் நேற்று முன்தினம் பகலில் 11.41 மணி, 1.19,மாலை 5.23,6.07 ஆகிய நேரங்களிலும் முறையே 5.6, 5.3, 5.4, 5.2 ஆகிய அளவுகளில் நில அதிர்வுகள் பதிவானது.

டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பம் சுனாமி பேரலை தாக்குதலை அடுத்து இதுவரை 170முறை அந்தமானை பூமி அதிர்ச்சி உலுக்கி எடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபரீத நிகழ்வுகள், விஞ்ஞானிகளை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது. அந்தமானில் ஏற்பட்டு வரும் தொடர் பூமி அதிர்வுகள் வழக்கத்துக்கு மாறானவை என்றும் பூமி அதிர்ச்சி வரலாற்றில் இதுவரை கேள்விப்படாதது என்றும் விஞ்ஞானிகள் வியப்பு தெரிவிப்பு தெரிவித்து உள்ளனர். மும்பையில் உள்ள இந்திய தொழில் நுட்ப நிலையத்தின் புவியியல் துறை மற்றும் பாபா அணு ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் இதுபற்றி கூறி இருப்பதாவது:-

அந்தமானை உலுக்கிய தொடர் பூமியதிர்வுகள் பீதியடைய வைக்கின்றன. இந்த அதிர்வுகள் பக்கவாட்டிலும் செங்குத்தாகவும் பதிவாகி உள்ளன. பக்க வாட்டில் நிகழ்ந்துள்ள பூமியதிர்வின் தாக்கம் இமய மலை தொடருக்கு மிகப் பெரிய அழுத்தத்தை ஏற்படுத்தும்.

இந்த அதிர்வுகள் டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்தின் பின் விளைவு தாக்குதலா அல்லது இனி வரப்போகும் மற்றொரு பெரிய தாக்குதலுக்கான முன் எச்சரிக்கை அதிர்வுகளா? என்று தெளிவாகத் தெரியவில்லை. கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் அதுபற்றி தீவிர ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு விஞ்ஞானிகள் கூறினார்கள். (8)

# ஈராக் புதிய அரசு கேட்டுக்கொண்டால் அமெரிக்கப் படைகள் வெளியேறும்

## அதிபர் புஷ் தெரிவிக்கிறார்

வாஷிங்ரன்,ஜன.30

ஞாயிற்றுக்கிழமை (இன்று) ஈராக்கில் நடைபெறும். தேர்தலில் தேர்ந் தெடுக்கப்படும் புதிய தலைவர்கள் அமெரிக்கப் படை வெளியேற வேண்டும் என கேட்டுக் கொண்டால் அதை நாங்கள் உடனே நிறைவேற்றுவோம்" என அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகைக்கு அதிபர் புஷ் அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஈராக் தேர்தலுக்கு பிறகும் அமெரிக்கப்படையினர் அங்கேயே தங்க வேண்டும் என அந்நாட்டு மக்கள் விரும்புகின்றனர். தீவிரவாதிகளை எதிர்த்துப் போரிட ஈராக் படையினர் பயிற்சி பெறும் வரை அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் அங்கு இருக்க வேண்டும் என்பதை பெரும்பாலான ஈராக் தலைவர்கள் உணர்ந்துள்ளனர்.

தேர்தலுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவர்கள் விரும்பினால், அமெரிக்கப் படையினர் அங்கே தங்கியிருப்பர் இதற்கு மாறாகச் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என அவர்கள் விரும்பினால், அமெரிக்கப்படை வெளியேற வேண்டும் என கேட்டுக்கொண்டால், அதை நாங்கள் கண்டிப்பாக நிறைவேற்றுவோம்.

அமெரிக்கப்படையினரைத் தங்களுக்கு உதவி செய்ய வந்தவர்கள் என ஈராக் மக்கள் நினைத்துள்ளனர். நாட்டை பிடிக்க வந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு கிடையாது. ஆனால், மற்றவர்கள் அமெரிக்கப்படையினரை நாட்டை பிடிக்க வந்தவர்கள் என்றே கூறுகின்றனர். இந்தப்போக்கை நான் உணர்ந்துள்ளேன்.

ஒரு கால கட்டம் வரை கூட்டுப் படையினா மீது நாட்டைப் பிடிக்க வந்தவர்கள் என்ற பழி சுமத்தப்படும். பின்னர் அது மாறிவிடும்.

ஈராக்கில் அமைதியாக உள்ள பகுதிகளை ஈராக் படையினரிடம் ஒப்புடைக்கலாம் என்ற கருத்தை பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரும் கூறியுள்ளார். ஆனால், இந்தத் திட்டம் குறித்து நான் இன்னும் ஆலோசனை செய்யவில்லை - என்றார். (8)

# சீனாவில் சூதாட்டம் அதிகரிப்பு; இதுவரை 15 ஆயிரம் பேர் கைது

சூதாட்டத்துக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சீன அரசு எடுத்து வருகிறது. சூதாட்டத்தில் ஈடுபட்ட 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த 1949 ஆம் ஆண்டு பதவிக்கு வந்ததும் சூதாட்டம், விபசாரம், போதைமருந்து ஆகியவற்றுக்குத் தடை விதித்தது. ஆனால், மாகாண அரசுகள் அலட்சியமாக இருந்ததால் சீன மக்கள் தற்போது சூதாட்டத்தில் சிக்கித் தவித்து வருகின்றனர். ஆண்டு தோறும் மூன்று லட்சத்து 26ஆயிரத்து 250 கோடி ரூபாய் சூதாட்டம் மூலமாக வெளிநாடுகளுக்கு செல்வதாக பீஜிங் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த லொத்தர் ஆய்வு நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதையடுத்து கடந்த நவம்பர் மாதம் முதல் சட்ட விரோதமாக சூதாட்டத்தில் ஈடுபடுபவர்கள மீது சீன அரசு கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. எல்லைப் பகுதியில உள்ள மாகாணங்களில் செயல்பட்டு வரும சூதாட்ட கிளப்களுக்கு மின் சாரம், தண்ணீர் சப்ளை துண்டிக்கப்பட்டது. சீனாவில் தென் மேற்கு பகுதியில் உள்ள யூனான் மாகாணத்தில் 80 சூதாட்ட கிளப்கள் முடக்கி வைக்கப்பட்டன. கடந்த நவம்பர் மாதம் முதல் இதுவரை சூதாட்டத்தில் ஈடுபட்டதாக 15 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (8)






## இங்கிலாந்து சென்று கல்விபயிலும் மாணவர்களுக்கான

# விஸா கட்டணத்தை உயர்த்தும் முடிவுக்கு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கடும் எதிர்ப்பு

லண்டன்,ஜன.30

இங்கிலாந்து சென்று கல்வி பயிலும் மாணவர்களுக்கான 'விஸா' கட்டணத்தை 3 மடங்காக உயர்த்த அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. ஆனால், அதற்கு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் நிறைய வெளிநாட்டு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைத்தான் இந்தப் பல்கலைக் கழகங்கள் பெரிய அளவில் நம்பியுள்ளன.

வெளிநாட்டு மாணவர்கள் மூலம் ஆண்டு தோறும் 196 ஆயிரம் கேடி ரூபா வருவாய் கிடைத்து வருகிறது.

ஒகஸ்போர்ட் பல்கலைக்கழகம் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இந்த நிலையில் வெளிநாட்டு மாணவர்களுக்கான 'விஸா' கட்டணத்தை 3 மடங்காக உயர்த்த அந்த நாட்டு அரசு முடிவுசெய்துள்ளது.

இப்போது விஸா கட்டணமாக 155 பவுண்ட்ஸ் வசூலிக்கப்படுகிறது. (கிட்டத்தட்ட 28 ஆயிரம் ரூபா) இதை 495 பவுண்ட்ஸாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கு பல்கலைக்கழக துணைவேந்தர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த முடிவு காரணமாக வெளிநாட்டு மாணவர்கள் வருவது குறைந்து போய்விடும் என்றும், சில பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டு விடலாம் என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

துணைவேந்தர்கள், தங்கள் அச்சத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்து பிரதமர் ரொனி பிளேயருக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

இதற்கிடையில் உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், "வெளிநாட்டு மாணவர்கள் இங்கிலாந்து வருவது ஊக்கப்படுத்தப்பட வேண்டிய ஒன்று தான்" விஸா கட்டணம் உயர்த்தப்படுவது அதற்குத் தடையாக இருக்காது. நம் நாட்டில் கிடைக்கும் சேவைகளைப் பயன்படுத்திக் கொள்பவர்கள் அதற்கான செலவைக் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று குறிப்பிட்டார். (8)

# கரையோரக் கிணறுகளில் தொடர்ந்தும் உவர்நீர்!

## பலமுறை இறைத்தும் பலனில்லை

வடமராட்சி,ஜன.30

சுனாமிப் பேரலை அனர்த்தத்துக்குள்ளான வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதியில் உள்ள கிணறுகளில் உள்ள தண்ணீர் உவர் நீராகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது.

பேரலை அனர்த்தத்துக்கு முன்னர் நன்னீ ராக இருந்த கிணறுகள் யாவும் உவர்நீராக மாறியுள்ளன. இக்கிணறுகள் பலமுறை குளோ றின் இடப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு இறைக் கப்பட்டபோதும் நீரின் தன்மை மாற்றமடையா மல் தொடர்ந்தும் உவர்நீராகவே இருந்து வருகிறது.

அனர்த்தம் நடைபெற்று ஒரு மாதத்துக்கு மேலாகியும் கிணற்று நீர் உவர் நீராகவே தொடர்ந்து இருப்பதால் மீளக்குடியேறுவோர் களுக்கு நன்னீர் விநியோகம் தொடர்ந்தும் இருக்கவேண்டும் என வலியுறுத்தப்படுகிறது. (த-173)

# வலி.கிழக்கு முன்பள்ளி மாணவர்களுக்கு லக்டோஜன் பால்மா; பெற்றோர் விசனம்!

அச்சுவேலி ஜன.30

வலி.கிழக்குப் பிரதேச சபையின்கீழ் இயங் கும் முன்பள்ளி மாணவர்களுக்கென லக்டோஜன் 01 பால்மாப் பைக்கற்றுக்கள் வழங்கப்படுவது தொடர்பாகபெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

லக்டோஜன் 01 பால்மா ஆறுமாதத்திற்கு உட்பட்ட பிள்ளைகளின் பாவனைக்கு உரியது எனப் பால்மாப் பெட்டியில் குறிப்பு எழுதப்பட் டுள்ள போதிலும் முன்பள்ளிகளில் கல்வி பயி லும் நான்கு, ஐந்து வயது மாணவர் களுக்கு லக்டோஜன் 01 பால்மா வழங்கப்படுவது குறித்துப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

வலி.கிழக்குப்பிரதேசசபையின் உப அலுவல கங்களான கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி ஆகிய ஐந்து பிரதேச சபை உப அலுவலகங்களின்கீழ் செயற்படும் பாலர் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்கு கணிசமான லக்டோஜன் 01 பால்மா பைக்கற் றுக்கள் வழங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (த-11)

# சுனாமியில் உயிரிழந்தோருக்கு திருமறைக் கலாமன்றம் அஞ்சலி

யாழ்ப்பாணம்,ஜன.30

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்த வர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வு யாழ்.திருமறைக் கலாமன்றத்தில் கடந்த புதன்கிழமை மாலை 7மணிக்கு இடம்பெற்றது.

நிகழ்வில் முதலில் இளவாலை திருமறைக் கலா மன்ற அங்கத்தவர்கள் கைகளில் தீபம் ஏந்தி பவனியாக அரங்கினை நோக்கிச் சென் றனர்.

தொடர்ந்து சுனாமி கடல் அனர்த்தத்தின் போது இறந்த உறவுகளுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி இடம்பெற்றது.

சுனாமி கடல் அனர்த்தத்தின்போது முல் லைத்தீவு மாவட்டத்தில் உயிர்தப்பிய அஜித் ராஜ் (வயது 13) என்னும் சிறுவனுடைய அனு பவ பகிர்வு இடம்பெற்றது.

இறந்தவர்களின் ஆன்மசாந்திக்கான பஜனை வழிபாடு இடம்பெற்றது. திருமறைக் கலாமன்ற இயக்குநர் மரியசேவியர் அடி களார் அஞ்சலி உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், இளவாலை, உரும்பிராய், திருமறைக்கலாமன்ற அங்கத் தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-190)

## சைக்கிள் திருட்டு முறியடிப்பு

சுதுமலை,ஜன.30

நீராவியடிப் பிள்ளையார் கோயிலடியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற துவிச் சக்கரவண்டித் திருட்டு முறியடிக்கப்பட்டது. திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இளைஞன் நையப்புடைக்கப்பட்டான்.

நேற்றுமாலை 5.45மணியளவில் நீராவி யடிப் பிள்ளையார் கோயிலுக்கு வந்த ஒருவ ரின் சைக்கிளின் பூட்டை உடைத்துத் திருட முற்பட்டபோதே இந்த இளைஞன் கையும் மெய்யுமாகப் பிடிக் கப்பட்டு ஆலயத்தில் நின்ற இளைஞர்க ளால் நையப்புடைக் கப்பட்ட பின்னர் பொலீ ஸரிடம் ஒப்படைக்கப் பட்டார். (த-12-ரி)

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மானிப்பாய் 'லியோ'கழகம் உதவி

மானிப்பாய்,ஜன.30

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு மானிப்பாய் லியோ கழகத்தினர் 20ஆயிரம் ரூபா பெறுமதியான உடுபுடைவை களையும் பால்மா வகைகளையும் வழங்கியுள்ளனர்.

இவர்கள் கடந்தவாரம் இந்தப் பொருள்களை சக்கோட்டை தேவாலயத்திலுள்ள நிவாரணப்பணிக்குழுவின் ஊடாகப் பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் லியோகழகத் தலைவர் தே.விஜயகுமார், செய லாளர் சு.சுகந்தராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி பொருள் களை வழங்கினர். (த-203-90)


### ஆசி வேண்டி வாழ்த்துகிறேன்



வட்டுக்கோட்டை அராலி மேற்குக் கோட்டைக்காடு நொச்சியம்பதி விநாயகர் திருக்கோயில் பிரதமகுரு பிரம்மஸ்ரீ

**சதாசிவக் குருக்கள் சிவசர்மா**

அவர்கள் மேற்படி ஆலயத்தில் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இறைபணி ஆற்றியமைக் காக மேற்படி ஆலய அறங்காவலர் சபையினரும் கிராம வாழ் மக்களும் இணைந்து அவரைக் கௌரவித்து பாராட்டுவிழா எடுப்பதை இட்டுப் பெருமிதம் அடைகிறேன். இன்று விழாக்காணும் விழா நாயகரது பணி மேன்மேலும் சிறப்பாகத் தொடரவும் அவர் நீண்ட ஆயுளுடனும் வாழ வும் எல்லாம்வல்ல ஸ்ரீ நொச்சியம்பதி விநாயகனைப் பிரார்த்திக் கின்றோம்.

*மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.*

விழா நாயகரின் அருளாசி வேண்டி நிற்கும்:
பிரம்மஸ்ரீ ந.பிரசாந்த சர்மா,
உடுக்கியவளை விநாயகர் கோயில்,
வட்டுக்கோட்டை.
(41464) (26-14-15)



### UNIT

கொழும்பு விலைக்கே யாழில்

கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட புதிய
Compaq PIII 550/733/800/1000MHz,
10/15 GBHard Disk, 128 MB SDR,CDROM,
Zip Drive & etc.(ஒரு வருட உதிரிபாக உத்தரவாதத்துடன்)
Rs. 27,000/- முதல்

PIV கணனிகள் DELL Monitor உடன்
எமது பிரத்தியேக 3 வருட உதிரிபாக உத்தரவாதத்துடன்
Rs. 49,900/- முதல்

Flash Memory (Kingston) - 3750/-
Aopen Combo DVD/CD + RW - 7400/-
Sony Combo DVD/CD + RW - 7600/-
Sony CD - Writter - 5100/-

மற்றும் சகல விதமான கணனி உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில்
மேற்குறிப்பிட்ட விலைகள் யாவும் கையிருப்பு உள்ளவரை மட்டுமே

Once step ahead

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
Universal Technology, Station Road, Chunnakam.


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஜன.30

வட பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலை யங்களின் இணைப்புக் குழு சுனாமி அலை களால் உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு பருத்தித்துறை பிரதான வீதியிலுள்ள ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளது. (8-202)

## சாவகச்சேரியில் விபத்து; ஒருவர் படுகாயம்

தென்மராட்சி,ஜன.30

சாவகச்சேரி பெரிய அரசடிச் சந்தியில் முச் சக்கசரவண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் மோட்டார் சைக்கிளில் வந்தவர் படுகாயமடைந்தார்.

கடந்த 24ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த அருந்தவராசா கேதீஸ்வரன் (வய்து 27) என் பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்த இவர், சாவகச்சேரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (த-203-117)

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன

தென்மராட்சி,ஜன.30

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த விளையாட்டுக் கழகங்களுக்குக் கடந்த 28ஆம் திகதி விளையாட்டு உபகரணங்கள் வழங் கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச செயலக மண்ட பத்தில் நிர்வாக அலுவலர் ச.வீரசிங்கம் தலை மையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாடாளு மன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொணடு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகர ணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப் பட்டன.

உசன் ஸ்ரீ முருகன் வி.க., வரணி செல்வா வி.க., மட்டுவில் வளர்மதி வி.க., நுணாவில் மேறகு பாரதி வி.க ஆகியவற்றுக்கு அனைத்து விளையாட்டு உபகரணங்களும் வழங்கப் பட்டன. (8-117)

## பிரதேச அபிவிருத்திக்கு காரைநகரில் குழு அமைப்பு

காரைநகர்,ஜன.30

சுவிஸ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள சுவிஸ காரை அபிவிருத்திச் சபையிடம் இருந்து நிதியினைப் பெற்று காரைநகர்ப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் உபகுழு ஒன்று காரை நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உபகுழு அமைப்பதற்கான பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயத் தில் சுவிஸ் நாட்டில் இருந்து வருகைதந்துள்ள சுவிஸ், காரை அபிவிருத்திச் சபைத் தலைவர் ந.சரவணப்பெருமாள் தலைமையில் நடை பெற்றது.

இதில் காரைநகர் உபகுழுவின் தலைவ ராக வே.குமாரசாமியும் செயலாளராக ஆதில்லை யம்பலவாணரும், பொருளாளராக த.லிங்கேஸ் வரனும் உப தலைவராக எஸ்.நடராசாவும் உப செயலாளராக ச.இராசநாயகமும் தெரிவுசெய் யப்பட்டுள்ளனர்.

இந்தச் சபையின் ஊடாகக் காரைநகர்ப் பிரதேசத்தின் கல்வி, சுகாதாரம், கலை, கலா சாரம் மற்றும் உள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக அதன் தலைவர் தெரி வித்துள்ளார். (த-73)

### 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 11 - 07 - 1923
மறைவு: 28 - 12 - 2004

ஆதி மயிலிட்டி

அமரர் **கந்தவனம் அம்பலவாணர்**

*எமது குடும்பத் தலைவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மறைவுச் செய்தி அறிந்து பின்னர் நேரில்வந்து அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் உதவிகள் செய்த அயலவர், நண்பர்கள், நோயுற்றவேளையில் மருத்துவ சிகிச்சையளித்து உதவிய வைத்திய உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள்.

இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனம் ஆகியவற்றில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*லவ் லேன், உடுவில்.* (41459) (24-14-15-26) - **குடும்பத்தினர்.**

### முதலாம் வருட நினைவலைகள்



தோற்றம்: 07 - 05 - 1927
மறைவு: 11 - 02 - 2004

**திருமதி கனகம்மா செல்லத்துரை**

திதி: பஞ்சமி (30.01.2005)

ஆண்டொன்று சென்றாலும்
ஈரவிழி காய மறுக்குதம்மா!
காத்திருந்து அரவணைத்த உன் கைகள்
காலமெல்லாம் எம்மைவிட்டுப் போனதேனோ?
நேற்று நீர் பேசிய வார்த்தைகள்
இன்னும் எம் காதில் ஒலிக்கிறதே!
மலர்ந்த உன் வதனச் சிரிப்பை
வாழ்நாளில் காணக் கிடைக்குமா?

*"செல்வா மாளிகை",*
*இல. 05, யாழ். வீதி,*
*யாழ்ப்பாணம்.* (41467) (24-14-15-26)

செ.மகாலிங்கம்,
செ.சிறிதேவராசலிங்கம்.

### மரண அறிவித்தல்

திருமதி

**தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை**



நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி தங்கச்சிப்பிள்ளை கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (சேதுகாவலர் மாஸ்டர், ஓய்வுபெற்ற ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் தனலட்சுமி அம்மா, பரமகுரு (உதவி வைத்திய அதிகாரி), யோகலட்சுமி, ஆனந்தராசா (உதவிப் பிராந்திய முகாமையாளர் - மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்), தவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிர மணியம் (ஓய்வுபெற்ற நீதிமன்றப் பதிவாளர்), குலதினி (ஆசிரியை, ஹம்ஷா முஸ்லிம் மகா வித்தியாலயம், கொழும்பு), மகாலிங்கம் (ஓய்வுபெற்ற பதிவு வைத்திய அதிகாரி), நாகேஸ்வரி, ஜலஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விஜயகுமார் (லண்டன்), ஜெயக்குமார், நிமலகுமார் (லண்டன்), விஜயரஜனி (ஆசிரியை, யா/சிறுப்பிட்டி அ.த.க.), நிரஜா (லண்டன்), தனுஜா, அனோஜா, நிருபா, நளினி (விரிவுரையாளர், கணிதப் புள்ளியியல் பிரிவு யாழ். பல்கலைக்கழகம்), வினோதன் (லண்டன்), யதீசன் (ஆசிரியர்), செந்தீரன் (பொறியியலாளர், கொழும்பு), கேதீரன், தர்சினி (லண்டன்), ரமணன் (லண்டன்), ஜெயரஞ்சினி (லண்டன்), மகாலட்சுமி (ஆசிரியை, யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை), பிரபாகரன் (லண்டன்), சுரேன் (பொறியியலாளர், திருகோணமலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவடினி (லண்டன்), திரிசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (31.01.2005) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூத வுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல. 88, குறுக்குத் தெரு,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (சி-40713) (24-14-15-26)

தகவல்:
க.ஆனந்தராசா (மகன்).

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837.

## சமூக மேம்பாட்டில் ஆசான்களின் பங்கு

புகழ்பெற்ற சுன்னாகம், கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி பரிசளிப்பு விழாவில், யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா தெரிவித்த கல்வித்துறை சார்ந்த கருத்துக்கள் இன்றைய மாணவ சமுதாயத்தின் அவலநிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவன.

மாணவர்களின் மோசமான நிலைக்கும், அந்த நிலைக்கு மாணவர்களைத் தள்ளிய சமுதாயப் போக்குக்கும் உள்ள காரண காரியத் தொடர்பை தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் நீதிபதி விக்னராஜா.

அளவிலாச் சுமை, மாணவர்களை கட்டுக்கடங்காமல் தறிகெட்டுப்போய் அவலத்தில் வீழ்த்தி விட்டதை புட்டுக்காட்டுகிறார் நீதிபதி.

"நமது காலத்தில் கல்லூரி அளித்த வாய்ப்புக்களை நன்கு பயன்படுத்த எமக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. போதிய நேர அவகாசம் இருந்தது. சுமை தெரியாமல் விளையாடியபடி கற்றோம். ஆனால், இன்று மாணவர் நிலைமை மாறிவிட்டது; மோசமாகிவிட்டது; கஷ்டமாகிவிட்டது. பாடத்திட்டத்துடன் மட்டுமே மாணவர் தங்களது பொழுதைக் கழிக்கின்றனர். பல்கலைக்கழகப் பிரவேசப் போட்டிப் பரீட்சைகள், வெட்டுப்புள்ளிகள் வருடாந்தம் அதிகரித்தல் போன்றவை காரணமாக மாணவரின் சுமை பலமடங்கு அதிகரித்துள்ளது. செய்தித் தாள்களைக் கூடப் படிக்க நேரமின்றி மாணவர்கள் கற்பதற்காகக் கல்வி நிலையங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றனர். கல்வி வர்த்தகமயமாக்கப்பட்டு தனியார் கல்வி நிறுவனங்கள் பெருகி உள்ளன.

"இந்தக் காரணங்களினால் கல்லூரி ஆசிரியர்களின் கட்டுப்பாட்டிற்கும், செல்வாக்கிற்கும் தூரமாகவே மாணவர்கள் சென்றுவிட்டனர். இதனால், மாணவர்களிடையே ஒழுக்கமின்மை அதிகரித்து வருகின்றது." - என்று வேதனையுடன் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

அவர் குறிப்பிடும் நிலைமை, அதன் விளைவு ஆகியவை அனைத்தும் உண்மை, இதுதான் மாணவ உலகின் இன்றைய யதார்த்த நிலை.

சமூகத்தின் தனி அலகான ஒவ்வொரு மனிதனினதும் உயர்வுக்கும், வாழ்வுக்கும் வழிகாட்டும் ஓர் ஒப்புயர்வற்ற முறைமையை நமது சமூகம் காலங்காலமாகக் கொண்டிருந்தது.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என்ற அந்த வழிகாட்டிகளின் முறைமைப் பட்டியல் இன்று பொய்த்துப் போகும் நிலைமை ஏற்பட்டிருப்பதுதான் இந்த அவலப் போக்குக்குக் காரணம்.

தாய், தந்தையராகிய பெற்றோருக்கு அடுத்து - தெய்வத்துக்கு மேலாக - குருவை மதிக்கும் பண்பு நமது சமூகத்தில் ஒட்டியிருந்தபோது, மனித வாழ்வுக்கு அவசியமான விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வாழ்வுப் போக்கும் சிறப்பாக அமைந்திருந்தது.

ஆனால், இன்று கல்வி, வர்த்தக விவகாரமாகி விட்டதால் அதைப் போதிக்கும் ஆசிரியனும் சமூக - வாழ்வியல் - வழிகாட்டி என்ற நிலைக்குப் பதிலாக வர்த்தக விற்பனையாளனாக மாணவர் சமூகத்தாலும், சமுதாயத்தாலும் நோக்கப்படும் - அடையாளப்படுத்தப்படும் - சூழ்நிலை உருவாகிவிட்டது.

கல்விப் போதனை என்ற மகத்துவ சேவையை வர்த்தக - வருமான - நோக்கோடு மட்டும் அணுகுகின்ற ஆசிரிய சமுதாயம் ஒன்று உருவாகியிருப்பதும் இன்றைய இந்த நிலைமைக்குக் காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது.

எது, எப்படியோ நமது அடுத்த தலைமுறைத் தலைவர்களை - நமது இன்றைய இளைய சமுதாயத்தை - வழிப்படுத்தி, நெறிப்படுத்துகின்ற பெரும் பொறுப்பிலிருந்து ஆசிரிய சமூகம் விலகிச் செல்லும் ஒரு மோசமான நிலைமை, நீதிபதி விக்னராஜா சுட்டிக்காட்டியிருப்பது போல உருவாகி வருகின்றது என்பது மிகப் பெரிய உண்மை.

வாழ்வுக்கான அறநெறிப் போக்கிலிருந்து சமூகம் பிறழ்ந்து விடாமல் பாதுகாப்பதற்கான சட்டமும் ஒழுங்கும் நீதிமன்றங்களும் தண்டனைகளும் இருக்கலாம். அவை தவறிழைத்தவர்களை அச்சுறுத்தியும் தண்டித்தும் கண்டித்தும் சமூகத்தைத் திருத்த வழிசெய்பவை.

ஆனால், தவறுசெய்ய விடாமலேயே இளம்சமூகத்தை ஒழுக்க நெறியின்பால் வழிப்படுத்தும் பொறுப்பும் கடமையும் ஆசிரிய சமூகத்துக்கே உரியவை.

ஒழுக்கம், நன்னடத்தை, பெறுமான முறைமைகள், பண்புடமை, ஒழுங்கான செயன்முறை - வரவு, சீரிய மனப்பான்மை, முதியோரைக் கனம் பண்ணல், இரக்க சிந்தனை, நீதியான தீர்மானம், நேர்மை, சமூக விழுமியங்களை மதித்தல், விட்டுக்கொடுத்தல், நடுவு நிலை நோக்கு போன்ற நற்பண்புகளை சமூகத்தில் விதைத்து, வளர்த்து சமுதாயத்தை நல்விருட்சமாக்கும் பெரும் பொறுப்பு ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்ததாகின்றது.

வேகமாக நகரும் - ஓடிக்கொண்டிருக்கும் - இந்த இயந்திர உலகில் ஆசிரிய சமூகத்தின் பங்கு, பணி அதற்கே உரிய வழிநடத்தலில் மேற்கொள்ளப்படாவிட்டால் முழுச் சமூகமுமே நேர்வழியிலிருந்து பிறழ்ந்து விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும். சம்பந்தப்பட்டோர் விரைந்து சிரத்தை எடுக்க வேண்டிய அவசர - அவசிய- அத்தியாவசிய - விவகாரம் இது. இந்த விடயத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமது சமூகப் பொறுப்பை மனதிற்கொண்டு செயற்பட ஆசிரியர்கள் முன்வரவேண்டும். அதனூடாகவே ஆசிரிய சேவையின் மகத்துவத்தைக் காப்பாற்றி உயர்த்த இயலும்.

## தமிழர் தாயகத்தில் பாதிப்புற்றோருக்கு ஜேர்மன் மக்களும் சேர்ந்து அஞ்சலி!

பேர்லின் ,ஜன.30

ஜேர்மன் நாட்டின் பேர்லின் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஜேர்மனிலுள்ள தமிழ் அமைப்புகளின் ஆதரவில் பெறப்பட்ட ஒரு தொகை நிதியினை, சுனாமியால் பாதிக்கப்பட்ட, தமிழ் மக்களுக்கென வழங்கியது.

தமிழர் தாயகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரம் கொடுக்கும் இந்த நிகழ்வு கடந்த 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஜேர்மனியிலுள்ள பேர்லின் மாநிலத்தில் நடைபெற்றது.

சுனாமி அனர்த்தத்தினால், உயிரிழந்தவர்களுக்கு, மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அஞ்சலி சுடர்களை சர்வ மதத்தினரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து. சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயர அனுபவங்கள் திரையில் காண்பிக்கப்பட் டன.

இந்த நிகழ்வைப் பார்த்த மக்கள் கண்ணீர்விட்டுக் கதறி அழுதனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரெஜி. கொழும்புப் பொறுப்பாளர் சந்திரன் ஆகியோர் தொலைபேசி ஊடாக சிறப்புரை நிகழ்த்தினர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கவென உடுப்புகள் மற்றும் மருந்துப் பொருள்களும், முல்லைத்தீவில் பாதிப்புற்று முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு உணவு வழங்குவதற்கான, ஒருதொகை பணமும் கொழும்பிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் அனுப்பிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பேர்லின் கலை கலாசாரப் பிரிவின் பிரதிநிதி , மதப்பெரியார்கள், ஜேர்மன் மக்கள் மற்றும் இங்கு வாழும் தமிழ் மக்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொண்டனர். (கு-204)

## 20ஆம் திகதிக்கு முன்னர் மீள்குடியமர்வு; மணற்காடு, பொற்பதிக் கிராமங்களில்!

யாழ்ப்பாணம்,ஜன.30

வடமராட்சி கிழக்கு. மணற்காடு பொற்பதிக் கிராமங்களில் அமைக்கப்பட்டு வரும் தற்காலிக குடியிருப்புக்களின் வேலைகள் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் முடிக்கப்பட்டு அங்கு மக்களை மீளக் குடியமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுனாமி ஆழிப் பேரலை அனர்த்தத்தினால் வடமராட்சிக் கரையோரப் பகுதி மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக நேற்றுக்காலை யாழ். அரச செயலகத்தில் அரச அதிபர் கே.கணேஷ், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் மற்றும் அனர்த்த நிவாரண செயலணிக் குழுவினர் ஆகியோர் கலந்துரையாடினர்.

சுனாமி ஆழிப்பேரலையினால் அழிந்து போன வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் பொற்பதிக் கிராமங்களில் வசித்த மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு அப்பகுதியில் 150 தற்காலிக குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இக்குடியிருப்புக்களின் சகல வேலைகளும் எதிர்வரும் 20ஆம் திகதிக்குள் முடிக்கப்பட்டு அந்த இடத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவது என இக்கலந்துரையாடலின்போது தீர்மானிக்கப்பட்டது.

இச்சந்திப்பில் கடற்புலிகளின் துணைத் தளபதி செழியன், அனர்த்த நிவாரண செயலணிக் குழுவின் இணைப்பாளர் சி.வி.கே.சிவஞானம், இயக்குநர் பாலையா மற்றும் யுன்.எச்.சி.ஆர்., போரூட், சி.எச்.ஏ. ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(கு-7)

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கு கொழும்பில் சத்திரசிகிச்சை

கொழும்பு.ஜன.30

இலங்கைக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புறுகொவ்டேயிற்கு கொழும்பு அப்பலோ மருத்துவமனையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடற்பகுதியில் ஏற்பட்ட கட்டிகளினால் உபாதைக்கு உள்ளான அவருக்குச் சத்திர சிகிச்சையின்போது வயிற்றிலிருந்து இரண்டு கட்டிகள் அகற்றப்பட்டன. அவருக்கான சத்திரசிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அவர் மேலதிகமாக சிகிச்சைகளைப் பெறவேண்டியுள்ளதால் இலங்கையிலேயே அவர் தொடர்ந்தும் தங்கியிருந்து சிகிச்சைகளைப் பெறுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் இலங்கை கண்காணிப்புக்குழுவின் தலைவராக 2002 மார்ச் மாதம் தொடக்கம் 2003 மார்ச் வரை முதல் தடவையாகவும் பின்னர் 2004 ஜனவரி 31 ஆம் திகதி தொடக்கம் தற்போது வரையிலும் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை. இவர் சிகிச்சை பெற்று வரும் காரணத்தால் பதில் தலைவராக இலங்கை கண்காணிப்புக்குழுவின் பிரதம அலுவலர் வோங் விங்கெல் கடமையாற்றவுள்ளார். (கு-202)

## வடமராட்சிக் கடற்கரைகளில் படையினர் மீண்டும் காவலரண்

வடமராட்சி,ஜன.30

தொண்டைமானாறு தொடக்கம் கற்கோவளம் வரையிலான வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் படையினரால் பல புதிய காவலரண்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தினால் இப்பகுதிகளில் இருந்த படையினரின் காவலரண்கள் அள்ளுண்டு போயின. இதனையடுத்து இப்பகுதிகளில் காவலரண்களை அமைக்கும் பணியில் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளதோடு அப்பணியை நிறைவுசெய்துள்ளனர்.

அள்ளுண்ட காவலரண்களுக்குப் பதிலாகப் புதிய காவலரண்களைப் படையினர் முன்னரைவிடப் பெரிதாக அமைத்திருப்பதுடன் அவற்றைவிட வேறு புதிய காவலரண்களையும் அமைத்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட காவலரண்கள் மிக உறுதியாக அமைக்கப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (கு-173)

## முல்லைத்தீவில் உணர்வுபூர்வமாக 'எச்சத்திலும் எழுவோம்' நிகழ்வு!

முல்லைத்தீவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களை ஆற்றுப்படுத்தும் 'எச்சத்திலிருந்து எழுவோம்' அஞ்சலி நிகழ்வு முல்லைத்தீவு நகரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் உபசெயலாளர் இ.செல்வநாயகம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ந.குருகுலராசா ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் கேணல் ஜெயம் ஏற்றினார்.

தொடர்ந்து காலை 8.50 மணிக்கு கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சுனாமி அனர்த்தத்தால் செயலிழந்த மணிக்கூடு அதிபர் திருமதி பாலராசாவால் மீள இயக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை கேணல் சூசை ஏற்றினார். தொடர்ந்து சுனாமியால் உயிரிழந்த 3 ஆயிரம் மக்களின் நினைவாக 3 ஆயிரம் சுட்டி விளக்குகள் ஏற்றப்பட்டன.

அதனைத் தொடர்ந்து 230 மாணவர்களின் நினைவாக 230 சுடர்கள் ஏற்றப்பட்டன. மறைந்த ஆசிரியர்களின் நினைவாகப் பொதுச் சுடரினை அதிபர் க.திருக்குமரனும் பெயர் தெரியாது மறைந்த மாணவர்களுக்கான சுடரினை அருட் சகோதரி கில்டாவும் ஏற்றினர். மதவழிபாடுகளைத் தொடர்ந்து ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(கு-202-353)

## புதுக்குடியிருப்பு வீதியில் கோரவிபத்து; மூவர் பலி!

### டிப்பரும் மோ.சைக்கிளும் எதிரெதிரே மோதின

புதுக்குடியிருப்பு.ஜன.30

டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் எதிரெதிர் மோதியதில் மூவர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

இந்தச் சம்பவம் அண்மையில் முள்ளியவளை - புதுக்குடியிருப்பு வீதியில் கள்ளியடி என்ற இடத்திற்குச் சமீபமாக இடம்பெற்றது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த செம்பியன்பற்றைச் சேர்ந்த தங்கராசா பாஸ்கரன் (வயது - 38) அவரது மகள் பா.தனுசா (வயது - 14) அவரது உறவினரான வற்றாப்பளையைச் சேர்ந்த ஜீவனா (வயது 14) ஆகியோர் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை புதுக்குடியிருப்புத் தமிழீழ காவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு-202-353)

## துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம்.ஜன.30

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

துர்க்காபுர மகளிர் இல்லத் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் பிரதம விருந்தினராகவும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

(கு-204)

### நாளை

தை 18
31.01.2005
திங்கட்கிழமை
திதி : ஷஷ்டி
முன் இரவு 10.01 வரை
நட்சத்திரம் : அத்தம்
காலை 10.03 வரை
சுபநேரம் : 12.36 - 2.06
ராகுகாலம் : 8.06 - 9.36
(யாவும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தான் வாழ்வதற்கே உலகம் என்று எண்ணுபவர்கள் உலகம் வாழ்வதற்கும் உதவமுனைய வேண்டும். -பெனிக்லாஸ்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், மீன்தொட்டிகள், லவ்பேட்ஸ், யாவா, பிஞ்சஸ், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், கொக கொடைல் குருவிகளும், கூடுகளும் மற்றும் அடுக்குச் செவ்வரத்தை, றோசாக் கன்றுகள், குறோட்டன், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (41246)

P-IV (2.4Ghz) கறுப்புநிற கணனி விற்பனைக்குண்டு. 128 MB RAM, 30GB HDD, HP writer, UPS உம் இணைந்தது. தொடர்பு: T.P.: 0776133317. (41381)

பாவித்த நல்ல நிலையிலுள்ள CD 200 மோட்டார் சைக்கிள் (யப்பான் - சிவப்பு) கனடாவிலிருந்து தருவிக்கப்பட்ட Baby cot, குளிர்சாதனப் பெட்டியின் மோட்டர் (சிசில்), புதிய சுருதிப்பெட்டி என்பன உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: 122, சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி தெற்கு. T.P.No: 222 6366. (41420)

பாவித்த S - லோன் பைப்புகள், பனைமரங்கள், மரத்தீராந்திகள், கூரைத் தகரங்கள், தூக்குத் தராசுகள் மற்றும் மைனர், ஒக்ஸ்போட், வோக்ஸ்வெகன் கார்களின் பவர்கள், வீல்கப், கியர்பொக்ஸ் நிக்கல் பொருள்கள், காப்பெட் ஆகியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (41448)

பாவித்த Sony 2183 TV, டெக், றேடியோ, Fan, சுவர்மணிக்கூடு, ஆங்கில தட்டச்சு இயந்திரம், சிங்கர் தையல் மெசின், மலோடிக்கா, மெத்தைகள், சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள், தாச்சி, டினர்செட், எவர்சில்வர் பாத்திரங்கள், சாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (41447)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், இராசேந்திரா வீதியில் இல.10 இல் அமைந்துள்ள வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பத்மநாதன் மாலா, 91, டேவிற வதி, யாழ்ப்பாணம். T.P.: 0776 969467. (41353)

## காணி, வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை, சுவாமியார் வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடும், 6¼ பரப்புக் காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.22, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (41372)

## வீடு, காணி தேவை

கோயில் வீதி, சுண்டுக்குளி, கச்சேரியை அண்டிய பகுதிகளில் வீடு அல்லது காணி தேவை. விற்பனை செய்ய விரும்புவர்கள் தொடர்புக்கு 0777 072415 (தரகர் தேவையில்லை) (41399)

## காணி விற்பனைக்கு

புலோப்பளை, பச்சிலைப்பள்ளியில் இருக்கும் 28 ஏக்கர் 15 பரப்பு விஸ்தீரணம் கொண்ட 'நாச்சிமா சோலைக்காடு' அல்லது 'சோலை' என்ற தென்னந்தோட்டக் காணி விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். K.சிவராஜா, "ராஜாவாசா", 151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873, மகா - 0776203974. (41442)

## வீடு, காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ஊரெழு பிள்ளையார் கோயில் முன்பாக கடையுடன் கூடிய வீடு 5 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: ஐ.வைகுந்தன், பலாலி வீதி, ஊரெழு பிள்ளையார் கோயிலடி, ஊரெழு. (41443)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம. (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41411)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைககுண்டு. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். புறொயிலர், கல்பேட் கூடிய நிறையில் தினமும் சுத்தஞ்செய்து கொடுக்கப்படும். தொடர்பு: S.சிவகுமாரன், கல்வியங்காட்டுச் சந்தி, பெற்றோல் செற் அருகிலுள்ள புலவனார் வீதி. (41452)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டுமுறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 31.01.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, R.S.K. பாம் - உடுவில், சுனாகம், ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (40990)

## வயற்காணி/வீடு வளவும் விற்பனைக்கு

வடமராட்சி, துன்னாலை தெற்கு, ஓந்திராயடி, 20 பரப்பு வயற்காணியும் நெல்லியடி கிழக்கு, புதுத்தோட்டம், குருக்கட்டில் 2 பரப்புக் காணியில் கல்வீடும் வளவும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: மு.பாக்கியநாதன், பாக்கியமலர், வதிரி, கரவெட்டி. T.P.: 0777 594040. (41368)

## மாடி வீடு வாடகைக்கு

"சிவனடி", இல.141, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 0776016257. (41342)

## திருமண சேவை

எம்மிடம் உள்நாடு, வெளிநாடு (பிரஜா உரிமை உள்ள) மணமகன், மணமகளின் ஜாதகங்கள் உண்டு. போட்டோ, ஜாதகத்துடன தொடர்புகொள்ளவும். M.ரவீந்திரன், துர்க்கை அம்மன் வீதி, சாவகச்சேரி. (41287)

## மணமகள் தேவை

கொழும்பில் தொழில்நுட்ப முகாமையாளராகப் பணிபுரியும் தீய பழக்கமற்ற, யாழ்.இந்து கௌரவ மணமகனுக்கு ஓரளவு படித்த, நற்பண்புள்ள தூய சைவபோசன மணமகள் தேவை. (வயது 30 - 34 இடைப்பட்டவர் விரும்பத்தக்கது.) தொழில், சீதனம் முக்கியமல்ல. தொடர்பு: Fax: 0112599412. (40661)

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, பூசம், 2ஆம் பாதம், செவ்வாய் தோஷமற்ற, அரச உயர் பதவி வகிக்கும், 41 வயதுடைய மணமகனுக்கு 35 வயதிற்குட்பட்ட தொழில் பார்க்கும் குடும்பப் பாங்கான பண்புகொண்ட பெண்ணைத் தாயார் தேடுகின்றார். தரகர் தேவையில்லை. தொடர்பு: T.P.: 077 6673078. (41035)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமுள்ள, 50 பாவமுடைய, லண்டனில் பணியாற்றும் இஞ்ஜினியருக்கு 5'3" அங்குலத்திற்குக் குறைவான அழகிய பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2488 மே/பா, உதயன். (41446)

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதியில் 4000 சதுரஅடி கொண்டதும் நிலத்தின்கீழ் அறைகளுடன் சுற்றுமதில்களுடன் கூடியதுமான 6பரப்புக் காணியில் மாடி வீடு உடனடியாக (மேலதிக கட்டடத்துடனும்) வற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.சிவராஜா, "ராஜவாசா", இல.151, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2873 (சிவராஜா), 0776203974 (மகா). (41383)

## தவறிவிட்டது

சுதுமலையைச் சேர்ந்த திருமதி சிவமணி குணநாயகம் என்பவருடைய ஒரு தொகைப் பணம் கடந்த 26-01-2005இல் பஸ் பயணத்தின்போது இணுவிலுக்கும் மல்லாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க.குணநாயகம், மலைவேம்படி ஒழுங்கை, சுதுமலை கிழக்கு, மானிப்பாய் என்ற முகவரியில் ஒப்படைத்துதவுமாறு வேண்டுகின்றோம். T.P.: 0776183059. தகுந்த சன்மானம் வழங்கப்படும். (41445)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Pure Bred Dobbermann Pincher (Issabella, Blue ஆகிய நிறங்களில்) மற்றும் Great Dane நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (41412)

## வாடகைக்கு

கோண்டாவிலில் 2பேர் அடங்கிய சிறிய குடும்பத்திற்கு (Annex) ஒரு பகுதி மட்டும் வாடகைக்குண்டு. 45 - 55 வயதுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. முழுவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 2487, மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (41444)

## கட்டாக்காலிகளால் பயிர்கள் சேதம்

வரணி,ஜன.30

மாசேரி, மாவில், கரவில் வண்ணன் வயல் வெளிகளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேசங்களில் இரவுநேரங்களில் பன்றிகளினால் பயிர் அழிக்கப்பட்டு பெரும்சேதம ஏற்படுத்தப்படுகின்றது.

அதேவேளை, கால்நடை உரிமையாளர்கள் தமது கால் நடைகளைக் கட்டிவளர்க்காமல் விடுவதனால் பயிர்கள் மேலும் பெரும் அழிவுக்கு உட்படுகின்றன.

இவ்வாறான கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய தரப்பினர்கள் எவரும் அககறை காட்டாமல் இருக்கின்றனர் என்று விசனம் தெரிவிக்கப்பட்டது. (த-170)

## மீனவர்களை சிவாஜிலிங்கம் சந்தித்துப் பேச்சு

சாங்கானை,ஜன.30

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பாண்டுவெட்டை, திருவடிநிலை பகுதி மீனவர்களை யாழ்மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் நேரில் சென்று சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது மீனவர்களின் பாதிப்புக்கள் தொடர்பாகக் கேட்டறிந்தது டன், அப்பகுதி முன் பள்ளிக்கும் விஜயம் செய்து பார்வையிட்டார். இவ்வருட நிதி ஒதுக்கீட்டில் அநதமுன பள்ளிக்கு ஒருதொகுதி நிதி தருவதாக அவர் அங்கு தெரிவித்துள்ளார். (த-202-29)

## விவரங்களைப் பதியலாம்

நவாலி,ஜன.30

சண்டிலிப்பாயில் இயங்கும் தொழில்நுட்பக்கல்லூரியில் மின்னிணைப்பு, மேசன, தச்சுவேலை என்பவற்றைப் பழக விரும்புபவர்கள் தங்கள் பெயர் விவரங்களை உடன் பதிவுசெய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்பவர்கள் 16வயதிற்கு மேற்பட்டவராயும் 8ஆம் தரத்துக்குமேல் பயின்றவராகவும் இருத்தல் வேண்டும்.

இவர்களுக்கான பயிற்சி நெறி 6மாத காலத்திற்கு நடைபெறும் பயிற்சிக் காலத்தின்போது 450ரூபா ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் வழங்கப்படுமென்றும் பயிற்சிக்கான பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுன் தெரிவித்துள்ளார். (த-100)

## புதிய வீடு விற்பனைக்கு

யாழ்.நகரில் நல்லூர் ஆலயச் சூழலில் (செட்டித் தெரு) 1¾ பரப்புக் காணியில் அமைந்த சுற்றுமதில், நன்னீர்க்கிணறு ஆகியவற்றுடன் நிர்மாணிப்பு வேலைகள பூர்த்தியடைந்த புத்தம் புதிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: இல.9, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

T.P.: 0776354237

பார்வையிடும் நேரம் காலை 7மணி முதல் மாலை 6மணி வரை. (41352)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலைமிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். தொடர்பு

BIO TEC INTERNATIONAL

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907. (40347)

## ஒத்துமாறல்

புதுக்குடியிருப்பு ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் யாழ். அல்லது வலிகாமம் ஆசிரியராக அல்லது அலுவலகப் பணிக்கு ஒத்துமாற விரும்புகின்றார்.

தொடர்பு: 0214590651, 0776165742. (41449)(46)

## கூல் லெமனேற்றிங்

- எம்மிடம் உங்களது புத்தக அட்டைகளை கூல் லெமனேசன் செய்துகொள்ளலாம்
- எம்மிடம் நினைவு மலர் அட்டைகளைப் பெற்றுக் கொள்வோருக்கு அதனை கூல்லெமனேசன் செய்துகொள்ள ரூபா 1/- மட்டுமே!
- பலவர்ண நினைவு மலர் அட்டைகள் ரூபா 3.50 இலிருந்து.....

அனைத்திற்கும்சிறந்த இடம்

சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்

183,பலாலி வீதி, கோண்டாவில். T.P.: 2226722

24 மணிநேரமும் தொடர்புகளிற்கு: 0773068982.

(41382)(42-14-15-26)

## கடை வாடகைக்கு

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியில் அமைந்துள்ள புதிதாக அமைக்கப்பட்ட 3 கடைகள் வாடகைக்கு விடப்படும்.

குறிப்பு: அரச, வர்த்தக நிறுவனங்களுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு: தில்லையம்பதி மோட்டோர்ஸ்

236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No.: 222 5710

(24-19) (41234)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்

### வேலாயுதம் தருமராசா

(நயினாதீவு, துணுக்காய்)

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். 31-12-2004இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக்கிரிகைகள் 28-01-2005வெள்ளிக்கிழமை பாலியாற்றில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்தியம் இன்று (30-01-2005) ஞாயிற்றுக்கிழமை காலை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து நிகழும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்தும், எமதுதுயரைப் பகிர்ந்தும், உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

639, கொக்காவில் வீதி, துணுக்காய்.

தகவல்: மனைவி, மகன், சகோதரர்கள்.

(41436)(26-14-15)

## யா/இராமநாதன் மகா வித்தியாலயம் உசன், மிருசுவில்

### ஆரம்பப் பிரிவு கட்டடத் திறப்புவிழா

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம் ஈலிங் லண்டன் தர்மகர்த்தா சபையால், மேற்படி பாடசாலையில் யுத்தத்தால் அழிந்துபோய் இருந்த கட்டடத்தை நான்கு வகுப்பறைகள் கொண்ட ஆரம்பப் பிரிவுக் கட்டடமாக மீளமைத்துப் புதிய மலசலகூடமும் இரும்பு, மரத்தளபாடங்களும் சிறுவர் விளையாட்டு இடமும் அமைத்துக்கொடுக்கப்பட்டு உள்ளது. இக்கட்டடம் இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படும்.

தர்மகர்த்தா சபையும், நிர்வாக சபையும்,

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம், லண்டன்.

(41432) (42-14-15-26)

# அமெரிக்காவின் ஆசீர்வாதம் இருந்தால் மட்டுமே ஐ.நா.செயலாளர் பதவி இலங்கைக்குக் கிட்டும்

ஐ.நாவின் செயலாளர் நாயகம் பதவிக்கு இலங்கையும் தாய்லாந்தும் தங்கள் தரப்பில் ஒருவரைப் போட்டியிட வைப்பதற்கு ஏற்கனவே முடிவுசெய்து பரப்புரைகளையும் ஆரம்பித்துள என.

ஐ.நா.செயலாளர் பதவிக்கு ஆசிய நாடுகளிலிருந்து ஒருவர் தெரிவுசெய்யப்படலாம் அல்லது தெரிவு செய்யப்படவேண்டும் என்ற கருத்து முனைப்பு பெற்றிருப்பதனாலேயே இந்த இரு நாடுகளும் தங்கள் வேட்பாளர்கள் பற்றிய விருபத்தை வெளியிட்டுள்ளன.

பர்மாவைச் சேர்ந்த ஊதாண்ட ஐநா.செயலாளராகப் பதவி வகித்ததற்குப் பின்னர் கடந்த 34ஆண்டு காலமாக ஆஸியாவிலிருந்து எவரும் இந்த மதிப்பார்ந்த பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. எனவே, இப்பதவிக்குப் புதிய காது, ஆனால் அமெரிக்காவின் கருத்து இதில் முககியத்துவம் பெறும் என்பது திண்ணம்' என்றார்.

ஆக, இந்த இரண்டு நாடுகள் மட்டும்தான் தங்கள் வேட்பாளர்களை முன்நிறுத்தப் போகினறனவென்றால், பரப்புரைக் காலத்தில் ஏற்படும் சாதகபாதக நிலைகளைப் பொறுத்து வேட்பாளாகள் வாபஸ் பெறப்படலாம்.

கொணடிருக்கிறார்கள். அந்த அரசின் உயர்நிலை அதிகாரிகள் மட்டுமன்றி அமைச்சர்கள் மட்டப் பிரதிநிதிகளும் வந்துபோய் இருக்கிறார்கள். சுனாமிக் கடல் அனர்த்தத்தின்போது பெருமளவில் பணம் கொடுப்பதாக அறிவித்திருப்பதுடன், தமது படைகளில் கணிசமானபேர் அடங்கிய பிரிவுகளையும் இங்கு அனுப்பி நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தினார்கள்.

படுவதும் ஆங்காங்கே வெளிப்படத்தான் செய்கின்றது.

இநத அடிப்படையில்தான் சிம்பாபவே அதிபர் முகாபே தமது நாட்டில் வெள்ளையர்களுக்கு எதிரான சட்ட திட்டங்களை நிறைவேற்றுவதல் ஆர்வமாய் இருக்கிறார் என்றும் கூறப்படுகின்றது.

## ஈராக்கில் இன்று தேர்தல்

இவை அமெரிக்காவின் ஆதரவை எந்த அளவில் சம்பாதித்துக் கொள்ளப்போகின்றன என்பது ஒருபுறமிருக்க, ஏற்கனவே உள்ள

### ஈரானில் ஆயுதக் கொள்வனவு

இவை இவ்வாறு இருக்க, கடல் அனர்த்த காலத்திலேயே ஈரானில் இருந்து ஆயுதக் கொளவனவுக்கான பேரத்தை இலங்கை அரசு பேசி முடித்திருந்தது. இலங்கை உயர்மட்டக் குழுக்களும் அந்த நாட்டுக்குச் சென்று வந்துள்ளன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சில மாதங்களுக்குமுன் ஈரான் சென்று அந்நாட்டுத் தலைவாகளைச் சந்தித்தபோது ஆயுதப் பேரத்தை ஆரம்பித்துவைத்துவிட்டு வந்தார்.

நிச்சயமாக ஈரானிடம் இலங்கை ஆயுதம் வாங்குவதை அவ்வளவு சின்னவிடயமாக அமெரிக்கா கருதாது.

ஈரானிய முன்னாள் ஷா பதவியிலிருந்து வீழ்த்தப்பட்ட காலத்திலிருந்து அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் உறவுகள் சரியில்லை. போதாக்குறைக்கு அணு ஆயுதத் தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதாகச் சமீபகாலமாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி வருகின்றது. அமெரிக்கா எதிர்பார்பபதைப்போல் ஈரான் தனது அந்தக் கொள்கையைக் கைவிடாவிட்டால் அந்நாட்டின் மீது சர்வதேசப் பொருளாதாரத் தடையை ஏற்படுத்த அமெரிக்கா ஐ.நா.பாதுகாப்புச் சபையில் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றவும்கூடும்.

இந்த நிலையில் அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் அங்கிருந்து ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய இலங்கை முயல்வது அமெரிக்காவுக்குப் பிடிக்கும் என்று சொல்லமுடியாது. மேலும், இலங்கையில் கேந்திரமான ஓரிடத்தில் தளம் அமைத்துக்கொள்ள அது கொண்டிருக்கும் ஆவலை இலங்கை இதுவரைக்கும் பூர்த்திசெய்ததாகவும் இல்லை. கடைசியாகக் கிடைத்த ஒரு செய்தியின்படி பேதுருதாலகாலவில் ஒரு கண்காணிப்பு நிலையம் அமைக்கும் விருப்பத்தையும் இலங்கை நிராகரித்துவிட்டதாகத் தெரிகின்றது.

இந்தநிலையில், உலக ஸ்தாபனம் ஒன்றின் தலைமைப் பதவிக்கு இலங்கை கண் வைத்திருப்பது வெற்றியாக முடியுமா இல்லை 'புஸ்' வாணம் தானா பொறுத்திருந்து பார்க்கலாம்.

### இன ஒதுக்கல் நீடிக்கிறதா?

தென்னாபிரிக்காவிலிருந்து இனவெறி



இந்தியாவின் 56ஆவது குடியரசு தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ள வந்திருந்த பூட்டான் மன்னர் ஜிக்மே சிங்யே வாஞ்சுக் (நடுவில்), இந்திய பிரதமர் மன்மோகன் சிங் (படத்தில் இடது), குடியரசுத் தலைவர் ஏ.பீ.கே.அப்துல்கலாம் (படத்தில் வலது) காணப்படுகின்றனர். குடியரசு தின அணிவகுப்பை மூவரும் கண்டு களித்தபோது.....

## உலக வலம்

மேனா

தென் றொடீஷியா என்றழைக்கப்பட்ட இந்நாடு முன்னர் வெள்ளையர் ஆட்சியில் இருந்தது. இயான் ஸ்மித் என்பவர் இந்நாட்டின் பிரதமராகவிருந்து கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராகச் செயற்பட்டார். அதே நாட்டில் போராட்டங்கள் மூலம் பதவிக்கு வந்த கறுப்பு இனத்தவர்கள் இன்று வெள்ளையருக்கு எதிராகச் செயற்படுகிறார்கள் என்று கூறப்படுகின்றது.

### வேலையாளை சிங்கத்துக்கு இரையாக்கினார்

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்கள் தமது நிறுவனங்களில் கறுப்பர்களை எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதை விளக்கும் வகையில் அணமையில் ஒரு சம்பவம் வெளிவந்துள்ளது.

தனது பண்ணையில் வேலைசெய்த ஒரு கறுப்பு இனத் தொழிலாளியை வெள்ளையரான பணணைக்காரர் உயிருடன் சிங்கங்களுக்கு இரையாகப் போட்டிருக்கிறார் என்பது தென்னாபிரிக்க நீதிமன்றம் ஒன்றில் தெரியவந்துள்ளது.

வெள்ளையர் ஆட்சி மாறி கறுப்பினத்தவரின் ஆட்சி நடைபெறும் இந்தக்காலத்திலேயே வெள்ளையர்கள் இவ்வளவு கொடூரமாக நடந்திருப்பார்களானால் வெள்ளையர் ஆட்சி நடந்தபோது எவ்வாறு நடத்தியிருப்பார்கள் என்பதற்கு இச்சம்பவத்தை ஓர் உதாரணமாக விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

மார்க் ஸ்கொட் குறோஸ்லி (வயது 37) என்ற வெள்ளையர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டபோது தம் மீதான சகல குற்றச்சாட்டுக்களையும் அவர் மறுத்தார். தனது முன்னாள் ஊழியரான 41 வயது நெல்சன் சிஸ்லே என்பவரை அடித்து சிங்கங்கள் அடைக்கப்பட்டிருந்த கூண்டுக்குள் தூக்கிப் போட்டார் என்று இவர் மீது குற்றஞ்

ஒருவர் தெரிவுசெய்யப்படுவதற்கான இறுதி முடிவு எடுக்கப்படும்போது ஆசியாவின் சார்பில் தங்கள் பிரதிநிதி தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று இந்நாடுகள் ஆசை கொள்வதில் ஆச்சரியமெதுவுமில்லை.

இதுவரைகாலமும் இப்பதவியை அலங்கரித்துள்ள பிரமுகர்களும் அவர்களின் நாடுகளும் பின்வருமாறு:-

நோர்வே - ட்றிகில் லீ (1946-1956), சுவீடன் - டாக் ஹமர்ஷோல்ட் (1953-1961), பர்மா- ஊதாண்ட் (1961-1971), ஆஸ்ட்ரியா - குர்ட் வாலதீம் (1972-1981), பெரு - ஜாவியர் பெரெஸ் டி குயிலெர் (1982-1991), எகிப்து- பவுட்ரஸ் பவுட்ரெஸ் - காலி (1992-1996), தற்பொழுது கானாவைச் சேர்நத கோபி அனான் 1997ஆம் ஆண்டு முதல் செயலாளர் நாயகமாகப் பதவி வகித்து வருகின்றார்.

### அனானுக்குக் பிறகு

தற்போது கோபி அனான் தமது இராண்டாம் கட்ட 5ஆண்டு பதவிக்காலத்தில் இருந்து வருகின்றார். 2006 டிசெம்பரில் அவரது பதவிக்காலம் முற்றுப்பெறவிருக்கின்றது. இப்பதவிக்காலம முடிவுறுவதற்கு ஏறத்தாழ 23 மாதங்கள் இருக்கும் நிலையில் இப்பொழுதே தமது வேட்பாளர்களைச் சிலநாடுகள் வெளியிட்டிருப்பதற்குக் காரணம் ஏனைய நாடுகளின் கரிசனையை இநத வேட்பாளர்கள் பக்கம் திருப்புவதும், இப் பதவிக்கு ஏனைய நாடுகள் கண்வைக்காமலிருப்பதை உறுதிசெய்து கொள்வதுமாக இருக்கலாம்.

எதுவானாலும், ஐநா. செயற்பாடுகளில் முககியமாகச் செயலாளர் நாயகம் போன்ற பதவிகளில் வீற்றிருக்கப்போகின்றவர்களுக்கு அவர்களை முன்னிறுத்தும் நாடுகளுக்கும் பாதுகாப்புச்சபையில் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நாடுகளின் ஆதரவு தேவைப்படலாம். அதுவும் அமெரிக்காவின் ஆதரவு மிகவும் முக்கியமாகக் கருதப்படும். ஐ.நா.செயற்பாடுகளில் அமெரிக்கா அதிக செல்வாக்கைப் பிரயோகிக்கும் நாடாக இருந்து வருவது ஒரு புறமிருக்க, இதன ஆதரவுபெற்ற கூட்டாளி நாடுகளின் ஆதரவும் தேவைப்படுகின்றது. மேலும் இப்போதுள்ள நிலையில பிரிட்டனும், ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்பார்கள் என்றும எதிர்பார்க்க முடியாது. இந்தப் பின்புலத்தில் ஐநா.செயலர் நாயகம பதவிக்குப் போட்டியிட முன்னறிவித்தல் கொடுத்துள்ள நாடுகளின் தகைமைகள் எவ்வாறு இருக்கும் என்று சற்று அலசிப்பார்க்கலாம்.

ஜெனிவாவில் நிலைகொண்டுள்ள ஐநா. கணகாணிப்பு அமைப்பைச் சேர்ந்த ஹில்லெல் நியுவெர் என்பவர் கூறியுள்ள கருத்து வருமாறு:-

'இப்பதவிக்கான உண்மையான பிரசாரம் 2005ஆம் ஆண்டின் இறுதிக்குமுன் தொடங்

களநிலைமைகளையும் நாம் கவனிக்க வேணடும்.

### தாய்லாந்தின் வேட்பாளர்

தாய்லாந்து அரசின் சார்பில் போட்டியில் நிற்கப்போகின்றவர் அந்நாட்டின் வெளியுறவு அமைச்சர் சுரக்கியாட் சதிராதாய் என்பவர்.

# ஆபிரிக்காவில் ஆட்சி மாறினாலும் வெள்ளையர் கொடுமை நீங்கவில்லை

இவர் சர்வதேச மட்டத்தில் அதிக பிரபல்யம் பெற்றவராகவோ ஐ.நா.செயற்பாடுகளில் பரிட்சயம் உள்ளவராகவோ விமர்சகர்களால் கருதப்படவில்லை. மேலும் தாய்லாந்தின் சீனசார்பு செயற்பாடுகளில் அமெரிக்கா ஏற்கனவே அதிருப்தி கொண்டிருப்பதாகவும் தெரிகின்றது.

அமெரிக்க அதிகாரி ஒருவர் இதுபற்றிக் கருத்து வெளியிட்டபோது, 'தாய்லாந்து சீனாவின் கைப்பொம்மையாகச் செயற்படுவதாக அமெரிக்க அரசு கருகிறது' - என்றார்.

ஆப்கானிஸ்தானுக்கும் ஈராக்கிற்கும் தாய்லாந்துப் படைகளை அனுப்பியிருந்த போதிலும் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுவதாக அது காட்டிக்கொள்ள விரும்பவில்லை.

ஐ.நா.நியமங்களுக்கு அமைவாகவே படைகளை அனுப்பியதாகவும் மனிதாபிமான நடவடிக்கைகளுக்காகவே தமது படைகள் அங்கு சென்றுள்ளதாகவும் அறிவித்திருந்தது.

இந்தப் பின்னணியில் இலங்கையின் சார்பில் போட்டிக்கு அறிவிக்கப்பட்டிருப்பவருக்கு அமெரிக்காவின் ஆதரவு எந்தவகையில் அமையும் என்று சொல்லமுடியாவிட்டாலும் களநிலைமைகளைச் சற்றுக் கவனிக்கலாம்.

இலங்கை அரசின் சமாதான செயலகத்தின் பணிப்பாளராகவிருக்கும் ஜயந்த தனபால ஏற்கனவே ஐ.நாவில் பொறுப்பான பதவியிலிருந்து அனுபவம் பெற்றவர். ஐ.நாவின் ஆயுதக் குறைப்புக் குழுவின் இளநிலைச் செயலாளர் நாயகமாக அவர் பதவி வகுத்துள்ளார். எனவே, ஐ.நா.செயற்பாடுகள் பற்றி அவர் நான்கு பரிட்சயமுள்ளவர் என்பதுடன், அங்கத்துவ நாடுகள் மத்தியிலும் அறிமுகமானவர் என்றாலும், இலங்கை அரசு எந்த அளவுக்கு அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றுள்ளது என்பதையும் பார்க்கவேண்டும்.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் அமெரிக்கர்கள் பெரிய அளவில் அக்கறை

ஆட்சி கவிழ்க்கப்பட்டு கறுப்பு இனத்தவர்கள் ஆட்சியில் இருந்த போதிலும் வெள்ளையர்

சாட்டப்பட்டிருந்தது. சிங்கக் கூட்டில் சிஸ்லேயின் மண்டையோடு, விலா எலும்புகள், முது



கறுப்பின பண்ணை வேலையாளை சிங்கங்களுக்கு இரையாக்கிய வெள்ளையர் மார்க் ஸ்கொட் குரொஸ்லி (நடுவில்) தனது மற்ற இரு வேலையாள்களுடன் காணப்படுகிறார்.

கள் நடத்தும் நிறுவனங்களிலும், விவசாயத் தோட்டங்களிலும் நிறத் துவேஷம் மட்டுமன்றி கறுப்பு இனத்தவர்கள் மிருகத்தனமாக நடத்தப

குத்தணடெலும்புகள் மற்றும் ஒரு விரல் மட்டுமே எஞ்சியிருந்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலை. மாணவருக்கு உதவித்தொகை

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவித்தொகை வழங்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக அண்மையில் பொத்துவில், திருக்கோவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள்கள் 66 பேருக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உதவித்தொகையை வழங்கியுள்ளது. தொடர்ந்து இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (10-202)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 1940 - 02 - 03



உதிர்வு 2005 - 01 - 01

அமரர் ஆ.சச்சிதானந்தம்

(ஓய்வுபெற்ற மக்கள் வங்கி முகாமையாளர், ஏறாவூர்)

மாதம் ஒன்று மறைந்ததே அண்ணா!
உங்கள் நினைவுகள்தான் மறையவில்லை
புனிதராய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தீரோ?
புவனமதில் நாங்கள் உங்கள் நினைவுடனே
ஆத்மசாந்திக்காய் இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கட்டுவன், தெல்லிப்பழை. (41416) (24-18-15)

சகோதரி சு.பராசக்தி,
சகோதரன் ஆ.முருகையா.

## வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 6 பரப்புக் காணி, வீடு வளவு பூஞ்சோலையுடன் நல்ல சுற்றாடலில் 4 அறை, சாப்பாட்டு அறை, 2 ஹோல், அற்றாச் பாத்ரூம், ரொயிலட், கொமட் ரொயிலட், சேவன்ட் ரொயிலட் பாத்ரூம், கிணறு, தண்ணீர்த் தாங்கியுடன் வீட்டுத் தளபாடங்களுடன் உடன் விற்பனைக்கு உண்டு.

தொலைபேசி இலக்கம் : 0776629005

(C/40610) (42-24-19)

சகல வயதினர்களுக்கும்!
ஞாபகசக்தி குறைவாக உள்ளதா? இதோ பாவியுங்கள்!

### தாரணி பிரமி மூலிகைப் பாணி (சிரப்)

நன்மைகள் :

கிரகிக்கும் சக்தி அதிகரிக்கும், புத்திக்கூர்மையை அளிக்கும், சருடிநோயைக் குணப்படுத்தும், குரல்வளத்தை மேம்படுத்தும், காக்கை வலிப்பை நீக்கும், உளநோய் குணமாகும்.
பாலுடன் சேர்த்தும் அருந்தலாம்.

இது ஓர் அரச ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பாகும். யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பார்மஸிகளிலும் கிடைக்கும்.

Srilanka Ayurvedic Corporation
P.O. Box:20, Nawinna, Makaragama.




ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சத்திரத்துச் சந்திக்கு அருகில்) T.P.021 222 2567


## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிக் கருத்தரங்கு

**காலம்:** 01.02.2005 செவ்வாய்க்கிழமை

**நேரம்:** காலை 10.00 மணிமுதல் பி.ப. 3.00 மணிவரை.

**இடம் :** யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்.

கனடா வேதாந்த ஞானமன்றத்தினால் நடத்தப்படும் மேற்படி கருத்தரங்கில் பயிற்சிபெற விரும்பும் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் அறநெறிப் பாடசாலைகளில் கற்பிக்க விரும்பும் புதிய ஆசிரியர்களும் இதில் பங்குபற்றலாம். மதியபோசனம் வழங்கப்படும்.

அருளாசியுரை வழங்குபவர் :
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்
(2ஆவது குருமஹா சந்நிதானம் - நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.)

சிறப்பு விருந்தினர் : திரு.ஆர்வலன்
(தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர், யாழ். மாவட்டம்)

விரிவுரையாற்றுவோர்:
★ செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன்
(ஆலோசகர், கனடா வேதாந்த ஞானமன்றம், இலங்கைக் கிளை - உப அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)
★ சைவப்புலவர் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன் (J.P.)
ஆலோசகர், கனடா வேதாந்தஞானமன்றம். இலங்கைக் கிளை
(உதவிக் கல்விப்பணிப்பாளர்- தமிழ் B.A.,DGDE இணைப்பாளர் கலாசாரப் பகுதி யாழ்.கல்வித் திணைக்களம்)
★ சிவநெறிக்கலாநிதி இராசையா ஸ்ரீதரன்
(தலைவர்.கனடா வேதாந்த ஞானமன்றம். இலங்கைக் கிளை)
★ கலாநிதி அடியார் விபுலானந்தா
(ஆன்மீகத் தலைவர் கனடா வேதாந்த ஞானமன்றம் தர்மகர்த்தா கனடா பெரிய சிவன் ஆலயம்)

☛ மேற்படி நிகழ்வில் பங்குகொள்ளும் ஆசிரியர்களுக்கு "அறநெறிக் குரு" என்னும் கௌரவப்பட்டம் வழங்கி சான்றிதழும் கொடுக்கப்படும்.
★ புதிய அறநெறிப்பாடசாலை ஆரம்பிக்க விரும்புவோர் தொடர்புகொள்ளவும். சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
இ. ஸ்ரீதரன். கனடா வேதாந்த ஞானமன்றம் இலங்கைக் கிளை,
291. நாவலர் வீதி. ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (41394) (43-19-24)
T.P.:2190


# நினைவுகள்



இராசதுரை மகேஸ்வரி
பிறப்பு : 1922-12-11
இறப்பு: 2002-02-17



பாலரஞ்சினி இராசதுரை
பிறப்பு : 1946-09-09
இறப்பு: 2004-12-30



பாலரஜினி இராசதுரை
பிறப்பு : 1949-09-27
இறப்பு: 2004-08-26

தோற்றம் மறைந்தாலும் துயரமோ மறையவில்லை
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
ஆயிரம் உறவுண்டு – ஆனால்
'அக்கா' என்ற சொல்லுக்கு
யாருமில்லை
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மானிப்பாய் வடக்கு. மானிப்பாய். அங்கிள், அன்ரி, தம்பி, தங்கா.

(C-40688)


## இலங்கை பத்திரிக்கை ஆசிரியர்கள் சங்கம்

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

### இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல் 2004.

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடன் இணைந்து, கீழ்க்குறிப்பிட்டுள்ள விருதுகளை வழங்குவதற்காக, 2004 ம் ஆண்டில் எழுத்து ஊடகத் துறையில் செயலாற்றியவர்களிடமிருந்து விண்ணப்ப பதிவுகளைக் கோர விரும்புகிறது.

ஆண்டு தோறும் நிகழும் இவ்விருது வழங்கலின் பிரதான நோக்கமானது, குறிப்பிட்ட ஆண்டில் மிகச் சிறப்பெய்தியவர்களுக்கு விருதுகள் வழங்கி அவர்களின் தொழிற் பண்பை அங்கீகரித்தலாகும்.

இலங்கையில் மும்மொழிகளிலும், வெளியிடப்படும் செய்தித் தாள்கள் சார்ந்த சுதந்திரமான எழுத்தாளர் உட்பட பத்திரிகையாளர்கள் இத்திட்டத்தில் பங்கு பற்றலாம்.

பத்திரிகையாசிரியர் சங்கத்தினதும், பத்திரிகை ஸ்தாபனத்தினதும் சார்பில் ஊடகங்களின் சுதந்திரமான நடுவர்கள் குழுவொன்று விருது பெறுபவர்களைத் தெரிவு செய்யும்.

2005 ம் ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெறும் விழாவொன்றில் பின்வரும் பெருமைமிக்க விருதுகள் வழங்கப்படும்.

### விருது வகைகள்

மனுச் செய்தல் மூலம் :

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேவின் டி சில்வா விருது.
- ஆண்டின் பிரத்தியேகச் செய்தியறிக்கைக்கான (ஸ்கூப்) டி.பி.தனபாலா விருது.
- ஆண்டின் சிறந்த சுற்றாடல் அறிக்கை நிருபர் விருது.
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி நிருபருக்கான வீரசேகரி விருது.
- ஆண்டின் சிறந்த விளையாட்டறிக்கை நிரபருக்கான விருது.
- ஆண்டின் (30 வயதுக்குட்பட்ட) இளைய நிருபருக்கான டென்சில் பீரிஸ் விருது.
- ஆண்டின் சிறந்த வடிவிலமைந்த பத்திரிகை.
- விசேட சந்தர்ப்ப சூழ்நிலைகளில் செய்தி தொகுத்த நிருபருக்கான
- பேராசிரியர் க.கைலாசபதி விருது. ஆண்டின் சிறந்த பத்திரிகையாளர் - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் வர்த்தக பத்திரிகையாளர் விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறப்புக் கட்டுரையாளருக்கான உபாலி விஜயவர்த்தன விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த கேலிச் சித்திரகாரர் விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான (கொலமிஸ்ற்) பி.ஏ.சிறிவர்த்தன விருது - சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

அமைப்பாளர்களின் நியமனம் மூலம் :

- தனித்திறன் பெற்றவர்களினதும் பொது மக்களினதும் பாராட்டுதலைப் பெற்றமைக்கான டி.ஆர்.விஜயரட்னா விருது.
- இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரத்தைத் தற்காத்தமைக்கான சேபால குணசேனா விருது.
- நீண்ட கால மற்றும் சிறந்த சேவைக்கான விருதுகள்.
- விருதுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட ஊடகவியலாளர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அல்லது செய்தி அறிக்கைகள் பதியப்படலாம். அவ்வாறு செய்யுமிடத்து அவர்கள் யாவரினது பெயர்களும் பதியப்படல் வேண்டும்.

**விண்ணப்ப பதிவுகள் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும் அல்லது முற்பகல் 10 மணியிலிருந்து பிற்பகல் 6 மணி வரை நேரில் கொடுக்கப்படலாம்.**

முகவரி: தலைவர்,
பத்திரிகையியல் விருது வழங்கல் குழு,
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், மே.:.பா
65.:.5 வாட் பிளேஸ், கொழும்பு 07.

விண்ணப்பத்தின் விடயங்கள் 2004 ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதியிலிருந்து மார்கழி மாதம் 31ம் திகதிக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும்.

### விண்ணப்பப் பதிவுகள் முடிவுறும் திகதி 2005-02-15

நடைமுறை: விண்ணப்பப் படிவங்களையும், விதிமுறைகள் அடங்கிய வெளியீட்டையும், கொழும்பு 07, 65.:.5 வாட் பிளேஸ், முகவரியிலுள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு : குமாரி வெலிவத்த, இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், தொலைபேசி : 5353635

*Journalism Awards 2004*

EXCELLENCE IN JOURNALISM AWARDS 2004

# போரழிவு என்ற செயற்கைச் சுனாமிகள் பல கண்ட எமக்கு மற்றோர் அழிவைத் தந்த ஆழிப்பேரலை

மனவெளியில் தொடராய் அலைமோதிய வினாவிது. இக்கட்டுரையை எழுதுவதா? விடுவதா? பல தடவைகள் யோசித்தபின் இதை எழுத ஆரம்பிக்கின்றேன்.

ஆற்றுப்படுத்தல் (Counciling) என்ற பதம் சமகாலத்தில் பத்திரிகைகளில் வரும் ஒரு தலைப்பு. அதாவது, கொடூரக் காட்சிகளைக் கண்டும் உடன் பிறப்புக்களை கொடிய நிகழ்வுகளில் இழந்தும், பிள்ளைகளைக் கட்டி அணைத்தபடி உயிர் துறந்த பெற்றோர்களின் நெஞ்சுருகும் நிலைகண்டும்... என நீண்டு கொண்டே போகும் துன்பத்தின் எல்லைக்குச் சென்றுவிட்ட எம் மக்களை இச் சிறிய கட்டுரை மேலும் அல்லலுறச் செய்யாது என்ற நம்பிக்கையிலேயே இதனை ஆரம்பிக்கின்றேன்.

## இழப்புக்களை அதிகரித்த சுனாமி கடல் அனர்த்தம்

சுனாமியின்போது நடந்த நிகழ்வுகள் உயிர் தப்பிய ஒவ்வொருவரிற்கும் ஒரு சரித்திரம், வரலாறு, மறுபிறப்பு. இப்பொழுது நாம் தென்னிலங்கை முதல் வடஇலங்கை வரை கண்டும், கேட்டும், அனுபவித்துவரும் நிஜங்கள். போர்க்காலச் சூழலில் வாழ்ந்தோரிற்கும் அதன் கொடுமைகளிற்கும் முகம் கொடுத்தோரிற்கும் ஒன்றும் புதிதல்ல என்பதே இங்கே மனம் கொள்ளப்பட வேண்டியதாகும். உண்மையில் போர்க்காலச் சூழலில் உயிர் உடைமைகளை இழந்த மக்களின் இழப்புக்களை அண்மைய நிகழ்வு மேலும் அதிகரித்துள்ளது.

உதாரணத்திற்கு சிறுவர்களிற்கு வெள்ளை என்றால் பால் என்போம். நீலம் என்றால் வானம் என்கிறோம். இறைவன் என்றால் ஆலயம் என்கிறோம். இவை அவர்களின் மனங்களில் பதிந்துள்ளது போன்று யுத்தத்தில் தம் இரத்த உறவுகளைத் துடிக்கத்துடிக்க இழந்தவர்களுக்கும், சிறுகச்சிறுகச் சேமித்த தம் உடைமைகள் கணப்பொழுதில் இடம்தெரியாது போன காட்சிகளைக் கண்டவர்களுக்கும், அந்தப் பீதி சமாதான உடன்படிக்கையின் மூன்றாம் ஆண் டிலும் அகலாமல் பசுமரத்தாணிபோல் பதிந் துள்ளது என்பதே நிதர்சனம். இதற்கு குமு தினி படுகொலையைச் சொல்லவா? நாகர் கோயில் பாடசாலை மீது குண்டுவீசி பச்சிளங் குழந்தைகளின் உயிர்குடித்ததைச் சொல் லவா? வல்வைப்படுகொலைகளைச் சொல்ல வதா?---- என நீளும் பட்டியல்.

பிணக்குவியல் வடபகுதிக்கு ஒன்றும் புதிதல்ல. தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்கள் ஒன்றும் விசித்திரமல்ல. கடற்றொழிலாளரின் படகுகளும், உபகரணங்களும் எரித்து நாசமாக்கப்பட்டவை ஏனையோர் அறியாததல்ல. இருந்த வடுவே இல்லாது அழித்தொழிக்கப்பட்ட ஆலயங்கள், வீடுகள், கிராமங்கள் வடக்கிற்குப் புதிய பதிவேடுகள் அல்ல.

## திட்டமிட்டபேரழிவு

ஆளும் வர்க்கத்தினாலும், ஆக்கிரமிப்புக்காரர்களாலும் செயற்கையாக வேண்டுமென்றே திட்டமிட்டுச் செய்யப்பட்ட பேரழிவுகளை, குறிப்பாக வடமராட்சி மக்கள் 1987 ஒபரேசன் லிபரேசன் காலத்திற்கு முன்பிருந்தே அனுபவித்து வருகின்றனர். ஒரு தடவையா... இரு தடவையா... பல தடைவையா.. என எண்ணும் தரமற்ற பல காலகட்டங்களில் சொந்த மண்ணை விட்டு வெளியேறி, உறவுகளைப் பிரிந்து வாழ்ந்த காலங்கள் பல. இது எம்வாழ்க்கையில் காலங்காலமான (அன்றாட) நிகழ்வுகள் ஆகிவிட்டன.

இங்கே பெரிய சத்தம் கேட்டுவிட்டால் அங்கே 'கிபீர்' வந்துவிட்டாது. சகடை குண்டு போடுகிறது. பலாலியில் இருந்து ஷெல் கிளம்பிவிட்டது எனக்கூறித்தான் எம்மக்களிற்குப் பழக்கம்.

**வல்லை ஆதிகோவிலடியை சொந்த மண்ணாகக் கொண்ட கட்டுரையாளர் தனது எண்ணக் குமுறல்களையும் சிந்தனைகளையும் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.**

கடற்பக்கமாகச் சத்தம் கேட்டால் அதோ 'நேவி அடிக்கிறான். கரைக்கு வந்துவிட்டான். ஆமியை இறக்குகிறான்' என்பார்கள்; பதற்றத்துடன் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு ஓடுவார்கள்.

இது வடபகுதி முதல் முல்லைத்தீவு, திருமலை ஈறாக கரையோரப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பட்டு அனுபவித்த துயர, துன்பங்கள். அடிமனங்களில் ஆழப்பதிந்த வடுக்கள்.

## எதிர்பாராத பேரழிவு

26.12.2004 இல் ஏற்பட்ட கடற்கோள் சுனாமியினால் இழப்புக்கள் பல மடங்காகின. வல்வை ஆதிகோவிலடியிலிருந்து முல்லை மாவட்டம் வரை நேரடியாகப் பாதிக்கப்பட்ட சகல மக்களினதும் கலந்துரையாடலின் ஊடாகவும், அவர்கள் கூறிய கதைகளிலிருந்து கீழ்வருவனவற்றை நாம் அறியமுடிகின்றது.

★ "கடற்பக்கத்திலிருந்து பாரிய வெடிச் சத்தங்கள் கேட்டதும் கடல் சண்டை நடக்குது. இனிக் கரைக்கும் ஷெல் அடிப்பாங்கள். பொம்பரும் வரும். எல்லாரும் விழுந்துபடுங்கோ. இவ்வாறு கடற்கரையில் படுத்து கடலால் காவு கொள்ளப்பட்டோர் பலர்."

★ "பாரிய சத்தம் கேட்டமையால் பிள்ளைகளைக் கொண்டு ஓடமுடியாத பெற்றோர் கதவுகளை இறுகப்பூட்டி வீட்டினுள் இருந்து உயிர் பிரிந்தோர் சிலர்."

★ "பரவலாகக் கேட்ட சத்தத்தினால் ஆமி புகுந்துவிட்டான் என எண்ணி கடற்பக்கம் ஓடிச்சென்று பலியானோர் பலர்."

★ "மணற்காடு போன்ற பிரதேசங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவத்தின் முட்கம் பிவேலியினால் அக்காவலரணுக்குள் சிக்குண்டு தம்மை மீட்டுக்கொள்ள முடியாது இறந்தவர்கள் ஏராளம். இதில் தம் கூந்தல் சிக்குண்டு மீளமுடி -யாது இறந்த பெண்கள் ஏராளம்."

தேசியத் தலைவர் 17.01.2005 இல் புத்திஜீவிகளுடனான ஆலோசனைக் கூட்டத்தில் கூறியதுபோல, கடந்த காலத்தில் சிறிலங்கா அரச படைகளின் நடவடிக்கைகளால் எமது மக்கள் சொந்தங்களையும், சொத்துக்களையும் இழந்தும் இடம்பெயர்ந்தும் விசேடமாக சில கிராமங்களே தரைமட்டமாக்கப்பட்டமை (உதாரணமாக 1987 இல் வல்லை ஆதிகோயிலடிக் கிராமம் தரைமட்டமாக்கப்பட்டமை) இப்போதைய இயற்கை அனர்த்தத்தைவிட மோசமானது. இவை யாவும் ஏனைய நாடுகளோ அன்றி தென்னிலங்கை மக்களோ அறியாமல் மூடிமறைக்கப்பட்டன.

நமது நாட்டைப் பொறுத்தவரை வடபகுதி சிறியதும் பெரியதுமான பல செயற்கைச் சுனாமிகளைக் கண்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து பழக்கப்பட்டு மீண்டும் இயல்பு வாழ்வினை அரச இயந்திரங்களின் துணையின்றி ஆரம்பிக்க அந்த வல்லமையை எமக்குத் தந்த அரசிற்கு நாம் ஒரு வகையில் நன்றிக் கடன் பட்டவர்களே.

தற்பொழுது தமிழ் மக்களிடம் எழும் சந்தேகமும் கேள்வியும், இனிவரும் காலங்களில் நாம் சிறிலங்கா அரசின் நிவாரணங்களையும் புதிய கட்டுமானப் பணிகளையும் நம்பியிருக்காது நம்மை நாமே புலம்பெயர்ந்த எமது உறவுகளின் உதவியுடன் மீளக்கட்டியெழுப்ப ஆயத்தமாக வேண்டுமா? அன்றி சிறிலங்கா அரசை நம்பி மோசம் போவதா? என்பதே.

## ஆரோக்கியமான அறிகுறி

உதவி வழங்கும் பணக்கார நாடுகள் தமது 'சுனாமி' உதவிகளைத் தமிழ் பேசும் மக்களிற்கும் உரிய விகிதத்தில் சென்றடைய வேண்டுமென சிறிலங்கா அரசுக்கு நிர்பந்தங்களையும், நிபந்தனைகளையும் வேண்டுகோளாக்கிக் கொண்டிருக்கின்றன எனப் பத்திரிகைகள் வாயிலாக அறிகின்றோம். இது ஓர் ஆரோக்கியமான அறிகுறி. பின்னணி எதுவாக இருந்தாலும் போர்க்கால அனர்த்தங்களுக்கு நடந்த இருட்டடிப்புப் போலல்லாது, உலகளாவிய ரீதியில் ஒரு கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.


ஆண்டாண்டு காலமாகப் பேரினவாத அரசுகளுடன் பல உடன்படிக்கைகளைச் செய்வதும் பின் அவை செயலிழப்பதும் சர்வசாதாரணமான நிகழ்வுகளே "நம்பநட நம்பிநடவாதே" என்பது முதுமொழி. எனவே, நாம் பட்டறிந்த அனுபவங்கள் மூலம் இத்தடவையும் சிறிலங்கா அரசு எம்மை ஏமாற்றாமல் கண்காணிப்பது மனங்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில், சிறிலங்கா அரசு வழமைபோல அரைகுறை நிவாரணங்களை வழங்கிவிட்டு நீண்டதொரு பட்டியலை உலகிற்குக் காட்டவும் முனையலாம்.

**ஆதிகோயிலடி ஜெயம்**

எது எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள 'சுனாமி நிவாரணத்திற்கான உத்தேசக் கட்டமைப்பு' தமிழ் பேசும் மக்களின் திருப்திக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படுமாயின் அது சிறிலங்கா அரசின் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையில் மீண்டும் ஓர் ஒளிக்கீற்றாகவும் அமையலாம். இதுவே நாட்டின் புரையோடிப்போன இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடித்தளமாகவும் ஆகலாம். இது ஆகவேண்டுமென மீண்டுமொரு நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போமாக.

சுனாமி அனர்த்தக் காட்சிகள்







தேசியத் தலைவரின் சொந்த ஊரான வல்வெட்டித்துறை ஆதிகோயிலடியை 1987 இல் சிறிலங்காப் படையினர் குண்டுவீசியும் புல்டோசர் மூலம் தரைமட்டமாக்கியும் அழித்தபோது எடுக்கப்பட்ட காட்சிகள் இவை.

## கலைவாணி

கல்வி நிறுவனம்
கோப்பாய்
ENGLISH MEDIUM
தரம் 6,7,8.
ஆரம்பம்:01.02.2005 பிற்பகல் 3.45
(சி-40675)

## நுண்கலைக்கழக மாணவர்களுக்கான பரீட்சைகள்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைக்கழக மாணவர்களுக்கான மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 8ஆம் திகதியும், இரண்டாம் வருட அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதியும் ஆரம்பமாகவுள்ளன. மாணவர்கள் பரீட்சை நேர அட்டவணையை யாழ்.பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையிலும், இராமநாதன் நுண் கலைக் கழக விளம்பரப் பலகையிலும் பார்வையிடலாம் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (8-202)

## திருமண கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் [அலங்காரத்துடன்]
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22.சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

T.P 077-3086939,
0777-246117,
077-6018467. (41414)(11-15-21)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு மலிவு விற்பனை

பாடசாலை மாணவர்களுக்கான சகல விதமான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

Kit காட் 400 ரூபா காட் 390 ரூபாவாகவும் 1000 ரூபா காட் 970 ரூபாவாகவும் (வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்) மற்றும் ஆசிரியர் அன்பழகனின் தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி நூல் புத்தக விலை 280 ரூபா கழிவு விலையில் 250 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளலாம். மற்றும் கட்டுரைப் புத்தகங்களும் பெற்றுக் கொள்ளலாம்.

**செந்தூர் புத்தக நிலையம்**
பஸ்நிலையம், சாவகச்சேரி.
(சி-40696) (21-11-15)

## உடனடியாக தேவை

ரைப் செற்றிங் தெரிந்தவர்கள், மிசின் மைண்டர் 02.02.2005 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.


சைவப்பிரகாச அச்சு இயந்திரசாலை
(யாழ். இந்து. சந்தி),
450, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(41423)

## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணி வகைகள், கவுஸ் கோட் துணி வகைகள், சுடிதார், புடைவை வகைகள், முகூர்த்தப் புடைவைகள், லேடீஸ் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண்கள் ஆகியன விற்பனைக்குண்டு. உடன் தைத்துக்கொடுக்கப்படும்.

**பபு கொமினிக்கேஷன்**
30, வளாக வீதி, திருநெல்வேலி.
(41037)

## பாராட்டிக் கௌரவித்தல்



அராலி மேற்கு வட்டுக்கோட்டை நொச்சியம்பதி விநாயகர் ஆலயத்தில் ஐம்பது வருடகாலம் அர்ச்சித்தும் பூஜித்தும் அரும்பணியாற்றிய ஆயிரம் பிறைகண்ட அந்தண சீலர்

**பிரம்மஸ்ரீ ச.சிவசர்மா**

அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தில் நடைபெறும்.

ஐயா அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ
அன்புடன் வாழ்த்துபவர்கள்:
(41424) **ஆலய பரிபாலன சபையினர்.** (42-21-11-15)

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சுபமங்களகரமான தாரண வருடம் தைத்திங்கள் 18ஆம் நாள் (31-01-2005) திங்கட்கிழமை முற்பகல் 09.48 மணி தொடக்கம் 10.36 மணி வரையுள்ள மீன லக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

எமது ஏக புதல்வன்
திருநிறை செல்வன்
**லோகேஸ்வரன்**
அவர்களுக்கும்



எமது சிரேஷ்ட புதல்வி
திருநிறை செல்வி
**சுதர்ஜினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் வண்ணார்பண்ணை நாச்சிமார் தேவஸ்தானத்தில் திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து, மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்துசிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்கள் நல்வரவை நாடும்:


திருமதி கு.ஆனந்தன் குடும்பத்தினர்,
நாச்சிமார் கோயில் வீதி,
நவாலி வடக்கு, (41435)
மானிப்பாய். (26-11-15-21)

திரு.திருமதி ஜீவரட்ணம் இந்திராணி
இல.9, கேசாவில்பிள்ளையார் கோயிலடி,
வண்ணார்பண்ணை.

(இருவீட்டார் அழைப்பு)

## யாழ்ப்பாணத்தில் புதிய அறிமுகம் (KIDS COMPUTER)

சிறுவர்கள் இலகுவாக ஆங்கிலத்தைக் கற்பதற்கான கணனிகளை அறிமுகப்படுத்து[கின்றனர்] JAFFNA CELLULAR தொலைபேசி நிறுவனத்தினர்.





**For your beloved "Kids"**



VERSE

24 ACTIVITIES

• Say the Letter • Write the Letter • Press the correct Letter • Where is the Letter • Say the Number • Write the Number • Press the correct number • Where is the Number • Play Notes • Play different Instrument • Follow and play Melody • Play Melodies • Car Racing • Drawing • Pin Ball • Memory Testing • River Crossing • Speed SKI • Hit and Match Factory

Rs. 3,500/=

English Learner

ACTIVITIES 20
Learn & Play

• Lets Learn Letters
• Lets Learn some Words
• Lets Learn Numbers
• Lets Play Melodies
• Lets Play Games
• Hit and Match Factory



Rs. 2,500/=

சகலவிதமான கையடக்கத் தொலைபேசிகளைத் திருத்துவதற்கும், உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

**PROMOTION AT**
**JAFFNA CELLULAR**
No. 151, 1/4,
Power House Rd,
Jaffna.
Tel: 0777 738888

**JAFFNA CELLULAR**
151-1/4, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (விமாகி மேல் மாடி)



டயலொக் ஜீ.எஸ்.எம். நிறுவன ஆதரவுடன் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு மருதங்கேணி மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள உள நல மேம்பாடு குறித்த கலந்துரையாடல் அண்மையில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் டயலொக் ஜீ.எஸ்.எம். நிறுவனப் பொது முகாமையாளர் மோதிலாலுடன் உளவள நிபுணர் அருட்தந்தை எஸ்.டேமியன் உரையாடுவதையும், உளவளப் பேராசிரியர் தயா.சோமசுந்தரம், வைத்திய கலாநிதி சிவயோகன், வைத்திய கலாநிதி உமாகரன் ஆகியோர் உளநல மேம்பாட்டுத்திட்டம் குறித்துக் கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம். சாந்திகம் உளவளத்துணை நிலைய ஆலோசகர்களும் அருகில் காணப்படுகின்றனர். (8)

## மானிப்பாய் இந்துவில் இரத்ததானம்

யாழ்ப்பாணம்,ஜன.30

சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து 31 ஆம் நாள் நினைவாக கடந்த 26 ஆம் திகதி மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இரத்ததான நிகழ்வு இடம் பெற்றது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருடன் இணைந்து மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பெரும்பாலானோர் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு இரத்ததானம் செய்துள்ளனர்.(த-203)

## ஆனைக்கோட்டையில் அறுவடை ஆரம்பம்

நவாலி,ஜன.30

ஆனைக்கோட்டை, கல்லுண்டாய்பகுதி வயல்களில் நெல் அறுவடை செய்யும் வேலைகள் விவசாயிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இப்பகுதி வயல்களில் இரவு வேளையில் கட்டாக்காலி மாடுகள் புகுந்து விளைந்த நெற் கதிர்களை நாசப்படுத்தி வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (த-100)

### சுனாமிப் பேரலையால் சாவற்கட்டுப் பகுதியில்

# பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு வழங்கவென வந்த நிவாரணம் திடீரென நிறுத்தப்பட்டது

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட சாவற்கட்டு கிராமத்தைச் சேர்ந்த 750 மீனவக் குடும்பங்களுக்கு வழங்குவதற்கென மானிப்பாய் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணம் திடீர் அறிவிப்பினால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது பற்றி சாவற்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத் தலைவர் எஸ்.பொன்னம்பலம் தெரிவிக்கையில், சுனாமி பேரலை ஏற்பட்டதைத தொடர்ந்து மக்கள் கடலுணவு உண்பதை நிறுத்திக் கொண்டனர். இதனால் சாவற்கட்டு மீனவர்களால் பிடிக்கப்படும் மீன், இறால், கணவாய், நண்டு போன்ற கடல் உணவுகளைச் சந்தைப் படுத்த முடியாமலுள்ளது.

இதன் காரணமாக இத் தொழிலில் ஈடுபட்டிருந்த 750 குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு கோரி கடற்றொழிலாளர் சங்கம் மூலம் யாழ். அரச அதிபர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், கடற்புலிகளின் அரசியல் பிரிவு ஆகியோருக்கு மகஜர்களை கையளித்து நிலைமையை எடுத்துக் கூறினோம்.

இதனை மனிதாபிமான முறையில் ஏற்றுக் கொண்ட அரச அதிபரும் ஏனையோரும் இணகம் தெரிவித்ததைத் தொடர்ந்து யாழ். செயலகத்தினால் உலர் உணவு நிவாரணம் இவர்களுக்கு வழங்குவதற்காக மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இவற்றை நேற்றுமுன்தினம் வழங்குவதற்கு இருந்தவேளை உடன் நிறுத்தி வைக்குமாறு உத்தரவு கிடைத்ததாம். இதனால் இவற்றைப் பெறச் சென்ற மக்கள் ஏமாற்றத்துடனும், கவலையுடனும் திரும்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் தற்போது இடம்பெயர்ந்தோர் நிவாரணமாக 129 ஏ,பி புள்ளிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதாகக் கூட்டுறவுக் கிளை வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது. (8-100)

## சங்காபிஷேகமும் மணவாளக்கோலமும்

யாழ்ப்பாணம்,ஜன.30

உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார் கோயிலில் சங்காபிஷேகமும், மணவாளக் கோல விழாவும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிதொடக்கம் நடைபெறவுள்ளது.

மாலை 5மணிக்கு விசேடபூசைகள் இடம் பெற்று கருணாகரப்பிள்ளையார் பூந்தண்டிகையில் வீதிவலம் வரவுள்ளார்.

தொடர்ந்து 'திருமுறைகளும் நாமும்' என்னும் பொருளில் சமயப்பிரசாரகர் இணுவையூர் கெ.தவராசா சொற்பொழிவு நிகழ்த்துவார்.

கலாபூஷணம் அளவையூர் வி.கே.நடராசாவின் பாட்டுக் கச்சேரி இடம்பெறும். பக்கவாத்தியங்களாக வித்துவான் கே.பத்மநாதன் வயலின், கலாபூசணம் க.ப.சின்னராசா மிருதங்கம், கலாவித்தகர் நா.மாதவன் கடம் வாசிப்பர். (த-204)

# கொடிகாமம் மருந்தகத்தில் அம்புலன்ஸ் வசதி இல்லை

யாழ்ப்பாணம்,ஜன.30

மிருசுவிலில் உள்ள கொடிகாமம் அரசினர் மத்திய மருந்தகம் மற்றும் மகப்பேற்று மருத்துவமனை ஆகியவற்றுக்கு 'அம்புலன்ஸ்' வாகன வசதியை ஏற்படுத்தித் தருமாறு தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள் யாழ்.சுகாதார சேவைப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மிருசுவில், கொடிகாமம், உசன், கச்சாய், விடத்தற்பளை, கெற்பேலி, படித்தமகளிர் திட்டம், தவசிகுளம், மருதங்குளம் போன்ற உயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய கிராமங்களில் வாழும் மக்கள் தமது சாதாரண வைத்திய தேவைகளுக்கும் பிரசவத்திற்கும் மிருசுவில் அரசினர் வைத்தியசாலையையே நாடி வருகின்றனர்.

இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதியிலும் மற்றும் விடுதிகளில் தங்கியும் சிகிச்சை பெறும் நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம், சாவகச்சேரி போன்ற வைத்தியசாலைகளுக்கு வைத்தியரினால் சிபாரிசு செய்யப்படும் வேளைகளில் அங்கு அவர்களை உடனடியாக அனுப்பி வைக்க எவ்வித வாகன வசதிகளும் கிடையாது.

எனவே, இந்த வைத்தியசாலைக்கு 'அம்புலன்ஸ்' வாகனம் ஒன்றை வழங்குவதன் மூலம் மிகவும் பின்தங்கிய தொலைதூர கிராமங்களைச் சேர்ந்த நோயாளர்களும் வன்னிப் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த அவசர நோயாளர்களும் பெரும்பயன் அடையமுடியும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (த-203-15)

# இலங்கை மின்சார சபையின் விருது வழங்கும் விழா

இலங்கை மின்சாரசபையில் நீண்டகாலம் சேவையாற்றியோரைப் பாராட்டி விருது வழங்கும் விழா நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் கௌரவ அதிதிகளாக மின்சக்தி எரிபொருள் பிரதி அமைச்சர் குமாரவெல்கம மற்றும் மஹிந்தானந்த அளுத்கமே ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக மின்சக்தி எரிபொருள் அமைச்சுச் செயலாளர் பி.வீரஹண்டி, இலங்கை மின்சாரசபை தவிசாளர் ஆனந்த எஸ்.குணசேகர, துணைத் தவிசாளர் சூலா டி.சில்வா மற்றும் இலங்கை மின்சாரச்பை பொதுமுகாமையாளர் ரஞ்சித் எவ்.பொன்சேகா ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இலங்கை மின்சாரசபையில் 30 வருடங்களுக்கு மேல் சேவையாற்றியவர்களுக்கு பதக்கங்கள், வெற்றிக்கேடயங்கள் மற்றும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் பரிசில்களாக வழங்கப்பட்டன.

இந்தப் பரிசளிப்பு விழாவில் வடமாகாணத்தைச் சேர்ந்தவர்கள் பலர் பரிசில்களைப் பெற்றுப் பாராட்டப்பட்டனர். அவர்களின் விவரம் வருமாறு:

எம்.பாலசுப்பிரமணியம், ஆர்.பத்மசீலன், ரி.சிவசுப்பிரமணியம், கே.ஸ்ரீமுருகன், எஸ்.இந்திரராசா, எஸ்.ஜெகசீலன், நடனசிகாமணி, ரி.சுப்பிரமணியம், எம்.சுந்தரமூர்த்தி, கே.சிவபாதசுந்தரம், ஈ.சுப்பிரமணியம் (மி.பொ.யாழ்ப்பாணம்), ஆர்.வாமதேவன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.(க-8)

# விவசாயிகளின் அயராத உழைப்பே பட்டினியிலிருந்து மக்களைக் காத்தது

### பொருண்மியப் பொறுப்பாளர் புகழாரம்

கிளிநொச்சி,ஜன.30

"போர்க்காலச் சூழலில் எமது விவசாயிகளின் விடா முயற்சியும் அயராத உழைப்பும் தான் எமது மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றியது" என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சி இரணைமடுவில அமைந்துள்ள பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

ஒரு சுயபொருளாதார நிலைக்கு எமது இல்லம் மாறவேண்டும். ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்து தங்களது தேவையை நிறைவு செய்யக்கூடியவர்களாக மாற வேண்டும் என்ற எதிர்காலக் கனவோடுதான் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

யுத்த சூழலில் எமது விவசாயிகளின் அயராத உழைப்பும் விடா முயற்சியும் தான் இந்த யுத்தத்தை நாம் எதிர்கொண்டு எமது மக்களைப் பட்டினிச் சாவில் இருந்து வெல்லக்கூடிய ஒரு நிலைக்கு மாற்றியது.

ஆகவே, இன்று கிடைத்துள்ள இந்தச் சமாதானச் சூழலில் எங்கள் மக்களை நாங்கள் பொருளாதார ரீதியில் வளம்படுத்துவதற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். (த-12)

# விவசாய ஆராய்ச்சி நிலையம் இரணைமடுவில் திறந்துவைப்பு

பரந்தன்,ஜன.30

வடபிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் கிளிநொச்சி, இரணைமடுச் சந்திப் பகுதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

விவசாய ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சி.ஜெ.அரசகேசரி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை நிலையத் திறப்பு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி மாட்ட அரச அதிபர் தி.இராஜநாயகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், வட பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதிப் பணிப்பாளர் ஜெ.கோ. தர்மராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து சி.கரிகாலன், ஜெ.கோ. தர்மராசா, கிளி.மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் திருமதி நாமகள், கிளி.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி சீ.ஆனந்தராஜா மற்றும் வட பிராந்திய ஆராய்ச்சிப் பண்ணை முகாமையாளர் கா.சிறீரஞ்சன் ஆகியோர் உட்படப் பலர் கருத்துரைகளை வழங்கினர். (த-352-202)

## வடமராட்சியில் திருட்டு மின்சாரம்

குடத்தனை,ஜன.30

வடமராட்சிப் பகுதியில் திருட்டு மின்சாரம் பெறுவோரினால் மின் பாவனையாளர்கள் பலத்த இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அல்வாய் வடக்கு மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு ஆகிய பகுதிகளில் திருட்டு மின்சாரம் பெறுவோர் தொகை அதிகரித்து வருவதாக இப்பகுதிகளைச் சேர்ந்த மின் பாவனையாளர்கள் இலங்கை மின்சாரசபையின் பருத்தித்துறை அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் மின்சாரசபையிடம் வேண்டுகோள் விடுதத்துள்ளனர். (த-78)

# நற்கருணை நம்வாழ்வின் மையம்

நற்கருணை - நல்ல கருணை. கருணை எனும் சொல் இரக்கம் என்னும் சொல்லிலும் கூடிய உளம் நிறைந்த உருக்கமான சொல். இயேசு மனுக்குலத்தின் மீதுள்ள கருணையால் மனிதனானார். தந்தை மனிதன் இழந்த பேரின்பத்தை மீளப் பெறத் தன் மைந்தன் இயேசுவைக் கருணைக் கொடையாக மண்ணகம் தந்தார். ஆவியின் வல்லமை கருணையாக அன்னை மரி வயிற்றில் மனிதாவதாரம் பெற வழி செய்தார்.

### ஞாயிறு நற்பிரசாதம்

இயேசு கடைசி இராப்போசனத்தின் போது சொன்ன வார்த்தைகள் நமக்கு நற்கருணையின் மேன்மையையும், வல்லமையையும், சிறப்பையும் எடுத்துக்காட்டுகின்றன 'அப்பத்தை எடுத்து இதோ என் உடல்' - என்றார். இரசத்தை எடுத்து 'இதோ என் இரத்தம்' - என்றார். உங்களுக்காகக் கையளிக்கப்படும் உணவு. உங்களுக்காகச் சிந்தப்படும் இரத்தம் (பானம்) என்றார். இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றும் கட்டளையிட்டார்.

சிலுவை மரத்தில் உயிர் விட்டுப் பலியாகிய அந்தச் செம்மறிப்புருவையின் உயிருள்ள பலியே நாளாந்தம் பலிப் பீடத்தில் நிகழ்வாகிறது. அப்ப இரச வடிவில் எமக்கு ஆன்ம உணவாக மாற்றம் பெற்று வழங்கப்படுகிறது. இது விசுவாசத்தின் மறைபொருள்! விசுவாசத்தால் மட்டுமே இதை விளங்க முடியும் - ஏற்க முடியும் - வாழ முடியும்.

தேவ வசீகர வார்த்தைகள் குருவினால் உச்சரிக்கப்படும்போது நாம் விசுவாசத்துடன் ஒன்றித்து இணையும் போது அந்த மாற்றத்தின் மாண்பை உணரமுடியும்.

இன்றைய காலகட்டத்தில் மனிதனுக்கு ஆறுதலும் அடைக்கலமும் கொடுக்கக் கூடியது நற்கருணைப் பிரசன்னமே. ஒளியின் தேவ இரகசியங்கள் ஐந்தும் அதில் சிறப்பாக '5ஆம் தேவ இரகசியம் நற்கருணையில் இயேசுவின் பிரசன்னம்' என்பதை சென்ற 2003, 2004 திருவழிபாட்டு ஆண்டில் பிரகடனம் செய்த எம் பரிசுத்த தந்தை 2004 - 2005 திருவழிபாட்டு ஆண்டில் நற்கருணை நம் வாழ்வின் மையம் (குடும்ப ஆண்டு) ஆகப் பிரகடனம் செய்துள்ளார்.

*பெனடிக்ரா அந்திரேஸ்பிள்ளை*

ஆழ்ந்து சிந்திக்கும்போது இது இறையருள் திருச்சபையின் தலைவர் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது என்பதையே உணர்த்தி நிற்கின்றது. ★

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட

# முல்லைத்தீவு மக்களுக்கு இதுவரை அரச உதவிகள் இல்லை

ஒட்டுசுட்டான்,ஜன.30

சுனாமி பேரலையால் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்கள் ஒரு மாத காலமாகியும் இன்று வரையிலும் அரச உதவி எதுவுமின்றி முகாம் வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டு பல இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தங்குமிட வசதிகளோ தொழில் வாய்ப்புக்களுக்கான உதவிகளையோ இதுவரை ஏற்படுத்திக்கொடுக்க அரசு முன்வரவில்லை என அம்மக்கள் விரக்தியுடன் தெரிவிக்கின்றனர்.

உறவுகளை இழந்து துயருற்று வரும் போதும் உயிர்தப்பியோரின் வாழ்க்கை கேள்விக் குறியாகி உள்ளது. உள்ளூர் தொண்டு நிறுவனங்கள் மற்றும் விடுதலைப்புலிகளின் செயலணிக் குழுக்களே இதுவரை உதவி வருவதாக முல்லைத்தீவில் பாதிக்கப்பட்ட மக்கள் பரவலாகத் தெரிவிக்கின்றனர்.

(8-341)

சுனாமியில் சிக்கி பழுதடைந்த

# படகுகளின் 'யமகா' இயந்திரங்களை திருத்துவதற்கென குழு வருகை

செம்பியன்பற்று,ஜன.30 .

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் பழுதடைந்த மீன்பிடிப் படகுகளின் 'யமகா' ரக வெளியிணைப்பு இயந்திரங்களைத் திருத்தியமைப்பதற்காக 'யமகா' நிறுவனத்தின் திருத்துநர் குழு ஒன்று வடமராட்சி கிழக்குக்கு வந்துள்ளது.

எனவே, 'யமகா' ஊடாக வெளியிணைப்பு இயந்திரங்களை எடுத்தவர்கள் தங்கள் இயந்திரங்களைத் திருத்துவதற்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(த-203-36)

# காரைநகரில் அனுமதியின்றி மரம் ஏற்றி வந்தோர் சிக்கினர்

காரைநகர்,ஜன.30

காரைநகரில் இருந்து சட்ட விரோதமாக லொறி மூலம் கடத்திச் செல்லப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான மரங்களை காரைநகர்ப் பகுதி கிராம சேவையாளர்களும், காரைநகர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கைப்பற்றி காரைநகர்ப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது.

காரைநகரின் பல பகுதிகளிலும் சட்டவிரோதமாக தறிக்கப்பட்ட பெருமளவு மரங்களை ஏற்றிச் சென்ற லொறியினை வழிமறிந்து விசாரணை செய்தபோது கிராம சேவையாளரதோ, பிரதேச செயலாளரினதோ அனுமதி பெற்றிருக்காமை தெரியவந்தது.

அதனையடுத்து மரங்களும் லொறியும் காரைநகர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

(த-73)

## அமெரிக்காவின்....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவையெல்லாவற்றிலுமே சிங்கங்களின் கோரமான பல் அடையாளங்கள் காணப்பட்டன.

குரொஸ்லி தனது வேறு இரு கறுப்பு இன வேலையாள்களுடன் நீதிமன்றில் ஆஜராகியிருந்தார். அவரின் செயற்பாடுகளுக்குத் துணை போனதாக மற்ற இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அவர்களில் ஒருவர், முதலில் தனது எஜமானின கட்டளைப்படி நடந்து கொண்டதாகக் குற்றத்தை ஒப்புக்கொண்டார். பின்னர் அதை மறுத்துவிட்டார்.

நீதிமன்றத்துக்கு வெளியில் கறுப்பு இன மக்கள் கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

"இவர்கள் தம் வேலையாள்களை மிருகங்கள் போல் நடத்துகிறார்கள். இன்னமும் கறுப்பர்களை வெறுக்கிறார்கள். நிற ஒதுக்கல் இன்னமும் அவர்களின் மனங்களில் நிலைத்திருக்கிறது" என்று ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் கூச்சலிட்டார்.

மார்க் குரொஸ்லிக்கு மூன்று மரண தண்டனையும் 100 ஆண்டு ஜெயில் தண்டனையும் விதிக்கப்பட வேண்டும் என்று இன்னொருவர் கூறினார்.

எங்கெடி என்ற ஊரில் குரொஸ்லி வைத்திருக்கும் பண்ணையில் சிஸ்லே பணிபுரிந்தார். 2003 ஆம் ஆண்டு நவமபரில் அவர் வேலை நேரத்தில் கடைக்குப் போனார் என்பதற்காக வேலைநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் ஒரு நாள் தனது பழைய சம்பளத்தைப் பெறுவதற்காகச் சென்றபோது அவரைப் பிடித்து அடித்து கயிற்றாலும் வயராலும் இறுகக்கட்டி மூவருமாக சேர்ந்து சிங்கக் கூண்டில் தூக்கிப் போட்டிருக்கின்றார்கள் என்ற விவரம் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

### ஈராக்கில் இன்று தேர்தல்

அமெரிக்காவும் ஈராக்கிய இடைக்கால அரசும் அறிவித்திருந்தபடி பொதுத்தேர்தலுக்கான சகல ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ள நிலையில் ஈராக்கிய வாக்காளர்கள் இன்று நடைபெறும் பொதுத்தேர்தலில் கலந்துகொள்வார்களா எனபது கேள்விக் குறியாகவே உள்ளது.

தேர்தலை எந்த விதத்திலும் நடத்தவிடாமல் தடுப்பதில் அல்கெய்டா ஆதரவு தீவிரவாதிகள் நேற்று மாலை வரை பல்வேறு இடங்களில் தாக்குதல்களை நடத்தியிருந்தார்கள்.

நேற்று முன்தினம் இரவு மட்டும் பக்தாத்தில் 12 இற்கும் மேற்பட்ட தேர்தல் சாவடிகளில் தாக்குதல் நடத்தியிருப்பதாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

அல்கெய்டா ஆதரவுத் தீவிரவாதியான அபு முசாப் அல் - சார்க்கவி விடுத்துள்ள ஓர் அறிக்கையில் ஞாயிறு நடைபெறும் தேர்தலுக்கு எதிராக முழு அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று எச்சரித்திருந்தார்.

**சார்க்கவியின்**

அறிவித்தல்கள் எல்லாம் தேர்தலில் ஈராக்கியர்கள் கலந்துகொள்ளாமல் இருக்கச் செய்வதே. ஆனால், இதையும் கவனியாமல் மக்கள் தேர்தலில் கலந்துகொள்வார்கள் என்று அதிகாரிகள் எதிர்பார்க்கின்றார்கள். அதற்கேற்றாற்போல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகப்பலமாக இருக்கின்றன.

நாடு முழுவதும் 5000இற்கு மேற்பட்ட வாகுச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் பாதுகாக்கப்படும் எனறு அறிவித்துள்ளார் இடைக்கால பிரதமர் இயாத் அலவி.

எதுவானாலும் பல இடங்களில் கடந்த புதன்கிழமை மட்டும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 25 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேற்கு ஈராக்கில் ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் 30இற்கு மேற்பட்ட அமெரிக்கத துருப்பினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதேசமயம் ஈராக்கிய மக்களுக்கு அமெரிக்க அதிபர் புஷ் விடுத்துள்ள ஒரு செய்தியில் பயங்கரவாதத்தை எதிர்த்து வாக்களிப்பில் கலந்துகொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளுக்கு மாறாக வாக்களித்தது போல் ஈராக்கிலும் மக்கள் வாக்களிப்பில் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த முடிவு இன்று வெளிப்படும்.


உ

திருமண வரவேற்புபசார அழைப்பு

மணமகன்
பிறேமச்சந்திரன்
(விற்பனை நிறைவேற்றுநர், சிலிங்கோ ஆயுள் காப்புறுதி நிறுவனம்)



மணமகள்
நடோஜினி
(ஆசிரியை, சென்.மேரிஸ் கல்லூரி, திருமலை)

காலம்: நாளை (31.01.2005) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணி
இடம்: மணமகன் இல்லம், புகையிரத நிலைய வீதி, கோண்டாவில்.

அன்புடையீர்!
நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்தில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி நடராசா தம்பதிகள்
பிள்ளையார் கோவில் வீதி,
வெளிக்குளம்,
வவுனியா.

புதுமணமக்கள்:
பிறேம் - நடோஜி

திரு.திருமதி இராசரத்தினம் தம்பதிகள்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(41454)(24-11-42)



31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
10 - 02 - 1926



மறைவு
31 - 12 - 2004

அமரர் சரவணமுத்து சிவலிங்கம்

அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மைப் பெற்றெடுத்து வளர்த்து
ஆளாக்கி இம் மண்ணில் வாழ
வைத்த எம் அன்புத் தந்தையாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தந்தையின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும்.
இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளு[illegible] அன்புடன் அழைக்கின்றோம்.

சரவணை கிழக்கு, வேலணை.
(41453)(42-11)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



கண்ணீர் அஞ்சலி



அமரர்
கார்த்திகேசு செல்வரட்ணம்
(ஓய்வு பெற்ற நில அளவைஅத்தியட்சகர்)

திருமதி
நாகமணி செல்வரட்ணம்

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும் சங்கத்தின் செயலாளர், தலைவர் பதவிகளை வகித்தவருமாகிய காத்திகேசு செல்வரட்ணம் அவர்கள் தம்பதி சமேதராக இறைபதம் எய்திய செய்தியையிட்டு அதிர்ச்சியடைகிறோம். தம்பதிகளின் மறைவையிட்டு எமது சங்கத்தினராகிய நாம் ஆழ்ந்த கவலையுடன் இருக்கும் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

424/1/1,கில்னர் கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (41450)(42-11)

உத்தரவு பெற்ற
நில அளவையாளர் சங்கம்.



பதினொராம் வருட நினைவஞ்சலி

பூவுலகில்
27 - 12 - 1936



விண்ணுலகில்
17 - 01 - 1994

அமரர் நாகலிங்கம் சிவசுப்பிரமணியம்
(உரிமையாளர், கலைவாணி நகைமாளிகை)

திதி: பஞ்சமி (30-01-2005)

பதினொரு ஆண்டுகளாய் எமைப் பரிதவிக்க விட்டு
புதியதொரு உலகுக்குப் புறப்பட்டீர் - பதிதன்னில்
காத்திருந்து பார்த்திருந்த கண்களே தாமாக
சாற்றுதையா மாலையெனக் கண்ணீர்!

136/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(41455)(26-11-42)

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
சோ.நாகராசா குடும்பத்தினா
(மனேச்சர்).



பழுது பார்த்தல்

1975 ஆம் ஆண்டில் இருந்து சுமார் 30 வருடங்களாக அநுபவமிக்க, விஷேட சேவையுடன் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும்,பாராட்டையும் பெற்றுக் கொண்ட விசுவாசமிக்க சேர்விஸ் சென்டர்

திறமை வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் 40 பேர்களுடன். அதி நவீன தொழில்நுட்பத்தைக் கையாண்டு. ஒரே நாளில் கொம்பியூட்டர் மயப்படுத்தப்பட்ட துரித சேவை.
ஒரு வருட உத்தரவாதம்!

கெமரா பழுது பார்த்தல்



மின்சார உபகரணங்கள் பழுது பார்த்தல்



டிஜிட்டல், ஸ்டில் & வீடியோ கெமரா. லென்சஸ், ஸூம் கெமரா பிளேக்ஸ் சேர்கியுற். றீபிளேஸ்மன்ட்ஸ், ஸ்டுடியோ பிளாஷஸ், கொம்பியுடரைஸ்ட், ஃபிளாஷ் கன்ஸ்ஹை-பை எம்பிலிபையர்ஸ், சற்டலைட்ஸ்,

LD, CD, VCD, DVD கெசட்ஸ். CD இயந்திரங்களை VCD யாக மாற்றுதல் செலுலர் தொலைபேசிகள். பெக்ஸ்மெசின்கள். கோட்லெஸ், அனலொக் தொலைபேசிகள். இலக்றோனிக் டைப்ரைட்டர்கள்.மைக்றோவேவ்ஸ் ஒவன். பொலிஷர். பிளென்டர். மின்சார விசிறிகள்.குளிரூட்டி. சலவை இயந்திரங்கள். குளிர்சாதனப் பெட்டிகள். மோட்டார்கள்.

GRAYON

DURST ELECTRONICS (PVT) LTD.

364, காலி வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3. போன்: 2575480, 2565756
P.G மாட்டினுக்கும் H.N.B வங்கிக்கு எதிரிலும், ரேனுகா ஹோட்லுக்கு அருகிலும் (கடல் பக்கம்)

# கரையோரத் தாவரங்களை நாம் பாதுகாத்தால் இயற்கை அழிவிலிருந்து அவை எம்மைக் காக்கும்

**சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை எவ்வாறு மீளக் கட்டியெழுப்பலாம் என்ற தமது கருத்துக்களை துறைசார் நிபுணர்கள் பலரும் வெளியிட்டு வரும் காலம் இது.**

**இந்தவகையில், ஜேர்மன் 'மியூனிக்' பல்கலைக்கழகத்தில் (University of Munich) சுற்றாடல்துறை விஞ்ஞானியாகக் கடமையாற்றும் இலங்கையரான கலாநிதி திருமதி அஜந்தா பெரேரா முன்வைத்திருக்கும் யோசனைகளைத் தமிழில் தருகிறோம்.**

தத்தமது விருப்பத்திற்கு ஏற்ற வகையில் எவ்வித கட்டுப்பாடுமின்றி கடலோரங்களில் குடியிருப்புக்களும் உல்லாசப் பிரயாணிகள் விடுதியும் இதுவரை காலமும் நிர்மாணிக்கப்பட்டு வந்துள்ளமையை எம்மால் அவதானிக்க முடிந்துள்ளது.

இவ்வித கட்டடங்களை அமைப்பதற்கு இக்கடலோரங்கள் ஒன்றும் முக்கியத்துவமற்ற புறம்போக்கு நிலமல்ல; உண்மையில் கரையோரங்கள் நாட்டின் நிலப்பரப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையிலமைந்த முக்கியத்துவம் மிக்க பகுதிகள்.

கடலில் காலத்திற்குக் காலம் ஏற்படும் மாற்றங்களால் நாட்டின் கரையோர நிலப்பரப்புக்கு ஏற்படக்கூடிய அழிவுகளைக் குறிப்பிட்ட ஓரளவுக்குத் தடுத்து நிறுத்தத்தக்க தாவரவியற் பின்னணியை இக்கடலோரங்கள் இயற்கையாகவே கொண்டிருப்பதை விசேடமாகக் குறிப்பிடமுடியும். அந்தவகையில், கடலோரங்களின் இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பேற்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இக்கட்டுப்பாடற்ற கட்டட நிர்மாணச்செயற்பாடுகள் அமைவதாகக் கொள்ள இயலும்.

அண்மையில் இடம்பெற்ற 'சுனாமி' பேரலை அனர்த்தத்தின் பயங்கர அனுபவங்களின் பின்னரும் இன்றும் பொதுமக்களில் ஒருசாரார் மீண்டும் கரையோரங்களில் குடியிருப்புக்களையும் உல்லாசப் பிரயாணிகள் விடுதிகளையும் அமைப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## சுனாமி அனர்த்தப் புனரமைப்பிற்கு நிபுணர் ஒருவரின் யோசனைகள்....

கரையோரங்களில் இவ்வித கட்டடங்களை நிர்மாணிக்கத் தடைவிதிக்கும் அரசின் தீர்மானத்திற்கு அவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தும் வருகின்றனர். இது மிகுந்த கவலையளிக்கும் ஒரு விடயமாகும்.

### சூழலைப் பாதுகாக்கும் கரையோரத் தாவரங்கள்

கடலுக்கும் தரைப்பகுதிக்கும் இடையேயான இணைப்பை ஏற்படுத்துவது இக்கரையோரப் பகுதியேயாகும். கரையோரங்களில் வழிந்தோடும் கடல் நீர் குறிப்பிட்ட சில தாவர வகைகளின் வளர்ச்சித் தூண்டலுக்கு உறுதுணை புரிகிறது.

குறிப்பிட்ட இத்தாவர வகைகள் பௌதிகச் சுற்றாடல் பாதுகாப்புக்கு முக்கிய காரணிகளாய் அமைகின்றன. செடிகளைப் போன்று வளரும் இக் கடற்கரைத் தாவரங்கள் தரைநிலப்பரப்புக்குள் பிரவகித்து உட்புகும் வேகமான கடலலைகளின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்தித் தரை நிலப்பரப்பைப் பாதிப்பினின்றும் பாதுகாக்கின்றன.

அருவிகள் மூலம் சேரும் நன்னீர் குடாக்களில் நிறைவதால் அவைகளில் குறிப்பிட்ட ஓரளவுக்கு உவர்த்தன்மை ஏற்படுகிறது. இது இறால் வகைகளின் வளர்ச்சிப் பெருக்கத்துக்குச் சாதகமான காரணியாய் அமைகின்றது.

அதுவுமன்றி, குடாக்களை அண்டிய உவர்களப் பகுதிகள் மனித முயற்சியால் உருவாக்கப்படும் பயன்தரு மரவகைகளின் செழிப்பான வளர்ச்சிக்கு உறுதுணை புரிகின்றன.

கடல் நீர் பெருக்கம் நிலப்பகுதிக்குள் உட்புகுந்து சேதமேற்படுத்துவதை இம்மரச் சோலைகள் தடுத்துப் பாதுகாக்கின்றன. கடல் மற்றும் நிலப்பகுதி ஆகிய இவ்விரு சூழலும் பரஸ்பரம் ஒன்றினால் மற்றொன்று பாதிப்படையாவண்ணம் இவ் இயற்கைச் சூழல் சுற்றுப்புறத்தன்மை அமைந்துள்ளது.

இந்த இயற்கைத் தன்மைக்கு சவால் விடுக்கும் விதத்தில் செயற்பட விழையும் மனித இனம தனது செயற்பாடுகள் காரணமாகப் பாதிப்பு ஏற்படும்போது அப்பாதிப்பின் தாக்கத்தினின்றும் விடுபட வழியறியாது தத்தளிக்கின்றது.

தம் நீண்டகால அனுபவம் காரணமாக மீனவச் சமூகம் கரையோரங்களில் தமக்கென நிரந்தர குடியிருப்புக்களை அமைத்தல் பாதுகாப்பற்ற தென்பதை உணர்ந்துள்ளது.

ஆனால், வருமானத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ள உல்லாச பிரயாண விடுதி உரிமையாளர்கள் தமது நோக்கத்திற்குப் பக்கபலம் சேர்க்கும் நோக்கில் இம் மீனவ சமூகத்தினரையும் மீண்டும் பழையபடி கரையோரங்களில் அவர்களது குடியிருப்புக்களை மீளமைப்புச் செய்யுமாறு தூண்டுதலளித்து வருகின்றனர்.

### பாதுகாப்பான நிலத்தில் மீனவர்களைக் குடியமர்த்துக!

நம் நாட்டில் மீனவ சமுதாயத்தினருக்காக அடுக்குமாடிக் குடியிருப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நடவடிக்கைகளில் அதிகரிப்பு ஏற்பட்டு வருவதை அவதானிக்கமுடியும்.

பொருத்தமான நிலப்பற்றாக்குறை நிலவும் சூழ்நிலையிலும், கரையிலிருந்து உள்நோக்கிய பாதுகாப்பான நிலப்பகுதியிலேயே இம் மீனவ சமூகத்துக்கு சனசமூக நிலையம், குழந்தைகளுக்கான விளையாட்டு மைதானம், முன்பள்ளி, பொழுதுபோக்கு மையம் மற்றும் வணக்கஸ்தலம் ஆகிய சகல வசதிகளுடனும் கூடிய தொடர்மாடி வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படுதல் சிறப்பாய் அமையும்.

கடற்கரையோரம் திடீர்த் தாக்கப் பாதுகாப்புப் பகுதியாகக் கணிக்கப்படக் கூடிய குறிப்பிட்டதொரு தூரத்துக் கப்பாலும் கடற்தொழிலுக்காகச் சிரமமின்றி விரைவில் கடற்கரையை அடையக் கூடிய தூரத்தில் அமைந்ததுமான அகன்றதொரு நிலப்பரப்பை இதற்கெனத் தேர்ந்தெடுப்பது சிரமமான தொன்றாக அமையப் போவதில்லை.

மீனவர்களது நாளாந்தப் பாவனையிலுள்ள வலைகள், வள்ளங்கள் என்பவற்றைப் பாதுகாக்கக் கடற்கரையோரத்தில் பொருத்தமானதோர் இடத்தைத் தேர்ந்தெடுக்க இயலும்.

இன்று கடலில் தொழிலுக்குப் புறப்படும் சாதாரண மீனவரொருவர், தான் தொழில் முடிந்து கரையேறி வீடு திரும்பும் வரை தனது குடும்பம் பாதுகாப்பாக இருக்குமென்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவே விரும்புகிறார்.

அவர் ஆபத்தின் மத்தியில் சிரமப்பட்டு கடலில் தொழில் செய்வது தனது குடும்பத்தின் நல்வாழ்வுக்காகவே என்று அவர் சிந்திப்பதே இதற்குக் காரணமாகும்.

பொங்கி வரும் அலைகளின் தாக்கத்திலிருந்து நிலப்பரப்பைப் பாதுகாக்கக் கரையோர மணல் திடர்கள் மிகுந்த பயனளிப்பதால் உல்லாசப் பயண விடுதி உரிமையாளர்களும் இம மணல் திடர்களின் பாதுகாப்புக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

பொங்கி வரும் அலைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த இந்த மணல் திடர்கள் பாதுகாப்பு அரண்களாகப் பயன்படுகின்றன. கடந்த காலங்களில் இவ்வித மணல் திடர்கள் பெரிய அளவில் அழிக்கப்பட்டமையால் கடற் படுகையில் இவ் இயற்கைத் தடுப்பு அணைகள் எதுவும் தற்போது காணப்படுவதில்லை.

### இயற்கை அனர்த்தத் தடைகளைப் பேணுக!

இவ்விதம் இயற்கைச் சூழலில் ஏற்படும் மாற்றங்களை உணர முடியாத சாதாரண மனிதர்களின் பாதுகாப்புக்காகவாவது கடற்கரைகளில் காணப்படும் இயற்கை அனர்த்தத் தடைகளை முறைப்படி பேணிவரவேண்டியது அத்தியாவசியமாகும்.

இந்த முற்பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர், கையாளப்படவேண்டிய ஒரு முக்கிய பணி குறித்துக் கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

> *பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளின் கழிவுகளை சுலபமாகவும், சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும், அகற்றுகின்ற அதேவேளையில், அந்தக் கழிவுகளைப் பிரயோசனப்படுத்தக் கூடிய வகையிலும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும்.*

சுனாமிப் பேரலைத் தாக்கம் காரணமாகக் கரையோரப் பகுதியில் ஏராளமான கழிவுப் பொருள்கள் நிறைந்து காணப்படுவதாகக் கூறப்படுகிறது. அவற்றை முறைப்படி அப்புறப்படுத்துதல் சிக்கல் மிக்கதொரு பாரிய பணி.

இப்பணியைச் சிறப்பாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமாயின், ஓர் ஒழுங்குமுறையின் அடிப்படையில் செய்து முடிக்கும் நோக்குடன் திட்டமொன்றை வகுத்து அதன் பிரகாரம் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படல் அவசியமாகும்.

### எச்சங்களில் ஒரு பகுதியை மீண்டும் பாவிக்கலாம்

இப்பணியின் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேர்ந்துள்ள கழிவுப்பொருள்களில் பாவனைக்குப் பயன்படுத்தத்தக்கவை எனவும் பாவிக்க இயலாதவை எனவும் இருவேறு பெரும் பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளல் அவசியமாகும்.

செங்கல், கதவுகள், ஜன்னல்கள் மற்றும் வீட்டுப்பொருள்கள், மரங்கள், செடிகள் என்பவற்றைப் பாவனைக்குப் பயன்படுத்தத்தக்கவை எனக்கொள்ள இயலும்.

சேதமுற்ற மரங்களின் பகுதிகள், செடிகள் என்பவற்றை ஓரிடத்தில் சேர்த்துவைத்துப் பசளையாகப் பயன்படுத்த முடியும்.

கட்டட இடிபாடுகளிடையே காணப்படும் சேதமடைந்த செங்கல், கதவுகள், ஜன்னல்கள் மற்றும் வீட்டுப் பொருள்கள் போன்றவற்றை அவற்றின் உரிமையாளர்களைத் தொடர்பு கொள்ள முடியுமாயின் அவர்களது அனுமதியுடன் ஓரிடத்தில் சேர்க்க முயற்சிமேற்கொள்ளல் சிறப்பாகும்.

ஏனெனில், இவற்றின் பெறுமதிமிக்க பாகங்கள் கூட மீள் கட்டுமானப் பணிகளின்போது பாவனைக்குச் சேர்த்துக்கொள்ள வாய்ப்புக்கிட்டலாம்.

அதனை விடுத்து, எச்சங்களையும் தரம் பிரிகாது கழிவுகளாகக் கருதி அவற்றை ஒட்டுமொத்தமாக அழிக்க முனைவது நியாயமான தொன்றல்ல.

பாவிக்க முடியாத கழிவுகளை ஒன்றில் புதைத்துவிட முடியும். இல்லையேல் எரிப்பதன் மூலம் அழித்துவிடுதலும் சிறப்பாக அமையும். ஆனால், இச் செயற்பாடுகள் குடியிருக்கும் பகுதிகளிலோ சேற்று நிலப்பகுதியிலோ வைத்து மேற்கொள்ளப்படலாகாது.

இந்தவகையில், கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்தும் வேளையில் குறிப்பிட்ட சில அம்சங்கள் கருத்தில் கொள்ளப்படுதல் அவசியமாகும். நாளாந்தப் போக்குவரத்துக்குப் பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்காத வகையில் இப்பணி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பொதுமக்களது புழக்கம் உள்ள பகுதிகளூடாக இக் கழிவுப் பொருள்களை எடுத்துச் செல்வதாயின் விடியற்காலை அல்லது நள்ளிரவு வேளைகளை அப்பணிக்காகப் பயன்படுத்திக் கொண்டால் சூழல் மாசடைவதால் பொது மக்கள் பாதிக்கப்படும் வாய்ப்பைத் தவிர்க்க இயலும்.

வேறுபட்ட வகைகளில் தரம் பிரிக்கப்பட்டு இக்கழிவுப் பொருள்கள் வெவ்வேறாக அகற்றப்படுதல் சிறப்பான செயற்பாடாக அமையும்.

இவ்விடயத்தைக் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய மற்றொரு முக்கிய விடயமும் சுட்டிக் காட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வித கழிவுகளைக் கையாளும் பணியை மேற்கொள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களிடையேயிருந்து தன்னார்வத் தொண்டர்களைத் தெரிவுசெய்து அப்பணியை மேற்கொள்ள நியமித்தல் பல வகைகளில் பயனளிப்பதாய் அமையும்.

சுகாதாரம் பேணும் வகையில் அவர்களுக்கு கையுறைகள், மூக்கை மறைக்கும் அங்கிகள் என்பவற்றையும், சுய பாதுகாப்புக்காகச் சப்பாத்துக்கள், மேலங்கிகள் என்பவற்றையும் வழங்கி உதவுவது அவர்களை உற்சாகப்படுத்துவதாய் அமையும்.

கலாநிதி திருமதி அஜந்தா பெரேரா
தமிழில்: வீயெஸ்ரி

அதுவுமன்றி உடைமைகளை இழந்து நிதி நிலை பாதிக்கப்பட்ட நிலையில் விரக்தியுடன் இந்நிலையங்களில் தங்கியிருக்கும் அவர்களுக்கு அவர்கள் ஆற்றும் பணிக்கென விசேட கொடுப்பனவுகளை மேற்கொள்வதன் மூலம் அவர்களது நிதித் தேவையின் ஒரு பகுதியை நிறைவு செய்வதுடன், அவர்களது மன உளப் பாதிப்பு நிலைக்கு மாற்றமொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அது அமையும்.

பொதுவாக இவ்வாறான பாரிய அனர்த்தம் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் சம்பவத்தின் பின்னரான யதார்த்த நிலையில் உடல் நலத் தாக்கங்களும், சுகாதாரச் சீர்கேடுகளால் தொற்று நோய்ப் பாதிப்பும் ஏற்படச் சந்தர்ப்பமுண்டு.

அது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படுதல் சம்பவத்தின் பின்னர் இயல்பு நிலையை உருவாக்கும் செயற்பாடுகளில் மிக முக்கியதொரு பங்கைப் பெறுகிறது.

சம்பந்தப்பட்ட செயற்பாட்டு மையங்களை நிர்வகிப்போர் இவ்விடயத்தில் அதீத அக்கறை செலுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும். ✪






கியூடெக் நிறுவனத்தின் பெண்கள் அமைப்புகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கு செலான் வங்கியினால் கடனடிப்படையில் தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மேற்படி நிறுவனத்தில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட செலான் வங்கியின் பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும், கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் தந்தை சி.ஜெயக்குமார் உரை நிகழ்த்துவதையும் முதலாவது படத்தில் காணலாம்.

செலான் வங்கியின் பொதுமையாளர் அஜித்தா பாஸ்குவல் பயனாளி ஒருவருக்கு காசோலை வழங்குவதையும், கலந்துகொண்ட பயனாளிகளையும் ஏனைய படங்களில் காணலாம்.

(படங்கள்: தமிழினியன்)

# ஒட்டுசுட்டான் பிரதேச வயல்களில் கபிலநிறத் தத்திகளின் தாக்கம்

ஒட்டுசுட்டான்,ஜன.30

ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட நெல்வயல்களில் கபிலநிறத் தத்திகளின் தாக்கம் அதிகரித்து வருவதாகவும் இதன் தாக்கம் பயிரின் விளைவுப் பருவத்திலே கூடுதலான பாதிப்பை ஏற்படுத்துகின்றது எனவும் ஒட்டுசுட்டான் விவசாயப் போதனாசிரியர் குகநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகவே அவர் தெரிவித்ததாவது:-

இப்பிரதேசத்தில் எரிபந்த நோயால் விவசாயம் பாதிப்படைந்துள்ளது. மீண்டும் கபிலநிறத் தத்திகளின் தாக்கம் அதிகரித்து வருவதனால் விவசாயம் முற்றுமுழுதாக அழியநேரிடும். ஆகையால் விவசாயிகள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்நோயானது ஆரம்பத்தில் மஞ்சள் நிறமாகி நெற்பயிர்கள் கருகிவிடும். முதலில் இதன் தாக்கம் சிறியதாக இருந்தாலும் பெருந் தாக்கத்திற்குள்ளான பயிர்கள் போன்று முற்றுமுழுதாக எரிந்ததுபோல் காணப்படும்.

விவசாயிகள் வயலைத் தொடர்ந்து அவதானித்தால் கட்டுப்பாட்டில் கொண்டுவர முடியும். இந்நோய் அறிகுறி தென்பட்டால் உடன் பீ.பீ.எம்.சி. அல்லது அட்மியர் போன்ற கிருமி நாசினிகளில் ஏதாவது ஒன்றினை விசிற வேண்டும் - என்றார். (த-341)



வடமராட்சி லயன்ஸ் கழகம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள குழந்தைகளுக்கு ஒரு தொகுதி பால்மா பைக்கற்றுக்களை வழங்கியது. லயன் மாவட்ட இணைப்பாளர் லயன் க.தணிகாசலம் குழந்தை ஒன்றுக்கு பால்மா பைக்கற் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

வடமராட்சி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் மு.தர்மலிங்கமும் படத்தில் உள்ளார். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# இந்திய மீனவர்கள் மூவர் விடுதலை

சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் மூவர் யாழ். மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நயினாதீவுக் கடற்பரப்பில் அத்துமறி மீன்பிடித்த குற்றச் சாட்டின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த முனியாண்டி பரமசிவம், வீராசாமி நாகராஜன், முனுசாமி ரமேஸ் ஆகிய மூவருமே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

இவர்களுக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றப் பகிர்வுப் பத்திரத்தை சுனாமி பேரழிவு காரணமாக விலக்கிக்கொள்ளுமாறு சட்டமா அதிபர் அறிவித்ததன் பேரில் விலக்கிக்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா இவர்களை விடுதலை செய்தார். (த-173)


நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந்த், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
ஆயுதம்
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே.)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பார்த்திபன், ரிச்சா பட்டேல், வடிவேலு மற்றும் பலர் நடித்த
காதல் கிறுக்கன்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.) (C/40667)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
தனுஸ், ஸ்ரீதேவி, கருணாஸ், கபாலி, குணால், நாசர் நடித்த
தேவதையைக் கண்டேன்
தினசரி 11.00. 3.00. 7.00. 10.00 (பு.நே.) (C/39654)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
சரத்குமார் (இருவேடம்), நயன்தாரா, லட்சுமி, வடிவேல், பிரகாஸ்ராஜ், நெப்போலியன் நடித்த
கே.பாலச்சந்தரின்
ஐயா இயக்குநர் ஹரி
காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

SCREEN PRINTING
சுயதொழில் பயிற்சி ஓர் அரிய சந்தர்ப்பம்
ஸ்கிறீன் பிறிண்டிங் பயிற்சிநெறியை யாழ். நகரில் பல தொழில் நுனுக்கங்களுடன் திரு.ஞா.கமலச்சந்திரன் (B.Sc.) அவர்கள் கற்பிக்கவுள்ளார். ஸ்கிறீன் தயாரித்தல், எக்ஸ்போசிங் செய்தல், விசிட்டிங்காட், CD, பேனா, பொலித்தீன், திருமண அழைப்பிதழ்கள், ரீன்ற், 4 கலர்களில் பிறிண்டிங், துணிகளில் பிறிண்டிங், துணிகளில் எம்போசிங் இன்னும் பல... பெப்ரவரி 12, 13ஆம் திகதிகளில் வகுப்புகள் ஆரம்பம். ஆண், பெண் இருபாலாரும் வயது பேதமின்றிக்கற்கலாம். பயிற்சி நிறைவில் தொழில்ரீதியான ஆலோசனைகளும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
லக்கி பிறிண்டேர்ஸ்
507, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Mobile: 077 3039497 (சி-41466)


# உலக கிருஷ்ண பக்திக் கழகம் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

வடமராட்சி,ஜன.30

வடமராட்சி வடக்கு கரையோரப்பகுதியில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் இருக்கும் இடம்பெயர்ந்தோருக்கு அகில உலக கிருஷ்ண பக்திக் கழகம் உதவிகளை வழங்கியது.

காலை, மதியம் சமைத்த உணவுகளையும் உடுபுடைவைகளையும் வழங்கியதோடு, பாதிக்கப்பட்ட மக்களை பக்தி மூலம் ஆற்றுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

அத்துடன், 200 கிலோ நிறையுள்ள மருந்து வகைகளையும் பக்திக் கழகத்தினர் வழங்கினார்கள்.

இப்பக்திக் கழகத்தில் கொழும்பு, இந்தியா, சுவிற்ஸர்லாந்து, ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் அடங்கியிருந்தனர்.

கிருஷ்ண பக்திக் கழகத்தினர் பருத்தித்துறை தம்பசிட்டியில் சில தினங்கள் தங்கியிருந்து அங்கேயே சமைத்து உணவுகளை வழங்கியிருந்தனர். (த-173)

## பொன்னாலை செல்வோர் மீது சோதனைக் கெடுபிடி எனப் புகார்

வலி.மேற்கு,ஜன.30

பொன்னாலைக்குச் செல்லும் பொதுமக்கள் பலத்த சோதனைக் கெடுபிடிகளுக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, பொன்னாலைக்குச் செல்வோர் புகைப்படக்கருவி, கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றை எடுத்துச்செல்ல அனுமதியளிக்கப்படுவதில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இதனால், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்கள் தமது முக்கிய நிகழ்வுகளைப் புகைப்படம் பிடித்துக்கொள்ள முடியாதுள்ளதாகவும் கூறப்பட்டது. (எ-175)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை சம்பளம் வழங்கும்

நவாலி,ஜன.30

சாவற்கட்டு 100 வீட்டுத்திட்ட பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கத் தென்னிந்தியத் திருச்சபை முன்வந்துள்ளது.

சுமார் 90 பிள்ளைகள் கற்கும் இப்பாடசாலையின் ஆசிரியர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபாவைச் சம்பளமாக வழங்கத் தென்னிந்தியத் திருச்சபை தீர்மானித்துள்ளது. (த-100-202)

## சங்காபிஷேகம்

கோப்பாய் பலானை கண்ணகை அம்மன் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். பிற்பகல் திருவிழாவாக பூந்தண்டிகை உற்சவம் நடைபெறும். (த-72)

## பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும்

சங்கானை,ஜன.30

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திருமதி வேணுகா சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், இந்து மத குருபீடத்தின் யாழ். அமைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ சிவ நித்தியானந்த சிவாச்சாரியார் அருளாசியுரை வழங்குவார்.

வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் முதன்மை விருந்தினராகவும், சங்கானைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் சண்முகசுந்தரம், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.கைலாசநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் -

வலிகாமம் மேற்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இளைப்பாறிய ஆசிரியர் வே.முத்துலிங்கம் நிறுவுநர் நினைவுரை நிகழ்த்துவார். (எ-29)

## பொதுக்கூட்டம்

தென்மராட்சி,ஜன.30

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ பழநி சிக்கனக் கடனுதவுக் கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஸ்ரீ பழநி ஆண்டவர் ஆலய மண்டபத்தில் சங்கத் தலைவர் திருமதி உ.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் வி.சிவகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (த-117-202)

## சப்பச்சிமாவடிக் கிளை திறந்துவைக்கப்பட்டது

தென்மராட்சி,ஜன.30

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் புனரமைக்கப்பட்ட சப்பச்சிமாவடிக் கிளை அண்மையில் சங்கத் தலைவர் கு.ந.பாலச்சந்திரனால் திறந்துவைக்கப்பட்டது.

யுத்தத்தினால் சேதமடைந்த கிளைக் கடைகளில் எட்டு லட்சம் ரூபா செலவில் ஐந்து கிளைக் கடைகள் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## சாவகச்சேரியில் தங்கியுள்ள முல்லைத்தீவு மாணவர்கள் டிறிபேர்க்கில் இணைப்பு

தென்மராட்சி,ஜன.30

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்டு சாவகச்சேரியில் தங்கியுள்ள மாணவர்கள், சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இணைக்கப்படவுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கல்லூரி அதிபருடன் நடத்திய பேச்சுக்களையடுத்து மாணவர்களை இணைக்க ஒழுங்கு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தரம் 6 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களே டிறிபேர்க் கல்லூரியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்றும் -

தரம் 5 இற்கு உட்பட்ட மாணவர்கள் சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இணைக்கப்படுவர் என்றும்- கூறப்பட்டது. (எ-117)

## குடும்பஸ்தர் காயம்!

தென்மராட்சி,ஜன.30

இராணுவ வாகனம் மோதிக் குடும்பஸ்தர் காயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் பகல் மிருசுவில் ஏ-9 வீதியில் சைக்கிளில் சென்ற எழுதுமட்டுவாழ் வடக்கைச் சேர்ந்த இராசதுரை பாலகிருஷ்ணன் (வயது - 45) என்பவரே காயமடைந்தவராவார்.

கொடிகாமம் பொலீஸார் காயமடைந்தவரை சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர்.

தலையில் காயமும் உடலில் உராய்வுக் காயமும் ஏற்பட்ட நிலையில் அனுமதிக்கப்பட்ட நபர் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (எ-117)


பாடசாலை வான் சேவை
புத்தம் புதிய ரக வான் மூலம் நவாலியிருந்து (மானிப்பாய் ஊடாக) யாழ். நகரப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட சேவை 01.02.2005 தொடக்கம் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை அறியத்தருகிறோம்.
தொடர்பு: T.P.: 0773146048
ஜோதி தொலைத்தொடர்பகம்
நவாலி வடக்கு
(41462) T.P.: 021 222 7066 (24)

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றுவதற்குக் கீழ்க்குறிப்பிடப்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி செய்து தரப்படும்.
01. பதிவு வைத்தியர்கள் (RMO/AMP)
02. தாதிய உத்தியோகத்தர்கள் (Nursing Officer)
03. மருத்துவ மாதுக்கள் (Midwives)
04. எக்ஸ் கதிர் தொழில்நுட்பவியலாளர்கள் (X-Ray Technician)
05. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் (Laboratory Technician)
சுயவிவரத்துடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தலைவர்,
மருத்துவசங்கம்,
மாவட்ட வைத்தியசாலை,
கிளிநொச்சி.
T.P.: 021 228 5719 பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
T.P.: 021 228 5810 மாவட்ட வைத்தியசாலை
E-mail _ kili medical @yahoo.com. (சி-40714)(24-14-17-29)



உ
சிவமயம்
உடுப்பிட்டிசந்தி இமையாணன் வல்லைவாழி
## திருவருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் திருக்கோவில்
புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ
# மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்
தாரண வருடம் தைத்திங்கள் 18 ஆம் நாள் (31.01.2005) திங்கட்கிழமை

**மெய்யடியார்களே!**

ஸ்வஸ்தி நிகழும் மங்களகரமான தாரண வருடம் தைமாதம் 18 ஆம் நாள் (31.01.2005) திங்கட்கிழமையும், சித்தியோகமும் அத்த நட்சத்திரமும் சஷ்டித்திதியும் கூடிய காலை 9.45 மணிமுதல் 10.45 மணி வரையுள்ள மீனலக்ன சுபமுகூர்த்த வேளையில் வல்லைவாழி சித்தி விநாயகப் பெருமானுக்கும், வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமானுக்கும், லட்சுமிதேவிக்கும், வைரவப்பெருமானுக்கும், சண்டேஸ்வரப் பெருமானுக்கும் மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அத்தருணமும் அதற்கு முன்பும் நடைபெறும் கிரியைகளில் அடியார்கள் ஆசாரசீலர்களாக வருகைதந்து விநாயகப்பெருமானை வழிபட்டு திருத்தொண்டுகள் புரிந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**ஆலயகுரு சிவஸ்ரீ தி.ஜெயச்சந்திரக் குருக்கள்**

சர்வபோதகாசிரியர்
ஆகமக் கிரியா ஜோதி, துவஜாரோஹண துரந்தரர், கிரியா கிரம விஷாரத
சிவஸ்ரீ சதா.
மகாலிங்கசிவக்குருக்கள் J.P.
பிரதமகுரு, யா/நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம், நல்லூர்.

கும்பாபிஷேக குருமார் விபரம்
கும்பாபிஷேக பிரதமகுரு
சாதகஞானபானு, பத்தி வித்தக சிரோண்மணி
சிவஸ்ரீ ந.கேதீஸ்வரக்குருக்கள்
பிரதி அதிபர், சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி, திருநெல்வேலி. பிரதமகுரு, அநுராதபுரம் கதிரேசன் கோவில்.

சர்வசாதகாசிரியர்கள்
கிரியா சிரோண்மணி
சிவஸ்ரீ
சி.மகேந்திரநாதக்குருக்கள்
விரிவுரையாளர், சைவக்குருமார் பயிற்சிக் கல்லூரி.

(41470)(38-18-16) ஆலய திருப்பணிச் சபையினர்.


# ஆங்கிலம் பேச்சுப் பயிற்சி



- ஆங்கிலம் உச்சரித்தல் , வாசித்தல், எழுதுதல்.
- பாத்திரமேற்று உரையாடுதல். (Role Play)
- வாக்கியமமைத்தல்.
- செவிமடுத்தல், கிரகித்தல்.(Listening & Comprehension)
- விமான நிலையம், குடிவரவு, குடியகல்வு அலுவலகம், வெளிநாட்டுத் தூதரங்கள் போன்றவற்றில் அதிகாரிகள், பணியாளர்களிடம் உரையாடும் முறை, நேர்முகத் தேர்வுகளில் பதிலளித்தல்.
- அன்றாடம் எமது தேவைகளுக்கான அலுவலகங்களில் ஆங்கிலத்தில் உரையாடுதல், ஆங்கிலத்திலான ஆவணங்களை கையாளுதல்.
- நாளாந்த வழமையான செயற்பாடுகளுக்கான உரையாடல்.

ஆகிய உள்ளடக்கங்களைக் கொண்ட **Diplomo in English** → சான்றிதழ் கற்கை நெறி
BATCH - VI ஆரம்பம் 31.01.2005 திங்கள் காலை 3.00 மணி

## LONDON ENGLISH COLLEGE
#105, Arasady Road, Jaffna. Hotlines: 021-2225889 0777-252180, 0776910072


# பணியாளர்கள் தேவை

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான பணியாளர்கள் தேவை. தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப முடிவு திகதி - 01.03.2005

1. களஞ்சியக் காப்பாளர் - 01 எண்
   - ✓ G.C.E. A/L
   - ✓ கணக்கியல் துறையில் டிப்ளோமா/தேசிய சான்றிதழ் பயிற்சி
   - ✓ 02 வருட வேலை அனுபவம்
2. இலிகிதர் - 04 எண்
   - ✓ G.C.E. A/L
   - ✓ பொது சேவை அனுபவம்
3. கள மேற்பார்வையாளர் - 03 எண்
   - ✓ G.C.E. A/L
   - ✓ பொது சேவை அனுபவம்
   - ✓ வடமராட்சிப் பகுதியில் குடியிருப்பவர்
   - ✓ மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம்

நிர்வாகம்,
TRRO. (சி-40717)(38-18-16)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

# பதவி வெற்றிடம்

முல்லைத்தீவுக்கு அண்மையில் வைத்தியசாலை நிர்மாண வேலைக்கு கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்
   தகைமை: NDT உடன் 05 வருட அனுபவம் அல்லது NCT(Civil) உடன் 10 வருட கட்டட மேற்பார்வை அனுபவம்.
2. கட்டட மேற்பார்வையாளர்
   தகைமை: NCT(Civil) உடன் 2 வருட அனுபவம்
3. களஞ்சியக் காப்பாளர்
   தகைமை: 03 வருட அனுபவம்

தகுதியானவர்கள் சுய விவரங்களை 07.02.2005 இற்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

யூரோவில்,
866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(41474)(38-18-16)

# தேவை

- ★ மருந்து விற்பனையில் அனுபவம் உள்ள பெண் பிள்ளைகள் தேவை.
- ★ தாதிப் பயிற்சிபெற விரும்புவோர் நேரில் சமுகந்தரவும்.
- ★ நிர்வாகத் திறமையுள்ள ஓரளவு படித்த 35 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட குடும்பப் பொறுப்பற்ற பெண் தேவை.
- ★ கணனி அறிவுள்ள கணக்கு லிகிதர் தேவை (A/L கல்வித் தகைமை விரும்பத்தக்கது)

08A, சம்பந்தன் மொடேர்ன் கிளினிக்
இராமையா செட்டியார் லேன்,
அமுல் கிறீம் ஹவுஸ் (அருகில்),
யாழ்ப்பாணம்.

(41469)(38-18-16)

# மரண அறிவித்தல்

## கந்தையா மார்க்கண்டு

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் அச்செழுவை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா மார்க்கண்டு அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவபாக்கியம், நாகேஸ்வரி, இராசரத்தினம, பொன்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மகேந்திரன், தெய்வேந்திரம், யோகராணி, புலேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் அச்செழு மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்செழு, நீர்வேலி.* (41476) (38-18-16)
தகவல்:
தவராசசிங்கம் (பெறாமகன்)

## விண்ணப்பம் நிரப்பி அனுப்பும் கால எல்லை இருவாரத்துக்கு நீடிப்பு

காரைதீவு,ஜன.30

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து தரம் I அதிபர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களை நிரப்பி மீள அனுப்புவதற்கான கால எல்லை மேலும் இருவாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பப்படிவங்களை நிரப்பி அனுப்புவதற்கான முடிவுத் திகதி ஜனவரி 31 என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், சுனாமியில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த தரம் I அதிபர்கள் தமக்கு மேற்படி விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கவில்லை என தம்மிடம் முறையிட்டிருந்தனர் என்றும் -

இதனையடுத்து, கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி பண்டாரவுடன் தாம் பேச்சு நடத்தியதை அடுத்து விண்ணப்பப்படிவங்களை நிரப்பி அனுப்பும் திகதி நீடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும் மகாசிவம் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையில் கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு சேவைமூப்பு மற்றும் திறமை அடிப்படையில் பரீட்சைக்குத் தோற்றிய அனைதது தரம் I அதிபர்களும் தமக்கு அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்ப படிவங்களை நிரப்பி அனுப்பும் திகதி நீடிப்பு என்பதே 'கல்வி நிர்வாகசேவைக்கு விண்ணப்பிக்கும் கால எல்லை இருவர்ரங்களுக்கு நீடிப்பு' என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் 11 ஆம் பக்கத்தில் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. (எ)

## மானிப்பாய் கிளைகளில் நிவாரணம் விநியோகம்

மானிப்பாய் ப.நோ.கூ.சங்கக்கிளைகள் மூலம் இடம்பெயர்ந்தவர்களுக்கான உலர் உணவு நிவாரணம் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, பங்கீட்டு அட்டைக்கு குடும்ப அங்கத்தவர்களின் தொகைக்கு ஏற்ப மாவும் வழங்கப்பட்டு வருகின்றது. (எ-100)

## குப்பிவிளக்கு வெடித்து சிதறியதில் இருவர் காயம்

வடலியடைப்புப் பகுதியில் உள்ள வீடொன்றில் எரிந்துகொண்டிருந்த குப்பிவிளக்கு வெடித்துச் சிதறியதில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்த வீட்டில் இருந்த கணவனும் மனைவியும் படுகாயமடைந்தனர்.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த பத்மநாத் (வயது 37), அவரது மனைவியான பத்மலதா (வயது 28) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் இருவ ரும் சிகிச்சைக்காக யாழ் போதனா வைததிய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (எ-203-ரி)

## கலாசார மண்டபத்துக்கு 5 லட்சம் ரூபா நிதியுதவி

சங்கானையில் அமைக்கப்படும் கலாசார மண்டபத்தின் நிர்மாணப் பணிகளுக்கு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சு 5 லட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

சங்கானை தெற்கு கிராமசேவை அலுவலர் பிரிவில், மாவடி இந்து இளைஞர், மகளிர் மன்றத்தால் இந்த மண்டபம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிதிக்கான காசோலையைக் கொழும்பில் உள்ள அமைச்சின் தலைமை அலுவலகத்தில் வைத்து மன்றத்தைச் சேர்ந்த தலைவர், பொருளாளர் ஆகியோர் பெற்றனர். (து-202-29)


## விற்பனைக்கு

சட்டநாதர் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள ஜெகன் வீடியோ ஓடியோ சென்ரரில் நல்ல நிலையிலுள்ள AIWA, AKAI றெக்கோடிங் கெசற டெக், Sony T.V (மொடல் No 20,32 20,90), Pana Sonic டிவிடி (DVD) பிளேயர், மோட்டோறோலா கானபோன், PIONEER டெக் செற், SHARF வீடியோ டெக் என்பன விற்பனைக்குண்டு.

மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 0777 042716 (41457) (38-18-16)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பத்மாவதி பத்மநாதன்



முதலாம் குறுக்குத் தெரு, கொழும்புத் துறையைப் பிறப்பிடமாகவும் 19/1, கொழும்புத் துறை வீதி, சுண்டுக்குளியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி பத்மநாதன் அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் திருநாவுக்கரசு - சந்திரமலர் தம்பதியினரின் அன்பு மகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் மதனிக்காவின் அன்புத் தாயாரும் பத்மயோகன் (சுரேஸ் - நஷனல் எலக்ரோணிக் உரிமையாளர்), பத்மஸ்ரீ, பத்மசிவகுணதாஸ், பத்மபிரியன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2005) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.19/1,கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி.* (41475)(38-18-16)
தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி வின்சஸ்லாஸ் அருந்தவநாயகி



(முன்னாள் தாதிய உத்தியோகத்தர் கூட்டுறவு வைத்தியசாலை மூளாய், தனியார் வைத்தியசாலை ஆனைப்பந்தி, Dr.வில்லியம் சோமசுந்தரம் ஹோமியோபதி வைத்தியசாலையின் பிரதம எழுதுவினைஞரும் தற்போது Dr.சம்பந்தன் வைத்திய நிலையம் இராமச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம் - பிரதம மருந்துக் களஞ்சியப் பொறுப்பாளர்.)

நல்லூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வின்சஸ்லாஸ் அருந்தவநாயகி அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - தெய்வானை தம்பதிகளின் ஏகபுத்திரியும் சிவலிங்கம் (அரசினர் வைத்தியசாலை, பளை) அவர்களின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை பூமணி, மாணிக்கம் சின்னத்தங்கம் ஆகியோரின் பெறாமகளும் ஐயாத்துரை - பாறுவதி தம்பதிகளின் மருமகளும் ஜெயரத்தினம், Dr.யோகராஜா, பாலச்சந்திரன், தெய்வேந்திரன், புவனேந்திரராஜா, சொர்ணகாந்தரூபி, இரவீந்திராதேவி, மதுரநாயகம், சுப்புலட்சுமி, வரதலட்சுமி, அன்னலட்சுமி, மகாலட்சுமி, வசந்தகுமாரி, காலஞ்சென்ற செல்வநாயகம் ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியும் சோதிலட்சுமி, சத்தியசீலன், இராசரத்தினம், நாகரத்தினம், சந்திரன், புவனேஸ்வரி, குமார், ராணி, மணி ஆகியோரின் மைத்துனியும். சத்தியவாணியின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கில் அமைந்திருக்கும் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் எக்காளத்தொனி சேமக்காலை கொட்டடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.* (41478)(38-18-16)
தகவல்:
க.ஐ.சிவலிங்கம் (சகோதரன்).

## கந்தசாமி நல்லதம்பி

மயிலியதனையைப் பிறப்பிடமாகவும் தற்போது யாழ் வீதி உடுப்பிட்டி வாசிகசாலையடியை வதிவிடமாகவும் கொண்ட கநதசாமி நல்லதம்பி அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - செல்லம்மாவின் அன்புப் புதல்வரும் சிந்தாமணி - காந்தியம்மாவின் மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நகுலேந்திரன் (கண்ணன், சேவைலங்கா மன்றம் , முல்லைத்தீவு), கலைவாணன் (F.R.C. யாழ்ப்பாணம்), கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவாணியின் அன்பு மாமனாரும் ஞானாம்பாள் (கனடா), தங்கப்பாக்கியம் (டென்மார்க்), காலஞ்சென்ற துரைராஜசிங்கம், செல்லப்பாக்கியம்(தாதி உத்தியோகத்தர், தெல்லிப்பழை), குணபாலசிங்கம் (லண்டன்), அழகரத்தினம், வீரசிங்கம், இரத்தினசிங்கம் (பிரியா ஸ்ரோர், மட்டக்களப்பு), அன்னலட்சுமி, மகேந்திரராணி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இறுதிக்கிரியைக்காக இன்று (30.01.2005) ஞாயிற்றுக்கிழமை (புதிய நேரம்) பி.ப. 2 மணியளவில் நல்லடக்கத்திற்காக மயிலியதனை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்.வீதி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, உடுப்பிட்டி.* (41477)(38-18-16)
தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

# அவசர காலநிலையை நீடிப்பதா? கட்சித் தலைவர்கள் கூடி ஆராய்வர்

கொழும்பு.ஜன.30

கடந்த 14ஆம் திகதி ஜனாதிபதி பிரகடனம் செய்த அவசரகால நிலையை நீடிப்பதா? இல்லையா? என்பது குறித்து கட்சித் தலைவர்கள் ஆராயவிருக்கின்றனர்.

நாளைமறுதினம் நடக்கவிருக்கும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் இது குறித்து ஆராயப்படும்.

சபாநாயகர் லொக்கு பண்டார தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்திற்கு சகல கட்சிகளின் தலைவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை -

இறந்தவர்களுக்கு உடனடி மரணச் சான்றிதழ் வழங்கல், பிள்ளைகளைத் தத்தெடுத்தல் போன்றவற்றை மேற்கொள்ள அவசரகால நிலை தேவையாக உள்ளது என்றும்-

அதற்கு வசதியாக அவசரகால நிலையை நீடிக்க வேண்டியது அவசியம் என்றும் - ஜே.வி.பி. தலைவர்கள் தெரிவித்தனர்.(எ-3)

# முஸ்லிம் சமாதான செயலகம் மூலம் நிதிவழங்குமாறு ஹக்கீம் கோரிக்கை

கொழும்பு.ஜன.30

சுனாமி அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு முஸ்லிம் மக்களின் மீள் கட்டுமானத்துக்கு முஸ்லிம் சமாதான செயலகம் ஊடாக நிதி வழங்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சர்வதேச அமைப்புக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, நாணய நிதியம் ஆகியவற்றின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதிகளைச் சந்தித்து இக்கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

சுனாமியால் முஸ்லிம் மக்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவர்களின் மீள்கட்டுமானத்துக்கு பெருமளவுநிதி தேவையாக உள்ளது.

இதற்கான நிதியை சர்வதேச சமூகமும், இலங்கை அரசும் முஸ்லிம் சமாதானச் செயலகம் ஊடாக வழங்க வேண்டும் - என்று கேட்டுள்ளார் ஹக்கீம். (எ-3)

# தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(ஜே.வி.பி.). ராஜ கொலுரே(கம்யூனிஸ்ட்) ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

ஆனந்தசங்கரி உரையாற்றுகையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை விமர்சித்தார்.

ஒரு கட்டத்தில் -

விடுதலைப் புலிகளுக்கு என்று ஒரு சட்டக் கல்லூரி, நீதிமன்றம், தனியான காவல்துறை ஆகியன செயற்படுகின்றன. அவற்றை நிர்வகிப்பவர்களே நாட்டின் சட்டம் ஒழுங்கைப் பேணாதிருக்க, அங்கு எவ்வாறு சட்டம் ஒழுங்கு பேணப்படும் என்று எதிர்பார்ப்பது - என்று கேள்வி எழுப்பினார் ஆனந்தசங்கரி.

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 22 கூட்டமைப்பு எம்.பிக்களும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர். அவர்கள் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் என்று ஆனந்தசங்கரி கூறினார்.

இக்கருத்தமர்வில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களாக சுரேஷ் பிரேமச்சந்திரன், மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

பார்வையாளர்களுக்கு உரையாற்ற அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் தமிழ்க்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ஆனந்தசங்கரியின் கருத்தை மறுத்துக் கருத்துத் தெரிவித்தார்.

கடந்த தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி கண்ட ஆனந்தசங்கரிக்கு, தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக கூட்டமைப்புக்கு வாக்களித்[...] தெரியாமல் இருப்பதுதான் வேடிக்கை[...] உள்ளது.

தமிழ்க் கூட்டமைப்பின் எம்.பியாக இ[...] போது வன்னி சென்று விடுதலைப் பு[...]டன் பேச்சு நடத்தியதைக் கூட ஆனந்தச[...] மறந்துவிட்டாரா? அப்போது அவர் த[...] மக்களின் பிரதிநிதியாக இருந்தாரா? [...]தலைப் புலிகளின் பிரதிநிதியாக இருந்த[...] என சுரேஷ் பிரமச்சந்திரன் கேள்வி எழு[...]னார்.

இதற்குப் பதில் அளிக்க சந்தர்ப்பம் தரும[...] ஆனந்தசங்கரி கூட்டத் தலைவரைக் கோரின[...]

ஆனந்தசங்கரிக்குப் பேசச் சந்தர்ப்பம் வழங்[...]கினால் தனக்கும் சந்தர்ப்பம் வழங்கவே[...]டும் என்று அங்கு சமுகமளித்திருந்த மா.க.ஈழவேந்தன் கோரினார்.

ஆனந்தசங்கரிக்கு சந்தர்ப்பம் வழங்க கூட்டத் தலைவர் மறுத்துவிட்டார். கூட்டமும் முடிந்தது. (எ-3)

# கொரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்ணன், வண.பிதா.ராஜ்குமார் அடிகளார், யாழ். தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொரிய அரசு வழங்கிய உதவிகளுக்கு நன்றி தெரிவித்த இளம்பரிதி, அரச உதவிகள் தமிழ் மக்களுக்கு கிட்டவில்லை என்று தெரிவித்தார். (3-12)

# வடக்கு - கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறப்பதற்கும் அவர்கள். மீண்டும் தமது தொழிலை ஆரம்பிப்பதுதான் ஒரேவழி.

இதனை நோக்கமாகக் கொண்டு அவர்களின் சேதமடைந்த படகுகளைத் திருத்தி அவர்களிடம் கையளிப்பதற்காக படகு திருத்தும் தொழிலகங்களை வடமராட்சி கிழக்கு, முல்லைத்தீவு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அமைத்துள்ளோம்.

அத்துடன், முந்நூறு படகுகளையும் அதற்கான இயந்திரங்களையும் மீனவர்களுக்கு வழங்கவிருக்கின்றோம் - என்றார் அவர்.

# அமெரிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம் ஒன்றையும் அவர்கள் அமைத்துப் பணிபுரிந்தனர். அமெரிக்கக் கடற்படையினர் காலி, அம்பாறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் தமது ஆரம்பப் பணிகளை சிறப்புற மேற்கொண்டனர் என்று தூதரக அதிகாரி தெரிவித்தார்.(எ-3)

# பாலசிங்கம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி, நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, மூத்த பிரமுகர் பாலகுமாரன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், தளபதிகளான கேணல் சொர்ணம், கேணல் சூசை, கேணல் பானு, கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா உட்படப் பலர் அங்கு கூடி பாலசிங்கம் தம்பதியரை வழி அனுப்பி வைத்தனர். அன்ரன் பாலசிங்கம் தம்பதியர் இன்று அதிகாலை கட்டுநாயக்கவிலிருந்து லண்டன் புறப்படவிருந்தனர். (எ-3)

# மரண அறிவித்தல்கள்



## லயன் கார்த்திகேசு செல்வரட்ணம்

*(இளைப்பாறிய நில அளவை அதிகாரி, மானிப்பாய் பரீஸ் லயன் கழக உறுப்பினர், ஆனைக்கோட்டை சம்பந்தப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா)*

## லயன் சீமாட்டி செல்வரட்ணம் நாகராணி

பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கைச் சேர்ந்த கா.செல்வரட்ணம், செ.நாகராணி ஆகியோர் 27,28-01-2005 இல் காலமானார்கள்.

அன்னார்கள் காலஞ்சென்ற திரு.திருமதி கார்த்திகேசு தம்பதியரின் அருமைப் புதல்வனும் காலஞ்சென்ற திரு.திருமதி கு[...] சுவாமி தம்பதியரின் புதல்வியும் ஆவர்.

இவர்கள் காலஞ்சென்ற தியாகராசா, விக்னேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், பிலியந்தலை) ஆகியோரின் சகோதரனும் மைத்துன[...]யும் சிவனம்மா, தவரட்ணம் ஆகியோரின் சகோதரியும் சகோதரனு[...] மைத்துனியும் முரளீதரன் (Norway), அருணன் (U.K.), மணிமாறன் (U.K.) ஆகியோரின் பாசமிகு தந்தை, தாயாரும் காந்திமதியின் வளர்ப்புத் தந்தை, தாயாரும் சுகந்தி, சிவானி, கமலினி ஆகியோரின் அருமை மாமன், மாமியாரும் அஞ்சலன், அஜந்தன் ஆகியோரின் அருமைப் பேரனும் பேர்த்தியும் ஆவர்.

அன்னார்களது இறுதிக்கிரியைகள் அவர்களின் இல்லத்தில் நாளை (31-01-2005) திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல்கள் ஆனைக்கோட்டை காக்கைதீவு, கரையாம்பிட்டி இந்துமயானத்துக்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*பிள்ளையார் வீதி,*
*ஆனைக்கோட்டை வடக்கு,*
*ஆனைக்கோட்டை.*
*(41460)(26-14-15)*

தகவல்:
சகோதரன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரர்கள்.

## இராயப்பு செல்வராஜா நேசம்மா

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு செல்வராஜா நேசம்மா அவர்கள் நேற்று (29.01.2005) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*பிரதான வீதி,*
*மாதகல்.*
*(41479)(38-18-16-45)*

தகவல்:
யேசுநேசன்
(மகன்).


வடமராட்சியில்......

English Medium Classes

GRADE:- 6,7,8

ஆசிரியர்:- P. ஈஸ்வரநாதன் B.Sc. (Agri.). Dip.in.Ed.

இடம்: (1) வதிரிச்சந்தி :- Gr.7 மட்டும்
(2) கரவெட்டி :- Gr. 6,7 மட்டும்
(3) பருத்தித்துறை சயன்ஸ் சென்ரர் :- Gr.6,7,8

குறிப்பு:-
(1) 04-02-2005 இற்கு பின்னர் இவ்வருடத்திற்கான அனுமதிகள் வழங்கப்படாது.
(2) உங்கள் தாமதம் உங்கள் பிள்ளையின் கல்வியில்தான் பாதிப்பை ஏற்படுத்தும்.

தொடர்புகளுக்கு:-
"ரவீன்ஸ்"-
சிங்கத்தின் வீடு,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

T.P-021-226 3321
060-221 2408 (41418)(43-11-45)

அதிரடிச் சலுகை.......

ஒரேதடவையில் பெருமளவு புகைப்படச் சுருள்களை பிரதியாக்கம் செய்வோருக்கு விஷேட விலைக்கழிவு

4R - 9.75 சதம் மட்டுமே!

இன்னும் கொழும்பு செல்லவேண்டுமா?

இலவசமாகப் பதிவு செய்து தருகின்றோம்

MOORTHY LAZER DIGITAL COLOUR LAB

யாழ்.வீதி, மானிப்பாய். (சி-40690)(43-11-45)

மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பட்டுத்தரப்படும்.

IDD 25/= மட்டும்

ஒரு வருட உத்தரவாதம் உண்டு

14,000/= மட்டும்

கையிருப்பு உள்ளவரை

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணை நிறுவனம். மேலதி விபரங்களுக்கு:

பவர் செலூலர் ரேடிங் கம்பனி

Office: இல. 185, ...கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். Tel: 021 222 7070, 0712 399 220, 0777 281 521

Shop: இல. 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்

UNIT

எமது விபரங்களுக்கு 4ஆம்பக்கம் பார்க்கவும்

CATWAS.COM
Computer Academy

N0.26, Somasundram Avenue, Chundukuli. T.P.: 021 222 3805

One Month Online Batches

1.Microsoft Office
2.Hardware
3.Desktop Publishing
01.02.2005 ஆம் திகதி ஆரம்பமாகும். (சி-40673)

EXPOAIR your friend in the skies...
எக்ஸ்போ ஏயார் வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்

30.01.2005

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சுனாமியின் காயங்கள் ஆறத் தொடங்கிவிட்டனவா?

சுனாமியால் உயிரிழந்துபோன அன்பு உறவுகள் அடக்கம் செய்யப்பட்ட ஸ்தானங்களில் 26.01.2005 அன்று ஒரு மாதம் கடந்ததைக் குறிக்கும் நிகழ்வுகளில் வாய்விட்டு அலறி அழுது கண்ணீர் அஞ்சலி செய்துள்ளோம்.

அரசும் விடுதலைப் புலிகளும் தத்தமது சமாதானச் செயலகங்களுக்கு ஊடாகக் கலந்துரையாடல்களை நடத்தி வடக்கு - கிழக்கு சுனாமி அழிவுகளுக்கான புனர்வாழ்வு புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க முயற்சித்தவண்ணம் இருந்தன என்றும் கடந்த வாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

**நிம்மதிப் பெருமூச்சு உருவாகுமா?**

அவ்வாறான ஒரு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு ஆக்கபூர்வமாகச் செயலாற்றும் பட்சத்தில் சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படுவதற்கும் வடக்கு - கிழக்குக்குரிய இடைக்கால நிர்வாக சபை



அமைக்கப்படுவதற்கான அத்திபாரம் இடப்படுவதற்கும் சாத்தியக்கூறுகள் உருவாகலாம் என்று கிளிநொச்சியில் நோர்வேப் பிரதிநிதிகள் நம்பிக்கை கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளுடன் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்ஸன் தலைமையிலான தூதுக்குழு கடந்த 22.01.2005 சனிக்கிழமை பேச்சுகளை நடத்திய பின்பு, இவ்வாறான நம்பிக்கையை நோர்வேப் பிரதிநிதிகள் கொண்டுள்ளனர் என்று விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களிடம் கூறினார்.

நோர்வே பிரதிநிதிகளுடன் விடுதலைப்-புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையிலான அணி பேச்சை நடத்தியபோது இலங்கை அரசுடன் வேறு வெவ்வேறு விவகாரங்களில் தாங்கள் முரண்பட்டுக் கொண்டாலும் சுனாமி அழிவிலிருந்து வடக்கு - கிழக்கை மீட்டெடுக்கும் புனர்நிர்மாண விவகாரங்களில், இரு தரப்பும் பங்காற்றும் பொதுக்கட்டமைப்பு ஒன்றினூடாக ஒத்துழைப்பு வழங்கத் தாம் தயாராக இருப்பதாக வே.பிரபாகரன் கூறியுள்ளார் என்றும் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

சுனாமி அழிவிலிருந்து பொதுமக்களை மீட்டு புனர்வாழ்வையும் புனர்நிர்மாணத்தையும் மேற்கொள்வதற்காக ஒரு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால் உண்மையில் அவ்விடயம் வடக்கு-கிழக்கு சமூகங்களின் நிம்மதிப்பெருமூச்சை உருவாக்கும். நல்விடயமாக அமையும். அதுவே சமாதானப் பேச்சுகளின் உயிர்ப்புக்கும் இடைக்காலத் தீர்வுக்கும் வழிகோலும் என்றால், சுனாமியால் நிகழ்ந்த பல்லாயிரக்கணக்கானவர்களின் சாவுகளும் இலங்கையின் அர்த்தமுள்ள சமாதானத்துக்கு வழிகோலிய உயிர்த் தியாகங்கள் என்ற பரிமாணத்தைப் பெற்றுப் பெறுமதியடையும்.

**பொருளாதார வறுமையும் மனத்துயரமும்**

இருபத்தைந்து வருடங்களாக நடந்துகொண்டிருந்த கொடிய யுத்தம், ஆயிரக்கணக்கான இளம் பெண்களை விதவைகளாக்கியது. போரில் ஆயுதங்களின் பிரயோகங்களால் பல்லாயிரம் குடும்பங்களின் தலைவர்கள் அழிந்து போயினர். அப்பெண்களும் அவர்களது குழந்தைச் செல்வங்களும் பொருளாதார வறுமையிலிருந்தும் மனத்துயரங்களிலிருந்தும் மீள முடியாமல் போராடுகின்றனர்.

சுனாமி, குடும்பங்களிலுள்ள பெண்களையும் குழந்தைகளையும் உயிரிழக்க வைத்தது. உயிர்தப்பிய தத்தமது பிள்ளைகளுடன் ஆண்கள் தனித்துள்ளனர். ஏற்கனவே போரினால் கடுமையான பாதிப்புகளுக்கு முகம்கொடுத்த வடக்கு - கிழக்கு கரையோரக் கிராமங்கள், நகரங்கள் ஆகியனவற்றின் அதே மக்களே மீண்டும் சுனாமியாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**அரசியல், இராணுவமயப்பட்ட பொருளாதாரத் தீர்வுகள்**

பாதிக்கப்பட்டவர்கள் மீள மீள பாதிக்கப்படும்போது பொருள்சார் தேவைகளைப் பூர்த்தி செய்தல் (Fulfilling the material needs), உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல் (Fulfilling the Psychological needs) ஆகிய இரண்டு விடங்களுக்குமான கட்டமைப்புக்கள் ஒருங்கிணைவுடன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவாக அமைக்கப்பட்டு, இல்லாமல் போன அனைத்தையும் மீளக்கட்டி அமைத்தல் எனும் செயற்பாடு ஆரம்பக்கட்டம், இரண்டாம் கட்டம் , மூன்றாம் கட்டம் என மூன்று கட்டங்களினூடாக விரைவுபடுத்தப்படுவதே இலட்சிய பூர்வமான (ideal) அணுகுமுறையாகும்.

போரியல் அழிவுகளிலும் சரி, சுனாமி அழிவுகளிலும் சரி பாதிக்கப்படும் பொதுமக்களின் பொருள்சார் தேவைகளைப் பூர்த்திசெய்தல் என்பது இலங்கையின் வடக்கு- கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் அரசியல், இராணுவ அமைப்புக்களுடன் சம்பந்தப்பட்ட அரசியல் இராணுவ மயப்பட்ட தீர்மானங்களுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டே இருந்துவந்துள்ளது. அவ்வாறு அரசியல், இராணுவ மயப்பட்ட தீர்மானங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சற்றுச் சாதகமாக அமைகின்ற வேளைகளில் கூட வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பொதுநிர்வாகத்துறையின் வளப்பற்றாக்குறைகள் காரணமாகப் புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்பன மந்த கதியில் நகர்ந்தமையே அனுபவக் கசப்புக்களாக உள்ளன.

**உளவளத்துணையும் உளவியல் சிகிச்சையும்**

போரியல் அழிவுகளால் உள நோய்களுக்குள்ளான நூற்றுக்கணக்கானோர் இன்னமும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உளநோய் சிகிச்சை நிபுணர்களிடமும் உளவளத்துணையாளர்களிடமும் சிகிச்சை பெற்று வருகின்றனர். கலை, இலக்கிய வடிவங்களைக் கூட உளவியல் சிகிச்சைக்கான கருவிகளாக உபயோகிக்கும் முறைமை வெற்றியளித்துள்ளது. வடக்கு- கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அறிவும் ஆற்றலுமுள்ள உளநோய் சிகிச்சை நிபுணர்கள் ஒரு சிலராயினும் உள்ளனர். அவர்களின் வழிகாட்டுகையுடன் உருவான பல உளவளத்துணையாளர்களும் உள்ளனர். இவ்வாறான உளவளத்துணையாளர்கள், நிபுணத்துவப் பங்களிப்புடன் கூடிய நன்கு திட்டமிட்ட நீண்ட பயிற்சிகள் வழங்கப்பட்டே உருவாக்கப்படுகின்றனர் என்பதை யாழ்.நகரிலுள்ள 'சாந்திகம்' உளவளத்துணை நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் உளநோய் சிகிச்சைத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் விளக்கியிருந்தார். அனர்த்தகால உளநலப் பணிக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட அந்த செய்தியாளர் சந்திப்பில் உளவியல் சிகிச்சைத்துறை சார்ந்த மருத்துவர்களும் பங்குபற்றியிருந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணைசார்ந்த நடவடிக்கைகளையும் உளவளத்துணைப் பணிகளை மேற்கொள்ளுபவர்களின் உளவளத்தைக் கவனிப்பது (Taking care of care - givers ) சார்ந்த மருத்துவக் கண்காணிப்பு விடயங்களையும் விளக்கிய அவர்கள், இவற்றுக்குத் தேவையான பயிற்சிகளின் முக்கியத்துவங்களையும் விளக்கினர். நிவாரணப் பணியாளர்கள், நிர்வாகிகள், செய்தியாளர்கள் அனர்த்தக் களங்களில் மனப்பாதிப்புக்கு உட்படுவதையும் அவர்கள் உளவளத்துணை பெறவேண்டிய சந்தர்ப்பங்களையும் விளக்கினர். ஆனால், வடக்கு- கிழக்கு பிராந்திய சமூகங்களின் சமூக, கலாசார, பொருளாதார பின்புலங்களை எள்ளவும் விளங்கிக்கொள்ளாத வெளிநாட்டு அமைப்புக்களைச் சேர்ந்த பலர் தாங்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக வந்துள்ளனர். இவர்களில் பலருக்குத் தாம் பணியாற்றப் புகுந்துள்ள பிரதேசத்தின் புவிசார் அமைவிடமே சரியாகத் தெரியாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

**கட்டட இடிபாடுகளும் உளவியல் இடிபாடுகளும்**

சில உள்ளூர் அமைப்புகள் உளவளத்துணை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இரண்டு அல்லது மூன்று நாள் பயிற்சிகளின் பின்பு இளைஞர், யுவதிகளை களமிறக்கியுள்ளன. தாமும் சமூகப்பணி செய்யவேண்டும் என்ற உந்துதலுடன் அவர்கள் களமிறங்கியிருத்தல் பாராட்டத்தக்கதுதான் என்றாலும், கட்டடச் சிதைவுகளையும் கட்டட இடிபாடுகளையும் அகற்றுவது போன்று 'சடுதிபுடுதியாக' உளவியல் சிதைவுகளையும் உளவியல் இடிபாடுகளையும் அகற்றும் பணி அமைந்து விடமுடியாது. உளவியல் பணி என்பது அறிவியல் ரீதியான கற்றல், பயிற்சி நீண்ட அனுபவம் என்பனவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டியவை. நடந்து முடிந்த பேரழிவின் அளவுகூட யார், எப்படி பணியாற்ற விமுடியும் என்பதைத் தீர்மானிக்கும்.

சுனாமிப் பேரழிவால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டோரை ஓரளவுதானும் இயல்பு வாழ்கையின் பங்காளிகளாக்குவதற்குக் கற்றலும் பயிற்சியும் அனுபவமும் மிக்க உளவளத்துணையாளர்கள் ஒன்றரை ஆண்டுகளுக்குத்தானும் தொடர்ச்சியாக முயற்சிக்க வேண்டியிருக்கும் என்று துறைசார்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர் . இப்பணி மிகவும் பொறுமையுடன் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளப்படவேண்டியதாகும்.

**வடக்கு- கிழக்கு முழுவதும் உளவளத்துணைப் பணி**

வடக்கு- கிழக்கின் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் உளவியல் சிகிச்சை நிபுணத்துவ வளம் திறமையானதாகவுள்ளதனால் ஏனைய மாவட்டங்களுக்கும் யாழ்ப்பாணமாவட்டத்திலிருந்து பணிகள் விஸ்தரிக்கப்படவேண்டிய தேவையுள்ளதும் சுட்டிக்காட்டப் படுகிறது. அம்மாவட்டங்களிலிருந்து மருத்துவசேவை, ஆசிரியர்சேவை போன்ற சேவைகளிலுள்ள பொருத்தமான ஆளணியினர் தெரிவு செய்யப்பட்டு உளவளத்துணை சார்ந்த பயிற்சி நெறிகளுக்கும் நிபுணர்களின் வழிகாட்டல், ஆலோசனைகளுக்கும் உட்படுத்தப்பட்டு தத்தம் மாவட்டங்களில் பணியாற்ற அனுப்பப்படலாம்.

கே.வேல்

**சமாந்தரமாக முன்செல்லவேண்டும்**

பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உளவளத்துணை நடவடிக்கைகளுடன் அவர்களுக்கான பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நடவடிக்கைகளும் சமாந்தரமாக முன்னேறிச் செல்லவேண்டும். பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கட்டமைப்புக்கள் உருவாக்கப்படாமல் அந்நடவடிக்கைகள் பின் தேங்கிக்கிடக்குமானால் உளவளத்துணை நடவடிக்கைகளும் உளவியல் சிகிச்சை முறைமைகளும் பலனளிக்காமல்போய்விடும்- உளவளத்துணைப் பணிகள் அரசியல், இராணுவ மயப்படுவதற்கான ஏதுக்கள் எதுவுமில்லை என்பதனால் அப்பணிகள் துரிதகதியில் முன்செல்ல வாய்ப்புக்கள் உண்டு. நிவாரணம், புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் என்பன அரசியல், இராணுவமயப்பட்டிருந்தாலும் சம்பந்தப்பட்டவர்களின் பொருத்தமான பங்களிப்புடன் பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாகும் என்றுதான் எங்கள் மக்கள் எதிர்பார்க்கின்றனர். ★



# அராலித்துறைக் கண்ணித்தாக்குதலின் அவிழாத முடிச்சுகள்...

**விடுதலைப்புலிகளுக்கு எதிரான தீவிர யுத்தத்தில் இலங்கை இராணுவத்தை வழிநடத்தக் கூடிய ஆற்றல் வாய்ந்த படைத் தளபதி என்று சிங்கள மக்கள் பெருமைப்பட்டுக் கொண்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ ஆவார். 'வீர புருஷர்' என இன்றும் தென்னிலங்கை மக்களால் மதிக்கப்படும் கொப்பேகடுவவின் மரணத்துக்கான பின்னணிக் காரணம் பெரும் மர்மமுடிச்சாகவே இன்றும் இருந்து வருகிறது. அராலித்துறையில் மிகவும் நுட்பமாக நடத்தப்பட்ட ஒரு கண்ணி வெடித்தாக்குதலில் கொப்பேகடுவவும் உயர் இராணுவ அதிகாரிகள் சிலரும் கூண்டோடு பலியான சம்பவத்தின் பின்னணித் தகவல்களை அலசும் ஒரு தொடர் இது. தெற்கின் சிங்கள வார இதழ் ஒன்றிலிருந்து தமிழில் சூரியகாந்திக்காக மொழி பெயர்த்துத் தொகுப்பவர்.**

**வீயெஸ்ரீ.**

இரண்டு தசாப்த காலமாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற யுத்தத்தில் 1990 களின் ஆரம்ப கட்டத்தில் வட பிராந்திய இராணுவத் தளபதியாக இருந்து படைகளை வழிநடத்திய மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகக் கருதப்படுகின்றது.

சிங்கள மக்களால் வீர புருஷரெனக் கருதப்பட்ட அவரது யுத்ததந்திர நடவடிக்கைகள் அவ்வேளையில் விடுதலைப் புலிகளுக்குப் பெரும் சவாலாய் அமைந்தன. அதேபோன்று தீவிர யுத்தம் இடம்பெற்ற முக்கிய தருணமொன்றில் நிலக் கண்ணிவெடியில் சிக்கி அவர் உயிரிழந்தமை அவ்வேளையில் அரசுக்குப் பின்னடைவை ஏற்படுத்திய ஒரு சம்பவமாக அமைந்து விட்டது.

உண்மையில் அப்படுகொலைச் சம்பவம் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதொன்றா அல்லது வேறொரு சதிகாரக் கும்பலினால் திட்டமிட்டு நிறைவேற்றப்பட்டதொன்றா என்பது குறித்த சர்ச்சை இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் அடிபடுகிறது.

'வீர புருஷர்கள் ஒரு போதும் மரணிப்பதில்லை' என்ற பழமொழியொன்று வழக்கில் உள்ளது. 1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 8ஆம் திகதி சிங்கள இனத்தைப் பொறுத்த வரை முக்கியமானதொரு தினமாகும்: இப்பழமொழியின் யதார்த்தத்தை உணர்த்தும் விதத்தில் - நீண்டதொரு காலத்துக்குச் சிங்கள மக்களின் நினைவிலிருந்து அகலமுடியாத தினமாக 1992ஆம் ஆண்டின் ஒகஸ்ட் 8ஆம் நாள் அமைந்து விட்டது. அன்று தான் மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ யாழ்ப்பாண மாவட்டத்தின் ஊர்காவற்றுறைப் பகுதியில் - அராலித் துறையில் - நிகழ்ந்த நிலக் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்கி உயிரிழக்க நேர்ந்தது.

நாட்டின் பெரும்பான்மையின சிங்கள மக்களை ஒரு கணம் அதிர்ச்சிக்குள்ளாக்கிய இச்சம்பவம் அவ்வேளையில் அவர்களுக்கு விடுக்கப்பட்ட பாரிய சவாலாகவும் கருதப்பட்டது.

கொப்பேகடுவவின் திறமையும் மதிநுட்பமும் விவாதத்துக்கு அப்பாற்பட்டதொன்று என்பது பெரும்பாலான சிங்கள மக்களது கருத்து: இலங்கையின் உள்நாட்டு யுத்த வரலாற்றில் அவரது திறமையை விஞ்சும் வகையில் வேறெந்த ஓர் இராணுவ அதிகாரியும் சோபித்ததில்லை என்பதும் ஒட்டுமொத்த சிங்கள மக்களது கருத்தாகும். சமாதானத்தை நேசிக்கும் மக்களின் வீர புருஷர் என்ற விதத்தில் அவர் குறித்து சிங்கள மக்களது கண்ணோட்டம் அமைந்திருந்தது.

1987 ஆம் ஆண்டில் கொப்பேகடுவவின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட வடமராட்சி இராணுவ நடவடிக்கை காரணமாகத் தமிழ்ப் பொதுமக்கள் பல வகைகளில் பாதிப்புற நேர்ந்த போதிலும், அதன் மூலம் சிங்களப் பொதுமக்கள் மத்தியில் அவர் வீர புருஷராக இடம் பிடிக்க முடிந்தது.

அவர் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்தவேளையில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பல இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிட்டதோடு தாமே முன்னின்று வழி நடத்தியும் செயற்பட்டார். அதன் பலனாகத் தனது யுத்த ரீதியிலான திறமையைச் சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்துவதில் அவர் வெற்றி கண்டதாகச் சிங்கள மக்களில் பலர் இன்னும் அவர் குறித்துப் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர்.

ஆனால் அவரது அகால மரணம் அவரது அபிமானிகளின் கடும் விமர்சனத்துக்கும், சந்தேகத்துக்கும் காரணமாயமைந்து விட்டது. இதன் பலனாக அவரது மரணம் குறித்த பல தரப்பட்ட செவி வழிச்செய்திகள் பரவலாக உலவத் தொடங்கின.

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவைத் தமது முக்கிய பரம எதிரியாகவே விடுதலைப்புலிகள் கருதினர் என் பதில் சந்தேகத்துக்கே இடமில்லை. ஆயினும் அவர் படுகொலையுண்டதை அடுத்து அப்போதைய ஐ.தே.கட்சி அரசினாலும் கூட அவர் வேண்டப்படாத ஒருத்தராக- அரசின் முக்கியமான எதிரி போன்று கருதி புறக்கணிப்பாக நடத்தப்பட்டதாகச் சிங் கள மக்கள் மத்தியில் பரவலாகக் கதை அடிபட்டது.

ஐ.தே.கட்சி தொடர்ச்சியாக 15ஆண்டு காலம் நாட்டின் அதிகாரத்தை வகித்து வந்த காலகட்டம் அது. தென் பகுதியில் வெடித்த ஜே.வி.பி கிளர்ச்சியை, தயவு தாட்சணியமின்றி இராணுவரீதியில் நசுக்கியதன் காரணமாக, குறிப்பிடத்தக்க அளவுக்கு சிங்கள மக்களின் வெறுப்பை அரசு சம்பாதிக்க நேர்ந்தது. பொது மக்களது இத்தகைய வெறுப்புக்கும் எதிர்ப்புக்கும் உள்ளாகியிருந்ததோடு, அதற்கும் மேலாக வட பகுதியில் அரச படைகளை எதிர்த்துப் போரிட்ட விடுதலைப்புலிகளை ஒடுக்க முடியாத அரசின் இயலாத்தனம் குறித்து வலுவடைந்து வந்த குற்றச்சாட்டுக்கும் அரசு முகம் கொடுக்க நேர்ந்தது.

எமது பாதுகாப்புப் படையினர் யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கக் கூடிய திறன் கொண்டுள்ளனர்; ஆனால், யுத்த நடவடிக்கை மேற்கொள்வதற்கு அனுமதி அளிக்க அரசு பின் நிற்கிறது. என்ற விதத்தல் சிங்கள மக்களில் பலர் அரசைக் குற்றஞ்சாட்டத் தலைப்பட்டனர். அவ்வித அபிப்பிராயம் சமூக மட்டத்திலும் பரவலாகக் காணப்பட்டது.

இக் காரணங்களால் சிங்களவர்கள் மத்தியில் அரசுக்கு எதிரான உணர்வலைகள் வலுவடைந்தபோதிலும், அரசைப் பதவியை விட்டு வெளியேற்றத் தலைமை தாங்கிச் செயற்படத்தக்க அரசியல் தலைமைத்துவம் எதுவும் அவ்வேளையில் வாய்த்திருக்கவில்லை.

அடுத்து இடம் பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் கட்சிக்கெதிராக எதிரணியின் ஆதரவுடன் கொப்பேகடுவ சுயேச்சை வேட்பாளராக நிறுத்தப்படவுள்ளார் என்று அரசியல் மட்டத்தில் வெளிப்படையாக எவரும் தெரிவிக்காத போதிலும்,



அவ்வித எதிர்பார்ப்பொன்று சிங்களவர் மத்தியில் பரவலாகக் காணப்பட்டது.

அராலித் துறையில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகிய இராணுவ உயரதிகாரிகள் கொல்லப்பட்டதையடுத்து சிங்கள மக்களது, அது குறித்த சந்தேகம் புதிய கோணமொன்றில் திசை திரும்ப நேர்ந்தது.

"கண்ணிவெடித் தாக்குதலில் படுகாயமுற்ற கொப்பேகடுவவை யாழ்ப்பாணத்திலிருந்து ஏற்றி வந்த உலங்கு வானூர்தி தரையிறங்க இயலாத நிலையில் கட்டுநாயக்காவிலிருந்து ரத்மலானைக்கும், ரத்மலானையிலிருந்து கட்டுநாயக்காவுக்கும் இரண்டு மூன்று தடவைகள் மாறிமாறிப் பறந்து செல்லநேரிட்டது. அவ் வித தாமதம் ஏற்படாது இருந்திருப்பின் சிலவேளை கொப்பேகடுவவின் உயிரைக் காப்பாற்ற முடிந்திருக்கும்"

கொப்பேகடுவவின் மரணச்செய்தி வெளியானதைத் தொடர்ந்து மேற்கண்ட விதத்திலும் ஒரு சிலர் பேசத் தலைப்பட்டனர். கொப்பேகடுவ மீது கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட இடம் குறித்து எழுந்த சந்தேகமே இவ்வித கதைகள் உருவாகக் காரணமாய் அமைந்தது. அராலித்துறை, ஊர் காவற்றுறையின் நுழைவாயிலாக அமைந்துள்ளது. சம்பவம் இடம்பெற்ற காலகட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேசம் முற்றுமுழுதாக அரசினதும் ஈ.பி.டி.பி அமைப்பின் கட்டுப்பாட்டிலுமே இயங்கி வந்தது. ஈ.பி.டி.பி அமைப்பு விடுதலைப் புலிகளுக்கு எதிரான கொள்கை நிலைப்பாட்டைக் கொண்டிருந் தது. அதேவேளை அந்த அமைப்பு விடுதலை புலிகளுடன் ஆயுத ரீதியிலான நேரடிமோதல்களிலும் ஈடுபட்டுவந்த கால கட்டமது. அது மட்டுமன்றி அது அவ்வேளையில் அதிகாரத்திலிருந்த ஐ.தே.கட்சி அரசுடன் இணைந்து செயற்பட்டு வந்தது. இத்தகைய பின்னணியைக் கருத்தில் கொண்டே ஈ.பி.டி.பி. அமைப்பின் உதவியுடன் ஐ.தே.கட்சி அரசு கொப்பேகடுவவைத் திட்டமிட்டுப் படுகொலை செய்துவிட்டது எனப் பொது மக்களில் பலர் வெளிப்படையாகப் பேசிக்கொண் டனர். பெரும்பாலும் அதுவே உண்மையாயிருக்கக் கூடு மெனச் சிங்களவர்கள் நம்புவதற்கு இச் சந்தர்ப்ப சூழ்நிலையும் வாய்ப்பாய் அமைந்து விட்டது.

அரசின் உயர் மட்டத்தில் அவ்வாறானதொரு சதித் திட்ட மிடப்பட்டிராதிருந்தால், கொப்பேகடுவ படுகொலையுண்ட தினத்தன்று தம்புள்ளையில் ஜனாதிபதி பிரேமதாசா திறந்து வைத்த வைத்தியசாலையொன்றுக்கு 'வீர புருஷர் கொப் பேகடுவ ஞாபகார்த்த வைத்தியசாலை' என அவசர அவசர மாகப் பெயர் சூட்டப்பட்டதேன்?

ஒரு சில சிங்கள மக்கள் இவ்விதம் கேள்வியெழுப்பவும் தவறவில்லை. கொப்பேகடுவ உயிரிழந்த செய்தி பரபரப்பாக நாடெங்கிலும் பரவத்தொடங்கிய வேளையில், நாட்டின் ஜனாதிபதியாக விருந்த பிரேமதாசா, தம்புள்ள தேர்தல் தொகுதியில் அரசினால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு சில கட்டடங்களைத் திறந்து வைக்கும் வைபவங்களில் கலந்து கொண்டிருந்தார். கொப்பேகடுவவின் மரணச்செய்தி அவரது காதுகளுக்கு எட்டியதையடுத்து, அவசர அவசரமாக தாம் திறந்து வைக்கவிருந்த வைத்தியசாலை ஒன்றுக்கு வீர புருஷர் கொப்பேகடுவ ஞாபகார்த்த வைத்தியசாலை எனப் பெயர் சூட்டி வைத்தார். தமது இனத்தின் வீர புருஷராகத் தாம் கருதிய, தமது அபிமானத்துக்குப் பாத்திரமான கொப்பேகடுவவின் அகால மரணத்தால் அதிர்ச்சியடைந்திருந்த சாதாரண சிங்களப் பொதுமக்கள் இவ்விரு நிகழ்வுகளையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்திக் கற்பனை செய்யத் தலைப்பட்டனர்.

அந்த ஆண்டின் ஒகஸ்ட் மாதமளவில் 'இறுதிச்சமர்' என்ற பெயரில் வடபகுதியில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பாரிய இராணுவ நடவடிக்கையொன்றுக்கு ஏற்கனவே திட்டம் தீட்டப்பட்டிருந்தது. இராணுவ காலாட் படை அணியை மட்டும் ஈடுபடுத்தாது, முப்படைகளையும் அரசின் சகல வளங்களையும் ஒன்று திரட்டி ஒரே சமயத்தில் பல முனைகளினின்றும் தாக்குதலை ஆரம்பிக்கும் விதத்தில் திட்டமிடப்பட்டமை இத்திட்டத்தின் விசேட அம்சமாகும்.

முப்படைகளின் உயர் அதிகாரிகள் காரைநகர் கடற்படைத் தளத்தில் கூடி இத் திட்டம் குறித்த இறுதி முடிவு களை மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகளிடமிருந்து யாழ்ப்பாணத்தை விடுவிக்கத் தரை வழியாக நகருள் பிரவேசிக்கும் உத்தியைத் தவிர்த்து, கடல் வழியாக நகருக்குள் பிரவேசிப்பதெனப் படைத்தளபதிகள் தீர்மானித்தனர். அவ்விதம் கடல் வழியாகத் தரையிறங்கி எதிரிகள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களைப் பின்வாங்கச் செய்யவைக்கும் அதேவேளை, மற்றொரு படையணி தரை வழியாகவும் நகருக்குள் பிரவேசித்து யாழ்ப்பாண நகரத்தைத் தமது கட்டுப்பாட் டுக்குள் கொண்டு வருவதெனத் திட்டம் தீட்டப்பட்டது. அத்தோடு இப் பாரிய தாக்குதல் திட்டத்தை டென்சில் கொப்பேகடுவவே தலைமை தாங்கி வழிநடத்துவதெனவும் தீர்மானமாயிற்று. பிரிகேடியர் விஜய விமலரத்ன, கொமாண்டர் மோஹான் ஜயமஹ போன்ற முக்கிய படை அதிகாரிகளும் காரைநகர் கடற்படைத் தளத்தில் இடம்பெற்ற அந்தவிசேட மாநாட்டில் பிரசன்னமாயிருந்தனர்.

'நாம் அவசியம் அராலித்துறைக்குச் சென்று அவ்விடத் தின் கள நிலைவரம் குறித்து ஆராய்ந்து பார்த்தாக வேண்டும்'

மாநாட்டில் கலந்து கொண்ட ஒரு சில படை அதிகாரிகள் இவ்வித கருத்தை முன்வைத்தனர். எவ்வித ஆட்சேபனையுமின்றி அந்த ஆலோசனை ஏற்கப்பட்டது. அதன் பிரகாரம் அடுத்தநாள் அராலித்துறைக்குச் சென்று கள நிலைவரம் குறித்துப் பரிசீலனை செய்வதென்ற தீர்மானத்துடன் அன்றைய மாநாடு முடிவுக்கு வந்தது.

அடுத்த நாள் ஒகஸ்ட் 8ஆம் திகதி காலை 8.40க்கும் 9.00மணிக்கும் இடைப்பட்ட வேளையில் டென்சில் கொப்பேகடுவ தலைமையிலான இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் குழு பயணித்த வாகனத் தொடரணி அராலி இறங்கு துறையை அண்மித்தது...

அங்கு என்ன நடந்தது?

(மிகுதி அடுத்தவாரம்)

(மிகுதி அடுத்தவாரம்)

# பொறுமைக்கு உதாரணம் பூமி பூகம்பம் வந்துவிட்டால்.......



குஜராத் பூகம்பத்தில் காயமடைந்த ஒரு பிஞ்சு

03

ஓலங்கள் ஓய்ந்து சத்தங்கள் அடங்கியதும் தடித்த புழுதி மண்டலம் கிளம்பலானது. உலகம் இருண்டுவிட்டது. வெளிச்சம் மீண்டும் தூசிப்படைக்குள் ஊடுருவப் போராடிக்கொண்டிருந்தது. காட்சிகள் மெல்ல மெல்ல கண்ணுக் குப் புலப்பட அதிகநேரம் எடுத்தது.

தான் உயிரோடுதான் இருக்கிறேன் என உணர்ந்த மகேஸ்வரி திரும்பவும் ஓடைப்பக்கம் பார்வையைச் செலுத்தினாள். புழுதியூடு ஓடை இருந்த இடம் மங்கலாகப் புலப்பட ஆரம்பிக்க சில நிமிடங்கள் எடுத்தன. அங்கே இருமருங்கும் இருந்த கட்டடங்கள் கற்குவியல்களாகி ஓடையை முற்றிலும் நிரப்பி இருந்தன.

மதியம் கடந்து இடிபாடுகள் விலக்கப்பட்டபோது ஓடைக்குள் அகப்பட்ட 160 சின்னஞ்சிறுசுகள் தேசியக் கொடியைப் பெரும்பாலும் கைவிடாமலே மரணத்தைத் தழுவியிருக்கக் காணப்பட்டனர். அவர்களுக்குள் நிமித்தாவின் உடலை அவளது அண்ணன் அடையாளம் காட்டினான்.

இன்னும் ஓரிரு நிமிடங்களுக்குள் ஊர்வலம்ஓடையைக் கடந்துவிட்டிருக்கும். அத்தனை உயிரிழப்புகளும் தவிர்க்கப்பட்டிருக்கும். அதற்கிடையில் அவசரப்பட்டு பூமி அன்னை ஏனோ அவர்களை அரவணைத்தாள்? இவர்கள் என்ன பாவம் செய்தார்கள்.

இறந்தவர்களை விட காயமடைகிறவர்கள்தான் அதிக பாவம் செய்தவர்கள் என்பதை உறுதி செய்யுமாப் போல மேலும் நிலைமைகள் இருந்தன.

ஜோஷி கமாலி ஒரு தொடர் மாடி வீட்டில் வசிக்கிறாள். தொடர்மாடிகள் பூகம்பத்திற்கு ஒத்துவராத ஆபத்தான சமாச்சாரம் என்பது அவளுக்குத் தெரியவில்லை. தெரிந்தாலும் வீட்டைவிட்டு ஓடவா இயலும்?

தனது நேர்முகத் தேர்விற்கு புறப்பட்டுப் போனவள் தலைவாரியதில் திருப்திப்படாமல் மீண்டும் வீட்டுக்குத் திரும்பிவிட்டாள். வாசலில் சப்பாத்தைக் கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தவள் சடுதியாகத் திடுக்கிட்டாள். இடியோசை வானைப் பிளந்தது. அந்த நான்கு மாடித்தொடர் எதுவித முன்னறிவித்தலுமின்றி கிடுகிடுத்தது. மறுகணம் அவள் நின்றுகொண்டிருந்த அறைச்சுவர்கள் மூன்று பக்கமும் தகர்ந்துபோயின. கொங்கிரீட் கூரை 45 பாகை சாய்ந்து ஒற்றைப் பக்கச் சுவரில் தொங்கிக்கொண்டு ஊசலாடியது.

சான்ட்விச் பாண் தட்டுக்களுக்கிடையில் கூட்டுச் சரக்குகள் அடங்குதல் போலே மாடிக் கூரைத் தட்டுத் துண்டுகளுக்கிடையில் இரத்தமும் சதையும் கற் களும் பொருள்களும் கலந்து பொசுங்கிப் போயின. அவள் வசித்த நான்கு மாடி கட்டடத் தொகுதியில் கல்மாரி பொழிந்து கொண்டிருந்தது.




சுவர்கள் பிளந்து பிரிந்து கொட்டுப்பட்டுப் போக தூண்களில் சுழன்றும் திரிந்தும் தொங்கும் கொங்கிரீட் தட்டுக்கள் கோரமாகப்பட்டன. தட்டுத் தட்டாய் உள்ளே சுதந்திரமாக வெளிச்சம் தடைகள் தாண்டி ஊடுருவத் தொடங்கியது. அவலக் குரல்கள் இரத்தத்தை உறையவைத்தன.

பச்சையும் மஞ்சளுமாய் பூப்போட்ட ஜோஷியின் ஜொலிப்பான சட்டை புழுதி நிறமாகிவிட்டது. வள்ளுவனின் அனிச்ச மலர் பட்டு நோகும் அவளது மெல்லிளம் பாதங்கள் சப்பாத்து இல்லாமல் கரடுமுரடுகளுக்குள் நிலையெடுத்துக்கொண்டன. மானின் மருட்சி கொண்ட இயல்பான விழிகள் தூசிபட்டுக் கலங்கிப் போயின. அச்சம்கொண்ட பெண்மை தன்னைச் சுதாகரித்துக் கொண்டது. தனது சிறுசிறு காயங்கள் மற்றும் வலி பற்றியெல்லாம் அவள் சிந்திக்கவில்லை. சப்பாத்து செருப்பெல்லாம் தேடிப்பிடிக்க இயலாது. இந்த ஊசலாடும் கொங்கிரீட் கூரை மீது ஏறித் தப்பினால் போகிறது. தவறினால் மீட்பர்கள் எவரும் இப்போதைக்கு வந்துசேரப் போவதில்லை என அவள் உள்மனம் கூறியது.

பெண்மைக்குள் மென்மைக்குள் ஒளிந்திருந்த துணிச்சல் செயற்பட ஆரம்பித்தது. இந்த உயிர் இப்போது அவளுக்கு இறைவன் போட்ட பிச்சை என்கின்ற உணர்வு பிறக்கிறது. ஓடித்தப்பி அதைக் காப்பாற்றவோ, அவலக்குரல் எழுப்பவோ அவள் முனையவில்லை.

வெளிச்சம் தெரிந்த வெளிவழியே கீறப்படாமல் கிழிக்கப்படாமல் ஆடைகள் கொழுவி விழுத்தாமல் வளைந்து நெளிந்து துணிந்து ஏறிக்கடந்து வந்தாள். தரையில் குவிந்திருந்த கற்குவியல் மீது வெறுங்காலுடன் நான்கு மீற்றர் அளவிற்கு அதாவது ஒரு மாடி தூரத்திற்கு துணிந்து குதித்து நிலை எடுத்துக்கொண்டாள். குதித்த இடத்தில் கிடந்த கண்ணாடித்துண்டுகள் தளபாடச் சிதைவுகள் துருத்திக்கொண்டடிருந்த கம்பித் துண்டங்கள் பற்றியெல்லாம் அவள் கவலைப்பட்டாளில்லை. இவளுக்கு இந்த விளையாட்டுகளில் பயிற்சி இருந்ததா என்பது தெரியவில்லை. ஆனால், வெற்றிகரமாக வெளிப்பட்டுக்கொண்டாள். அடுத்து மீண்டும் நிலநடுக்கம் வருமா என அவள் பயப்படவில்லை. வெட்டவெளி நோக்கி ஓடவில்லை. குடும்பத்தாரைக் காப்பாற்றியாக வேண்டும் எஞ்சியிருக்கிற சுற்றத்தை விடுவிக்க வேண்டும் என்கின்ற உணர்வு துடித்தது.

தலைக்கு இரண்டு மாடிகள் மேலே தனது குழந்தையை கையில் ஏந்தியவாறு நொருங்கிய உடைவு விளிம்பில் நின்று கதறிக்கொண்டிருந்த ஒரு தாயை அவள் முதலில் கண்டாள்.ஜோஷி அனேகமாக கிரிக்கெட் விளையாடி இருக்கமாட்டாள். குழந்தையை வீசும்படியும் தான் 'கச்' பிடிப்பதாகவும் தாயிடம் கேட்டுக்கொண்டாள். தாயோ இலக்குப் பார்த்து குழந்தையை வீச என்ன முத்தையா முரளீதரன் மகளா? அல்லவே. மறுத்துவிட்டாள். இந்த ஆடுகளம் மிகவும் ஆபத்தானது. குழந்தை கொங்கிரீட் தட்டுகளிலும் கம்பிகளிலும் தட்டுப்படாமல் ஒரு வளைவுப் பாதை வழியே சரிவர வீசப்படல் வேண்டும்.

ஒரு வாளியில் கயிறுகட்டி இறக்கும்படி தாயிடம் இவள் கேட்டாள். வாளிக்கும் கயிற்றிற்கும் அவள் எங்கே போவாள். வெளியேறும் பாதைகள் அனைத்தும் அடைபட்டுத்தானே அவள் குதிக்க நினைக்கிறாள். சரி துணியில் நிறையச் சுற்றி வீசு என்றாள். ஒருவாறு தாய் மனம் ஒப்புக்கொண்டபோது பிடித்தாக வேண்டுமே என்கின்ற ஏக்கம் இவளிடம் பிறந்தது.

வீசும்போது அக்கணம் விகாரமாகிய தாயின் முகம் மறுகணம் குழந்தை இவள் கையில் கிடைத்ததுமே மலர்ந்துகொண்டது அந்த அவலத்திலும் தாயின் இதழ்களில் இழையோடிய புன்னகைக் கீற்று நொந்து




போயிருக்கும் பூமியைப் பசுமையாக்கப் போதியதாக இருந்தது.

குழந்தையை அரவணைத்து மார்போடு பொத்தியவாறு மெதுமெதுவாக அடியெடுத்து வைத்து இடிபாடுகளுக்குள்ளிருந்து வெளிப்பட்டாள் ஜோஷி. அவ்விடத்தில் வெளியான ஓர் இடத்தில் தப்பியவர்கள் பலர் கூடித் திகைத்து நின்றிருந்தனர். குழந்தையின் தாயை மீட்கத் தன்னோடு உதவிக்கு வருமாறு அவள் விடுத்த கோரிக்கை ஆண்கள் காதில் கூடப் பட்டதாகத் தெரியவில்லை. குழந்தையைப் பாரமெடுக்க யாருக்கும் பிரியமில்லை. ஒரு குழந்தை கடத் தல்காரன் கூட அவ்விடத்தில் சந்திக்க இல்லைப்போலும். இவங்களெல்லாம் ஆம்பிளைகள். இவங் களுக்கு ஒருமீசை வேறு என மனதுக்குள் நினைத்திருப்பாள்.

கெஞ்சிக் கேட்டு ஒருவாறு ஒரு பெண்ணிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு தனித்து மீண்டும் களத்துக் குத் திரும்பி னாள். கட்டம் கொட்டுப்படும் கிட்டப் போக வேண்டாம் என யாரோ அறிவுரை கூறினார்கள்.

**தருவது**
**மு.சிவநேசன்**

பயந் தான் கொள்ளிகள்.

வருகின்ற வழியில் கதவு ஒன்று கழன்று 'சீசோ' ஆடிக்கொண்டிருந்தது. அதையே ஒரு சறுக்குப் பலகையாக மாற்றிச் சாத்திவைத்து அதன்மீது குழந்தையின் தாயை குதிக்கவைத்து சறுக்கவைத்து வெளியே அழைத்து வந்து குழந்தையையும் ஒப்படைத்தாள். குழந்தையின் முகம்பார்த்துவிட்டு தாய் நன்றி சொல்ல நிமிர்ந்து பார்த்தபோது இவள் மீண்டும் களம் சென்றுவிட்டாள். பலர் காயங்களுடன் கதறிக் கொண்டிருந்தார்கள். எதை முதலில் எப்படிக் கையாள்வது என்பது சிக்கலாக இருந்தது. இதற்கிடையில் கட்டடத்துக்கு உள்ளிருந்து வெளிப்பட்ட இன்னொரு ஆள் அவளுக்கு ஒத்தாசை புரிய இணங்கிவிட்டான்.

இருவருக்கும் சற்றுத் தொலைவில் இடிபாடுகளுக்கு இடையே முனகிய குழந்தையின் குரல் இதயத்தை இறுக்கவைத்தது. அருகில் வந்தபோது துருத்திக் கொண்டிருந்த ஒரு சோடி சப்பாத்துக் கால்கள் மட்டும் தெரிந்தது. பவுத்திரமாகக் கற்களை விலக்கி பிரயத்தனத்துடன் இருவரும் பிள்ளையை மீட்டெடுத்தனர்.

இவ்வாறு அவள் பலமணிநேரம் போராடி சுமார் இருபதைந்து பேரை மீட்டு உதவி இருக்கிறாள். அந்தக் கட்டடத்தில் சுமார் அறுபது உயிர்கள் காவுகொள்ளப்பட்டு இருந்தன. அவளது துணிச்சலும் சாகசமும் பல்வேறு பத்திரிகைகளாலு ம் அமைப்புக்காளாலும் பாராட்டபட்டன. இவ்வளவுக்கும் கடினமான பணிகளை செய்து பழகியிராத அல்லது முதலுதவி மற்றும் பயிற்சிகளை பெற்றிராத அவள் தாக்குப் பிடித்திருக் கிறாள்.

இப்படியான அனர்த்தங்கள் நிகழும் போதுகளத்தில் துணிவுடன் உடனடியாகச் செயலில் இறங்கும் மக்களால் தான் எராளமானவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். மீட்புப்பணியாளர்கள் வந்து சேரும்வரை காத்திருந்தால் கோவிந்தாதான். காலதாமதம் காயம டைந்தவர்களை மயங்கவைக்கும் அல்லது மரணம் சம்பவித்துவிடும். அதன் பின்னர் வந்து சடலங்களை எண்ணுவதில் என்ன நன்மை கிடைக்கப் போகிறது?

பூகம்பத்தின் பாதிப்புக்கள் கட்டடங்களின் உறுதியையும் றிச்டர் அளவையும் மனிதர்கள் மாட்டுப்படுகின்ற இடங்களையும் பொறுத்து இருக்கும். உறுதியான கொங்கிரீட் கட்டடங்கள் றிச்டர் 6.7 வரை தாக்குப்பிடிக்கும். விதி வந்துவிட்டால் சிறிய அதிர்வுகளுக்குள் அகப்பட்டு சிறிய வீடுகளிலும் வளைகள் மரங்கள் சரிவதனால் ஆபத்து ஏற்பட்டுவிடுகிறது.

அதனைவிட கடுமையான அதிர்வுகள் ஏற்படும்போது உறுதியான பாரிய கட்டடங்களுக்குள் அகப்படுகிறவர்களின் நிலைமை பரிதாபமாகிறது. தொடர்மாடி குடியிருப்புகளில் வசிப்பவர்கள் இதற்குள் எக்கச்சக்கமாக சிக்குப்படுகிறார்கள்.

சுனாமிக்கு பயந்தால் கடற்கரைக்குப் போகாதே, பூகம்பத்துக்கு பயந்தால் மாடி வீடு ஏறாதே என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே போனால் நிலவுக்கு ஒளித்துப் பரதேசம் போகிற முயற்சிதான். புத்திசாதுரியமும் கொஞ்சம் தேவை. புயல் வருகிறது என்று மரங்களைத் தறிக்க முடியுமா? சமயத்துக்கு இலைகளை மொட்டையடித்துவிட்டால் போகிறது.

கையில் சோசர் மட்டும் எஞ்சிவிட கோப்பை விழுந்து சிதறி தேநீர் சிந்திய அக்கணம் அது நிலநடுக்கம் என நளினி நினைத்தாள். ஆனால், மறுகணம் உணரப்பட்ட கிடுகிடு அதிர்வு அவளுக்கு ஆபத்தைப் புரியவைத்தது.

அகமதாபாத்தில் ஒரு தொடர்மாடி வீட்டில் இரண்டாம் தளத்தில் குடியிருப் பவள் அவள். புத்தி சாதுரியமான பெண். வாய் பார்க்காமல் அதை, இதை, நகை நட்டைப் பைகளுக்குள் திணித்து மினைக்கெடாமல் துரிதமாக செயற்பட்டாள். சோசரை விட்டெறிந்தாள். தனது ஒன்றரை வயது மகன் கெயூரை அணைத்துக் கொண்டு படிக்கட்டு வழியே தரதரவென இறங்கலானாள். அதற்கிடையில் கணவன் அருணிடம் மகள் பார்கவியை தூக்கிவரும்படி கூச்சல் போட்டாள்.

பொறுமைக்கு பூமியைத்தான் சொல்வார்கள் கவிஞர்கள். அவர்களுக்கு பூகம்பம் தெரியாதா? இரண்டு மாடிகளுக்கு கீழே அருணும், நளினியும் பார்கவியையும் கெயூரையும் கொண்டு படிக்கட்டு வழியே இறங்கித் தரையைத் தொடும் வரை பொறுக்குமா பூமி?

(பொறுத்திருங்கள்)



# கடலம்மா...

## ஒரு நெய்தல் நிலக்கதை

மெல்லிய புகை போல - பசலை படர்ந்து - கருகலாய் தூரத்தே கரை தெரிந்தது. இன்னுங் கொஞ்ச நேரத்தில் படகு கரையைத் தொட்டுவிடும். சூசைப்பிள்ளைக்கு மனதோரமாய் - வழமைபோல - பிரிவுத்துயரொன்று உருவெடுக்கத் தொடங்கியது. படகிலிருந்தபடியே சிறுபிள்ளைபோல் கடல் நீரை அளையத்தொடங்கினான் .

உப்பு நீரின் இதம் கைவழியே மனசுக்குள் புகுந்தது!

ஏனென்றே தெரியாமல் அவன் முகத்தில் சந்தோஷ ரேகைள்... எப்போதும் இப்படித்தான்!.

கடலைவிட்டுக் கரைக்குப் போவதென்றால் சூசைப்பிள்ளையால் தாங்கிக்கொள்ள முடியாமலிருக்கும்.

கடல் அவனுக்கு இன்னொரு அம்மா!

ஒருபோதும் 'கடல்' என்று சொன்னதில்லை "அம்மா!" "தாய்" இப்படித்தான் கடலை அழைப்பான். தன்னுடைய காலைக் கழுவாமல் மறந்துங்கூட அவன் கடலுக்குள் இறங்கியதில்லை.

"தாயின்ர உடம்பில கால்வைக்கப்போறம். அப்ப ஊத்தைக்காலோட போனால் தாயை அவமதிக்கிற மாதிரியெல்லோ. டேய் செபமாலை! நீயும் கழுவிப்போட்டு வாடா!"

தன்னோடு தொழிலுக்கு வரும் மற்றவர்களையும் எப்பாடுபட்டாவது காலைக் கழுவவைத்துவிட்டுத்தான் கடலுக்குள் இறங்கவிடுவான்.

சூசைப்பிள்ளைக்கு இப்படி கடல் மீது அலாதிப்பிரியம் வந்ததற்கும் காரணமில்லாமலில்லை!.

◆ ◆ ◆

கிட்டத்தட்ட 50 வருடங்களுக்கு முன்பு -

அது ஒரு மாரிகாலம்!

சூசை தன் தாயின் வயிற்றுக்குள்ளிருந்து வெளியேவரப் போராடிக் கொண்டிருந்தான்.

"ஒண்டில் குழந்தை, இல்லாட்டித் தாய் ரண்டில ஒண்டத்தான் காப்பாத்தேலும். சிலவேளை இந்தியாவுக்கு கொண்டுபோய் இங்கிலிசு வைத்தியம் பார்த்தால் ரண்டு பேரையும் காப்பாத்தலாமெண்டு நினைக்கிறன்." என்று ஊர்ப் பரியாரி இசக்கி முத்துவும் கைவிரித்துவிட்டார். சூசைப்பிள்ளையின் தந்தை அந்தோனிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவருக்கு குழந்தை, மனைவி இருவருமே உயிரோடு வேண்டும்.

"எல்லாம் கடலம்மா விட்ட வழி! எலியாஸ்! படகை இறக்கி பாயைவிரி"

அந்தோனியின் உதடுகளிலிருந்து தீர்க்கமாய் கட்டளை பிறந்தது.

"அண்ணை! மாரிக்கடல் கொந்தளிப்பாய் இருக்கும், எதிர்க்காத்தாயும் இருக்கும். இதுக்குள்ள பிள்ளைத்தாச்சி உடம்போட அக்காவை என்னெண்டு..."

"எல்லாத்தையும் கடல்ல பாரத்தை போட்டிட்டு வெளிக்கிடுவம் . நீ சொன்னதைச் செய்"

எலியாஸ் மறு பேச்சில்லாமல் காரியத்தில் இறங்க, படகு கடலுக்குள் இறக்கப்பட்டு பாய்விரிக்கப்பட்டது. அந்தோனி மனைவியைப் பத்திரமாக இருத்திவிட்டு துடுப்பைப் பிடித்தபோதுதான் -

அந்த அதிசயம் நிகழ்ந்தது!

வழமையாக படகோடு முரண்டு பிடிக்கும் மாரிக்கடல், நல்லபிள்ளையாய் மாறி துடுப்பின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு அமைதியாகி வழிவிடத்தொடங்கியது.

எங்கிருந்தோ - எப்போதுமில்லாதவாறு - காற்றும் வந்துசேர,பாய் உப்பிக்கொள்ள -

படகு வேகமாக மறுகரை சேர்ந்தது.

பிறகு எல்லாமே மளமளவென்று நடந்து முடிய - மறுவாரமே தாயும் சேயும் நலமாக வல்வெட்டித்துறைக் கரையில் கால் பதித்தனர்.

"சூசை கடலம்மா எப்பவும் உன்ர பக்கந்தானடா! இல்லாட்டி ஒரு மாரியிலையும் இல்லாமல் அண்டைக்கு அப்பிடி அமைதியாயிருந்தது; காத்து வளமாய் அடிச்சது எல்லாம் உனக்காண்டித் தானடா!"

அடிக்கடி அந்தோனி அன்றைய சம்பவத்தைச் சொல்லச் சொல்ல சூசைப்பிள்ளைக்கு கடல் இன்னொரு தாயாகிப் போனாள். தன்னுடலில் ரத்தத்திற்குப் பதிலாக கடல் நீரே ஓடுவதாகக் கூட சூசை கற்பனை பண்ணுவதுண்டு.

அவனுக்கு வீடு, பள்ளிக்கூடம், கோயில், மைதானம் எல்லாமே கடலாய் மாறிப்போனது.

எப்போதும் மீன்குஞ்சுபோல் கடலுக்குள் தான்!

"அந்தோனி! உன்ர பெடி நெடுகக் கடலுக்குள்ளதான்! சின்னப்பெடியன்! அலைகிலை கொண்டு போகப்போகுது!"

ஊர்ச்சனங்கள் அடிக்கடி அக்கறையோடு வந்து அந்தோனியிடம் சொல்லும் போதெல்லாம், லேசான புன்னகைதான் அவனிடமிருந்து வெளிப்படும்.

"அவன் கடலம்மாவுக்காண்டி பிறந்தவன் - அவனைக் கடல் ஒண்டுஞ்செய்யாது!"

பெருமை பொங்க கூறுவதோடு மட்டுமல்லாது சிலநேரங்கிளில் மகன் நீந்தி விளையாடும் அழகை ரசிக்கவும் செய்வார். அப்படிப்பட்ட அந்தோனிக்கு ஒருநாள் பாரிசவாதம் வந்து படுத்தபடுக்கையாகிவிட, குடும்பச்சுமை சூசையின் மீது விழுந்தது. சூசைக்கு அப்போது 14வயது. அவனுக்குக் கீழே குஞ்சுங் குருத்துமாய் நாலு சகோதரர்கள்.

அந்தோனி குடும்பம் இனித் தலையெடுக்க முடியாதென்று எல்லோரும் பரிதாபப்பட்டபோதுதான்- சூசை தொழிலுக்குப் போக வெளிக்கிட்டான்.

"வேண்டாமப்பு! நீ சின்னப்பிள்ளை! உனக்குத் தொழில் நுணுக்கமொண்டும் வடிவாத்தெரியாது. கொப்பரும் இழுத்துப்போய் கிடக்கிறான். நீயும் தலைச்சான் பிள்ளை. உனக்கொண்டு நடந்தா...! நீ தொழிலுக்கு போகவேண்டாம். வேணுமெண்டால் உங்கட குடும்பத்தை நாங்கள் பாக்கிறம்"

சொந்தக்காரர்கள் எவ்வளவோ கெஞ்சியும், சூசைப்பிள்ளை தன் முடிவிலிருந்து அசையவில்லை.

"எனக்கு என்ர தாயைப் பற்றித் தெரியும்! அவள் என்னை ஒண்டுஞ் செய்யமாட்டாள். எங்கட குடும்பத்துக்கு நீங்கள் சோறு போடத் தேவையில்லை. 'என்ர' அம்மா போடுவாள்" கூறிவிட்டுப் படகேறினான். அவன் திரும்பிவந்தபோது ஊரே வாய் பிளந்தது. வள்ளம் முழுதும் மீன்களை நிறைத்துக்கொண்டு கரையேறிய போது எல்லோரும் அவனை மொய்த்துக் கொண்டார்கள்.

"எங்கட கடல்ல இந்தச் 'சீசனில' ஒருத்தருக்கும் ஆப்பிடாத 'சீலா' உனக்கென்னெண்டடா ஆப்பிட்டது."

எல்லோரும் வியந்தபோது. சூசைப்பிள்ளை வியர்வையைத் துடைத்துக்கொண்டு. கடலைப்பார்த்து நன்றியோடு புன்னகையைச் சிதறவிட்டான். பிறகு அவன் வலை போடும் எல்லா இடங்களில் கூட்டங்கூட்டமாய் மீன்கள்!

மற்றவர்களின் வள்ளங்கள் ஒன்றிரண்டு மீன்களோடு கரைதிரும்புகையில் கூட, திருக்கை, சுறா,கயல்,மணலை என்று வள்ளத்தை நிறைத்துக்கொண்டுதான் சூசை கரை திரும்புவான்.

"நீ கடலம்மான்ர பிள்ளையடா! ஆரைக் கைவிட்டாலும் உன்னையவள் கைவிடமாட்டாள்!"

அந்தோனி படுக்கையிலிருந்தபடியே, ஆனந்தத்தோடு சூசையை அரவணைப்பான்.

கொஞ்ச நாள்களிலேயே எல்லாக் 'கடல்பாடுகளும்' சூசைக்கு அத்துப்படி! நீண்ட காலத் தொழில் அனுபவம் பாடுபற்றிய அறிவு உள்ளவர்கள் கூட சூசையிடம் கேட்டு பாடுபார்த்துப் போகுமளவிற்கு கடலின் அத்தனை நெழிவு சுழிவுகளையும் அறிந்தவனாக அவன் மாறியிருந்தான்.

கூடவே அவன் குடும்பநிலையும் உயரத்தொடங்கிற்று சின்னதாயிருந்த வீடு சுத்துமதிலோடு கூடிய மாடிவீடானது. பணம்,நகை,சொத்து எல்லாமே நிறைந்தது.

கடல் அள்ளிக் கொடுக்க - சூசை செல்வத்தின் உச்சாணிக்கொப்பிற்கு போனாலும் எப்போதும் பழைய சூசையாகவே இருந்தான்.

1986 ஜூலையில் -

சூசை கலியாணம் கட்டி, பிள்ளை குட்டிக்காரனாயிருந்தான்.

அப்போதுதான்-

'ஒபரேஷன் லிபரேஷன்' என்ற பெயரோடு சிங்கள இராணுவம் வடமராட்சிப் பிரதேசத்தைக் கபளீகரம் செய்யத் தொடங்கியது. தப்பி ஓடுவதற்கான தரைப்பாதையின் எல்லாப் பக்கங்களிலும் பிணந்தின்னிப் பேய்களாக இராணுவம் நின்றிருந்தது!

அப்போதும் சூசைக்குக் கடலன்னைதான் மடிகொடுத்தாள். கடற்படையின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, தன் நெளிவு சுழிவு அலைக்கரங்களால் சூசை குடும்பத்தை அரவணைத்து இந்தியாவில் கொண்டுபோய் கடலன்னை சேர்ப்பித்தாள்.

இந்தியாவிலிருந்த ஆறுமாதமும் சூசைக்கு இருப்புக்கொள்ளவில்லை. எந்நேரமும் அவனுக்கு கடலின் ஞாபகந்தான். எப்போதும் அலைகளை அளைந்து பழகிய அவனது கைகள் தினவெடுத்தன. தொழிலுக்குப் போகாததால் உள்ளங்கையில் படைபடையாய் தோல் உரிந்தது, எரிச்சலெடுத்தது. கண்ணை மூடித் தூங்குகையிலும் தன் அலைக்கரங்களால் அழைப்பது போன்ற பாவனையைக்காட்டி 'வா! வா!' என்று கனவாகவும் கடல்வந்து அவனை இம்சித்தது.

"ஊருக்குப் போகலாமாம்!"

என்ற செய்தி காற்றுவாக்கில் வந்த மறுகணமே படகோடு, சூசை தன் குடும்பத்தையும் கூட்டிக்கொண்டு கடலில் இறங்கிவிட்டான். ஊருக்கு வருகையில் சின்னக்குழந்தை மாதிரி படகிலிருந்தபடியே கடல் நீரை வாரியெடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டே வந்தான். இடையிடையே வாயில் விட்டு சுவைக்கவும் செய்தான். கரை சேர்ந்த போதும், குடும்பத்தவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, இரவு நடுச்சாமம் தாண்டிய பிறகும் தன்னுடைய கடலம்மாவை ரசித்தபடியே நின்றிருந்தான்

"கடலம்மா! இவ்வளவு நாளும் உன்னைப் பிரிஞ்சிருந்து நான்பட்ட நரகவேதனை காணும் இனி என்ர உயிரே போனாலும் உன்னை விட்டு ஒருக்காலும் பிரியமாட்டன்"

அன்றைக்கு மனதில் எடுத்துக்கொண்ட சபதத்தை சூசைப்பிள்ளை செயலிலும் காட்டினான்.

இந்திய இராணுவப் பிரச்சினையின் போதும், அதைத் தொடர்ந்து மீண்டும் வந்த சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பின் போதும் ஊரைவிட்டும், கடலைவிட்டும் சூசைகுடும்பம் அசையாமல் நின்றிருந்தது.

"ஏனப்பா இந்தப் பிடிவாதம்? பிள்ளையளும் இளந்தாரியள் அவங்களுக்குக் கண்ணுக்கு குத்துறமாதிரி வளந்திருக்கிறாங்கள். அவங்கள் தங்களுக்கேதாவது இழப்பெண்டால் அதை எங்கட



பிள்ளையளில காட்டிப்போடுவாங்கள் - வாங்கோப்பா! மற்றச் சனங்கள் போயிருக்கிற இடத்தில் கொஞ்ச நாள் இருந்திட்டு அதுகள் வரேக்க நாங்களும் வருவம்"

மனைவி பிலோமினா எவ்வளவோ கெஞ்சியபோதும் சூசை அசரவில்லை.

"உங்களுக்குப் பயமாயிருந்தா அவையளோட போய் அகதிமுகாமில இருங்கோ நான் கடலம்மாவை விட்டிட்டு ஒரு இஞ்சி கூட அசையமாட்டன்"

சூசையின் பிடிவாதத்தின் முன் அவன் மனைவி பிள்ளைகளின் பயம் தோற்றுப்போக எல்லோரும் கடலைத் தொழுதபடியே இருந்தார்கள். முதலில் கடுமையாக நடந்துகொண்ட இராணுவம். நாட்செல்லச் செல்லத் தமது கெடுபிடிகளை தளர்த்தத் தொடங்கியது.

ஊர்ச்சனமெல்லாம் மீண்டும் ஊர் திரும்பும் வரையில் அத்தனை பேரினதும் உடைமைகளையும் சூசை குடும்பம் பாதுகாத்து வைத்திருந்து. வந்தவுடன் பத்திரமாக ஒப்படைத்தபோது ஊரவர்கள் சூசையின் குடும்பம் கோயிலாய் மாறிப்போனது.

"எல்லாம் அழிஞ்சிருக்குமெண்டு வந்தம். சூசை! நீ இருந்தபடியால்தான் இதுகளெல்லாம் திரும்பக்கிடைச்சிருக்குது"

"சூசை! உனக்கு எப்படி நன்றி சொல்வதென்டே தெரியேலை"

ஊரவர்களின் புகழ்ச்சி மழையை ஒதுக்கிவிட்டு சூசை வழமைபோல் இலேசாகப் புன்னகைத்தவாறு கடலை நோக்கி நடந்துகொண்டிருந்தான்.

◆ ◆ ◆

கரை நெருங்கி விட்டது!

மெலிதான பெருமூச்சொன்று சூசையிடமிருந்து வெளிப்பட்டது.

"என்ன சூசையண்ணை! வழக்கம் போல் கடலைப் பிரியிற கவ்லை வந்துவிட்டுதோ?"

"ஓம் செபமாலை! கடலம்மாவைவிட்டுப் பிரியிற தென்டால் நெஞ்சுக்குள்ள ஏதோ செய்யிற மாதிரிக் கிடக்குது"

சொல்லிவிட்டு மீண்டும் அலைகளைத் தொட்டு விளையாடத் தொடங்கிய சூசையை சட்டென எழுந்த அழைப்பு கரையை நோக்கிப் பார்க்க வைத்தது.

"அய்! தாத்தா! தாத்தா!!"

கரையில் சூசையின் பேரப்பிள்ளைகள் மூவரும் தாத்தாவின் வருகையைக் கண்டு துள்ளிக்குதித்துக் கொண்டிருந்தனர். பிஞ்சுகளைக் கண்டதும் கடலைப் பிரிவதால் எழுந்த துயரம் குறைந்தாற் போல்

சொல்லிக் கொண்டேயிருப்பான். இடை

அரவணைத்தபடி-

"என்ர குஞ்சுகள்! நீங்களும் தாத்தா

வரவேணும்"

என்று கூறி முத்தமிட்டுக் கொள்வான்

"தாத்தா! இறங்கி வாங்கோ தாத்தா!!

இப்போது அவர்கள் கரையிலிருந்து

கேட்கமுடிந்தது.

"செபமாலை! நீ வள்ளத்தை கரையே

என்று விட்டு, இடுப்பளவு நீரில் குதித்

குழந்தைகளை வாஞ்சையோடு தூக்கிக்

படகுகளைக் கரையேற்றிக் கொண்டிருந்த

பாடிய விதவிதமான "உம்பாப் பாடல்கள்

"தாத்தா! கெதியா சாப்பிட வாங்கோ!

"செல்லங்கள்! நீங்கள் சாப்பிட்டியளே

"நீங்கள் தீத்தினாத்தான் நாங்கள் சா

"அப்பிடியே சங்கதி? சரி! நான் பாட்டி

சொல்றன். இதிலயிருந்து எல்லாருமாச் ச

கரையிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த வீ

"பிலோ! சாப்பாட்டை இஞ்சை கொண்

சாப்பிடப் போயினமாம்"

"இருங்கோ கொண்டுவாறன்!"

ஓலமெழுந்தது. வழமைக்குமாறாக அல

அலையைப் பார்த்து பயந்தோடுபவர்

வந்தது.

"அலையைப் பா[…] பயப்பிடா[…]

இன்டைக்கு கொஞ்சம் வெருட்டுறாள்" எ

பேரப்பிள்ளைகளுக்கு கூறிவிட்டு மெதுவ

"படீர்!!!"

வெடிச்சத்தம் போல் கேட்டது

"ஓ" வென்ற பேரிரைச்சல்!

சூசைக்கு நெஞ்சு லேசாய் துணுக்குற

அலை பெரிதாய் -

ஒரு அரக்கனைப் போல -

மிகப்பெரியதாய் -

பனையை விடவும் உயரமாய் -

ஆவேசமாய் எழுந்து தலைகளைச் சி

விரைந்து கொண்டிருந்தது.

"கடலம்மா! என்ன இது! உன்ர வெரு

கண்முன்னே பொய்த்துப்போனது.

அலை இன்னும் ஆவேசமானது.

சட்டென பேரப்பிள்ளைகளை நோக்கி

தாத்தா!

அலறியபடி அவர்களும் இவ்னை நே

அலை கரையில் குத்திட்டு நிமிர -

"தாத்....."

சொல்லி முடிப்பதற்குள்ளாகவே அலை

,அமைதியான சிரிக்கின்ற அரவணைக்கி

மாறிப்போனதாய் அவனுக்குப் புரிந்தது!ர

பிணந்தின்னிப் பேயாக அவன் கண்ணுக்

எல்லாரும் ஓடுங்கோ! முதன் முதலாய் க

முதன் முதலாய் அம்மா என்று சொல்லாம

உச்சரித்தன.

சூசை ஓட ஓட -

சுனாமி அலை இவனை விடவும் வே

வாயை அகலத் திறந்தபடி -

மனிதர்கள், வீடு வாசல்கள், மரங்கள்,

விரைந்தது.


"உது கடலில்லை! பேய்! பேய்க்கடல்!

சூசை அரற்றி முடிப்பதற்குள்ளாகவே அ

சுருட்டியெடுத்து கடல் தன் வாய்க்குள் தி

(யாவும் கற்

— தமி[…]



சூசைக்குத் தோன்றியது.
இப்போதெல்லாம் கடலுக்கு அடுத்தபடியாக அவனுக்கு ஆறுதலும், அரவணைப்பும் தருகின்ற விடயமாகப் பேரப்பிள்ளைகள் மாறியிருந்தனர். அவர்களையும் கடலம்மாவின் இன்னொரு வடிவமாக அவன் நினைத்தான். அந்தத் தளிர்களைத தோளில் சுமக்கையில் கடலன்னையைத் சுமப்பது போன்ற சுகமான உணர்வு அவனுள் எழுந்தது. கடற்கரையிலே, தன்மடியிலே குடிந்தைகளை இருத்தி வைத்திருந்து தன் கடலம்மாவைப் பற்றி அவர்களுக்கு கதைகதையாய்

...இருப்பான். இடையிடையே பேரக் குழந்தைகளை

... நீங்களும் தாத்தாவை மாதிரி கடலம்மாவின்ர பிள்ளையளா

...மிட்டுக் கொள்வான்.
... வாங்கோ தாத்தா!!"
...ள் கரையிலிருந்து கூவுவதை சூசையால தெளிவாகக்

...வள்ளத்தை கரையேத்து!"
...ப்பளவு நீரில் குதித்து வேகமாகச் கரையை அடைந்த சூசை,
...சையோடு தூக்கிக் கொஞ்சத் தொடங்கினான். கரையெங்கும்
...பற்றிக் கொண்ருந்தவர்கள், தம் களைப்புத் தெரியாமலிருக்கப்
..."உம்பாப் பாடல்கள்" கரையெங்கும் பரவிக்கொண்ருந்தன.
... சாப்பிட வாங்கோ!" மழலைக் குரலில் நிக்சன் கூறினான்.
...ங்கள் சாப்பிட்டியளே?"
...த்தான் நாங்கள் சாப்பிடுவம்"
...தி? சரி! நான் பாட்டியிற்ர சாப்பாட்டை இஞ்சை கொண்டு வரச்
...ந்து எல்லாருமாச் சாப்பிடுவம்" என்று அவர்களிடம் கூறிவிட்டு,
...த் தள்ளியிருந்த வீட்டுப்பக்கமாகச் சூசை குரல் கொடுத்தான்.
...டை இஞ்சை கொண்டு வா! பிள்ளையளும் தாத்தாவோட
...ம்"
...ண்டுவாறன்!"



பிலோமினா உள்ளிருந்து குரல்கொடுத்தாள். சூசை குழந்தைகளை இறக்கிவிட்டு, கடல் நீரை வாரியெடுத்து வாயையும், முகத்தையும் அலம்பினான். தோளிலிலிருந்த துவாயால் துடைத்தவாறே, கரையில் நின்ற தென்னமர நிழலில் அமர்ந்து கொண்டான். சற்று எட்டத்தே குழந்தைகள் சோகி பொறுக்கி விளையாடிக் கொண்டிந்தனர்.
பிலேமினா புட்டையும், மீன் கறியையும் சட்டியில் போட்டுக் கொண்டு சூசைப்பிள்ளையை நெருங்கிக் கொண்டிருந்தாள். அப்போதுதான்-
"என்ர கர்த்தரே! கடல் பெருகி வருகுது!!"
பெரிதாய் நாலாதிசைகளிலும்

...மக்குமாறாக அலை பெரிதாக இருந்தது.
...து பயந்தோடுபவர்களைக் கண்டு சூசைக்கு சிரிப்புத் தான்

...பயப்பிடா...ங்கோ! கடலம்மா ஒண்டுஞ் செய்யாள்
... வெருட்டுறாள்" என்று பயந்து போயிருந்த
...கூறிவிட்டு மெதுவாய் சூசை எழுந்தான்.

... கேட்டது
...ரைச்சல்!
...லசாய் துணுக்குற, கடலைப் பார்த்தான்

...போல -

... உயரமாய் -
...து தலைகளைச் சிலிர்த்தவாறு கரையைக் குறிபார்த்து
...தது.
... இது! உன்ர வெருட்டை நிப்பாட்டு" பிரார்த்தனை
...ப்போனது.
...வேசமானது.
...ளைகளை நோக்கி சூசை ஓட-

...ளும் இவ்னை நோக்கி ஓடிவர -
...த்திட்டு நிமிர -

...தள்ளாகவே அலை அவர்களை விழுங்கியிருந்தது. எப்போதும்
...ற அரவணைக்கின்ற சூசையின் கடலம்மா சட்டெனப் பேயாய்
...னுக்குப் புரிந்தது!ராட்சதப் பற்களோடு, கொலைவெறியோடு,
... அவன் கண்ணுக்குக் கடல் தெரிந்தது.

"என்ர குஞ்சுகள்! ஐயோ! என்ர செல்லங்கள்!" பேரப்பிள்ளைகளை நினைத்துக் கூக்குரலிட்டவாறு ஓடத்தொடங்கினான்.
"ஐயோ! கடல் வருகுது!

...முதன் முதலாய் கடலைக்கண்டு சூசை பயந்தோடினான்.
... என்று சொல்லாமல் கடல் என்றுமட்டுமே அவன் உதடுகள்

...னை விடவும் வேகமாய் -
...தபடி -
...சல்கள், மரங்கள்,படகுகள் எல்லாவற்றையும் விழுங்கியபடி

...பேய்! பேய்க்கடல்!"
...தற்குள்ளாகவே அவனையும் பிலோமினாவையும்
...ன் வாய்க்குள் திணிக்கத் தொடங்கியிருந்தது.
(யாவும் கற்பனையல்ல)

# சுனாமியின் கோரத்தாண்டவத்துக்கு கடல் அன்னையா காரணம்?

சுனாமி கடற்பேரலைகளின் நாசகார செயற்பாட்டுக்கு கடல் அன்னையை நம்மில் அனேகர் குறை கூறுகிறார்கள். உண்மையில் கடற் கொந்தளிப்புக்கு கடல் அன்னை காரணமல்ல.

கடல் பொங்குமானால் ஒருகாடும் மிஞ்சியிருக்க முடியாது. லெமூரியா கண்டம் கடலில் மூழ்கிப்போனமைக்கு இவ்வாறான கடற் பேரலைகள் தான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

கடல் பொங்காமல் இருப்பதற்கு ஒரு பழைய புராணக்கதையை கிராம மக்கள் கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

கடல் அன்னை ஊழிக்காலத்தில் ஒரு தினம் திருப்பாற் கடலில் பள்ளி கொண்டுள்ள தன் தமையனாரான நாராயணரைக் கண்டு வணங்கி 'அண்ணா இந்த வாழ்வு எனக்குப் போதும், இதற்கு ஒரு முடிவு கட்டிவிடவிரும்புகிறேன், அதற்கு தாங்கள் உத்தரவு வேண்டும்' என்று மிக விநயமாகக் கேட்டுக்கொண்டாராம்.

பரந்தாமர் சற்றுயோசித்து விட்டு "சரி அதற்கென்ன, நீ விரும்புவது போல் பொங்கிவிடு - இந்த உலகமும் ஜீவராசிகளும் அழிந்து விடும் அவ்வளவுதான். ஆனால், உன் விருப்பத்திற்கு நான் ஒன்றும் மறுப்புத்தெரிவிக்கவில்லை. பொங்குவது உன் விருப்பம். ஆனால் ஒரு நிபந்தனை ......" என்று இழுத்தாராம்.

'அப்படி என்ன அண்ணா நிபந்தனை?' என்று கடல் அன்னை கேட்க, "வேறு ஒன்றுமில்லை, நீ பொங்குவதானால் இன்று அவசரப் பட்டு அப்படி செய்து விடாதே இன்று ஒரு நாள் பொறுத்துக் கொண்டு நாளைக்கு பொங்கி விடு" என்றாராம் திருமால்.

இதைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த கடல் அன்னை, "அண்ணா வாக்களித்துவீட்டீர்கள், பிறகு மாறக்கூடாது" என்று கூற "நான் கொடுத்த வாக்கைமாற்ற மாட்டேன், உனக்குநம்பிக்கைஇல்லையென் றால் ஒன்று செய்வோம். நான் கொடுத்த வாக்கை அதோ கரையருகில் தெரியும்பாறையில் பொறித்துவிடுவோம், கற்பாறையில் பொறிக்கப் படும் எழுத்து மாறாமல் அப்படியே இருக்குமல்லவா?" என்றாராம் பகவான்.

"அதுதான் சரி" என்று அன்னையும் ஒத்துக்கொள்ள; கடற் கரையில் இருந்த கற்பாறையில் "நாளைய தினம் கடல் நங்கை பொங்கி விடுவாள்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டது. கடல் தாய், மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்றாள். நாளைய தினம் பொங்கிப் பூரித்து உலகம் முழுவதையும் அழித்துஒழித்துவிட்டு ஓய்ந்துவிடலாம் என்றுதிரும்பி சென்றவள், அடுத்தநாள் வந்து பார்த்தபோது அதேவாசகம் நாளைக்கு பொங்கிவிடும்படி கூறுவதாக இருப்பதைக்கண்டு அடுத்தநாள் வந்து பார்க்க திரும்பிச் சென்றார்.

இவ்வாறு கடல் அன்னைதொடர்ந்து இன்றும் கூட தினமும் வந்து பார்த்துவிட்டு திரும்பிச்செல்வதாகவும் கூறப்படுகின்றது. கடல் பொங்காமல் இருப்பதற்கு இப்படி ஒரு கதை கிராமங்களில் உண்டு.

உண்மையில் இந்தச் சுனாமி பேரலைகள்தோன்றியமைக்கு கடல் அன்னையை நாம் குறைகூறுவதில் அர்த்தமில்லை.

இந்தப் பேரலைகளை உருவாக்கியது சுமத்திரா தீவுக்கருகில் கடலுக்கடியில் தோன்றிய நிலஅதிர்வுதான் காரணம். அந்த அதிர்வு 7.0இற்கு மேல் சென்று 9.0 பேர் அதிர்வாக உருவெடுத்தமையால் அந்த அதிர்வுகளின் வேகத்தில் கடலின் நீர் அடிமட்டத்திலிருந்து

## கடல் உண்மையில் பொங்கினால் உலகில் ஒன்றும் மிஞ்சாது

தளம்பி சுனாமி அலைகளை உருவாக்கியது. இவ்வலைகள் மணிக்கு 600 மைல் வேகத்தில் கடலின் எல்லாப்பகுதிக்கும் பரவியது. அந்த வகையில் தென்னாபிரிக்காவின் தென்கரைவரை பேரலைகள் சென்றுள்ளன. இடையில் தென்பட்ட நாடுகள், தீவுகளின் தாழ்வான பகுதிகள் யாவும் அலை புகுந்து நாசம் விளைவித்தது.

எனவே, சுனாமி பேரலைகள் உருவானமைக்கு கடல் அன்னையை நாம் குறைபடுவதில்நியாயமில்லை. பேரலை உருவாவ தற்கு காரணமாயிருந்த கடலடி நிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தான் குறை கூற வேண்டும்.

அதுவும், அந்த பூகம்பத்திற்கு காரணம் என்னவென்பது கண்டு பிடிக்கப்பட்டால் கடலலை ஏற்பட்டதற்கு உண்மையில் யார், அல்லது எது காரணம் என்பது புரிந்து விடும்.

♦ ♦ ♦

கடலுக்கடியில் பூகம்பத்தை ஏற்படுத்தி, கடற்கொந்தளிப்பை உருவாக்கி ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களை - குழந்தை, குஞ்சுகளை - அவர்களின் சொத்துக்களையெல்லாம் அழிக்கவேண்டும் என்ற எண்ணம் எந்த ஒரு தெய்வத்திற்கும் ஏற்பட்டிருக்காது. ஏனென்றால், தெய்வம் கருணையின் வடிவம் - அசுரர்களையும் அசுரத் தனங்களையும் தான் அது அழிக்கும் - இவ்வாறு அப்பாவிகளையன்று.

இந்தப் பூவுலகின் விசையை மாற்றி அமைத்து சோதனை நடத்திப்பார்க்க வேற்றுலகத்தினர் முயற்சி செய்திருக்கலாம் என்று சிலரும், வல்லரசு நாடுகள் அணு சோதனை போன்றவற்றை நிலத்துக்கடியில் நடத்துவதன் விளைவாக இந்த நில அதிர்வு ஏற்பட்டிருக்கலாம் என வேறு சிலரும் கருதுகிறார்கள்.

♦ ♦ ♦

## நியமனம் பெற்ற பட்டதாரிகளுக்கு வசதியும் பாதுகாப்பும்

நெடுந்தீவில் நியமனம் பெற்றுள்ள பட்டதாரி பயிலுநருக்கு உணவு,தங்கும் விடுதி போன்ற வசதிகளுடன்பாதுகாப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று நெடுந்தீவு கோட்டக்கல்வி அதிகாரி கூறியிருப்பதாக வெளிவந்துள்ள செய்தி, அப்பகுதிக்குச் சென்று பணியாற்றவிருக்கும் இளம் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு உற்சாகத்தை அளித்திருக்கும் என்பது நிச்சயம்.

இந்த ஏற்பாடுகளை அவர் தனிப்பட்ட முறையில் செய்கிறாரா, அங்குள்ள உள்ளூர் தொண்டர் நிறுவனங்களின் அனுசரணையுடன் செய்கிறாரா அல்லது அரச திணைக்களங்களின் ஏற்பாடா என்பதெல்லாம் நாம் அறியோம் - எதுவானாலும் கடந்த காலங்களில் பிரச்சினைகளுக்குட்பட்ட மற்றும் சுனாமி அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு புதிதாக நியமனம் பெறும் இளைய தலைமுறையினர், அதுவும் குறிப்பாக இளம் பெண்கள்- அச்சம் கொள்வதும், பின் வாங்க முயல்வதும் இயற்கை. அப்படியானவர்களுக்கு, தாம் பணிபுரியவிருக்கும் பகுதிகளில் தேவையான வசதிகளும் பாதுகாப்பும் உள்ளூர் மக்களிடமிருந்தே கிடைக்கும் என்ற உத்தரவாதம் இருக்குமானால் இந்தப் பின்வாங்கலுக்கு இடமிருக்காது.




நெடுந்தீவில் புதிதாக நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு கோட்டக்கல்வி அதிகாரி இவ்வாறான உறுதியை வெளிப்படுத்தியிருப்பதற்கு நிச்சயமாக அவருக்கு அங்குள்ள மக்கள் அமைப்புகள், அரச நிறுவனங்கள் போன்ற சகல தரப்புகளினின்றும் ஆதரவு கிடைத்திருக்கும் என்று நாம் எடுத்துக்கொள்ளலாம்.

## சத்தமும் சந்தடியும்

நெடுந்தீவுக் கோட்டக்கல்வி அதிகாரியின் இந்தச் செயற்பாட்டை 'சத்தமும் சந்தடியும்' ஏன் இவ்வளவு தூரம் சிலாகித்து பேசுகிறது என்பது வாசகருக்கு புரியாமல் இருக்காது.

ஆம், வாசகரே! நீங்கள் நினைப்பது சரிதான். இவரால் இவ்வாறு செய்ய முடியுமானால் இதே விதமாக நியமனம் வழங்கப்பட்டுள்ள ஏனைய பகுதிகளிலுள்ள அதிகாரிகளும் ஏன் செய்யமுடியாது? என்பதுதானே உங்கள் கேள்வி!

கடந்த காலங்களில் பிரச்சினைக்குள்ளான பகுதிகளில் நியமனம் பெற்றுள்ள பட்டதாரிகளுக்கு வசதிகளும், பாதுகாப்பும் செய்துகொடுக்கப்படும் என்று அப்பகுதிகளில் உள்ள அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டால் இவர்கள் ஏன் பின்னடிக்கப்போகிறார்கள்? மேலும் இப்படியான ஏற்பாடுகளைச் செய்துகொடுப்பது பற்றி ஏற்கனவே அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்குமானால் இதனை வெளிப்படையாக அறிவித்தால் இந்த இளம் பிள்ளைகளின் பெற்றோர், பாதுகாவலர்களின் ஆதங்கமும் தவிர்க்கப்படும், அவர்களும் உற்சாகம் பெறுவார்கள் அல்லவா?

இது இவ்வாறிருக்க, பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் வேண்டும் என்ற வகையில் பெரும் எடுப்பில் அமைப்பு ரீதியாகப் போராட்டங்கள் நடத்திய பட்டதாரிகளில் பலர் தமக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ள பகுதிகளுக்குப் போக மறுப்பது அல்லது பின்வாங்குவது சரிதானா என்று ஒரு வாசகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

எல்லாப் பட்டதாரிகளுக்குமே ஒரே பகுதியில் - அதாவது ஒரே மாவட்டத்தில் நியமனம் வழங்குவதென்பது சாத்தியமாகவிருக்காது. மேலும் பட்டதாரிகளின் தகுதிகளின் அடிப்படையிலேயே நியமனங்கள் வழங்கியிருப்பார்கள். இந்த நிலைமையில் தாங்களுக்குப் பிடித்தமான திணைக்களத்தில் அல்லது பகுதியில் நியமனம் கிடைக்கவில்லையென்று கவலைப்படுவதில் அர்த்தமிருக்காது.

♦ ♦ ♦

### பெண்களைக் கிண்டல் செய்யும் பேர்வழிகள்

பின்வருமாறு ஒருவர் எழுதுகிறார்.

யாழ்.கோவில் வீதியூடாகப் பயணிப்பதற்கு இளம்பெண்கள் மிகுந்த அச்சமடைந்து வருகிறார்கள் என்பது தெரிய வந்துள்ளது.

இவ்வீதியூடாக பயணிக்கும் பெண்களை சிலர் கிண்டல் கேலி செய்வதுடன், அசிங்க வார்த்தைகளாலும் பேசுகிறார்களாம். சிலர் உடல் சேட்டையிலும் ஈடு படத் தயங்குவதில்லையாம்.

இளம்பராயத்தினர் மட்டுமன்றி, இளமை கடந்த பேர்வழிகளும் இப்படி நடந்துகொள்வதாக சிலபெண்கள் தெரிவித்தனர். ❖

# "... படிக்கிறதுக்கான சூழ்நிலை இல்லை பரீட்சையை ஒத்திவைக்கக் கேட்கலாம்..."

## 2 நீங்கள் எல்லாரும் அப்பர்மடம் தானே...?

அதுவரையில் அமைதியாய் இருந்த இளையம்மா -

'கோவிக்காத பிள்ள....
இதோட பத்துப்பேர் வந்து
கேட்டுக் கொண்டு போட்டினம்...
ஆனா ஒண்டும் நடக்கிறதாத்
தெரியேல்ல...

'.....இதுக்கு நீங்கள் சரியான முடிவு எடுக்கேல்லையெண்டா (வெளிப்படுத்தவில்லையென்றால்)

'நாங்கள் உங்களைப்பற்றிப் பேப்பரில குடுக்க வேண்டிவரும்...'

பாசத்துடனே கண்டித்துக் கொண்டாள் தன் முதுமைக்கே உரிய கௌரவத்துடன்



'ஏனெண்டா சில பேர் விளம்பரத்துக்காகவும் .... நாங்கள் உதவி செய்கிறோம் எண்ட வாய்ப்பேச்சிலையும் வந்துட்டுப் போவினம் தானே...?' என்று இழுத்தாள்... அருகில் நின்ற பிள்ளையக்கா.

நான் ஏதும் குறையாக நினைத்துவிடுவேன் என்று



அவன் நினைத்தாளோ என்னவோ?...!எப்படி முகாம்...?

> "சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள நலன்புரி முகாம்களுக்குச் சென்று மாணவர்களின் மனநிலையை அறிகிறார் சூரியகாந்தி கட்டுரையாளர்...."

எனக்குத் தெரிந்திருந்தும் ஒரு பேச்சுக்காகக் கேட்டேன்...

'எங்கட பிள்ளையள்
கடவுளே எண்டு ஒரு குறையும் இல்லாமல் பாக்குதுகள்' - ஒருவர்.

(பிள்ளைகள் என்று விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்டார்)

'சாமத்திலையும் காய்ச்சலெண்டா உடன பனடோல், நுளம்புத்திரி முடிஞ்சா அது... மெழுகுதிரி ... எல்லாம் தருவினம்' - இன்னுமொருவர்.

'இந்த உடுப்புகள் கூட ஊருக்க அதுகள் தண்டிக்கொண்டு வந்து தந்தது தான்... நாங்கள் எல்லாத்தையும் இழந்து தானே வந்தம்....'

- அங்கிருந்த வயதான மூதாட்டி .

'நல்ல சாப்பாடு.. என்னதான் இருந்தாலும் வீட்டில அரைச்சுக் காய்ச்சிற மாதிரி வருமே... எங்கட வாய் ருசிக்கு அதுகளிட்ட போய் கேக்கேலுமே...?' - வேலா அண்ணன்.

இப்படி தம் முகாம் வாழ்க்கை பற்றி ஒரு மேலோட்டம் போட்டார்கள் அவர்கள்.



அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு வரும் வழியில் ஒரு சுவரோரமாக எங்கோ பார்த்தபடி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் அந்த அம்மா...

55 வயசிருக்கும் அவவின் பெயர் திருமதி வேலும்மயிலும் இரத்தினம்.

இறால் வாடிக்காக முல்லைத்தீவுக்குப் போயிருந்த கணவனிடம், போனா தன் மகளை கடலுக்கு காவு கொடுத்துவிட்டு அந்து பேரப்பிள்ளைகளையும் தாங்கிக் கொண்டிருக்கும் அவள் எப்படி யோசிக்காமலிருப்பாள்?

"அம்மம்மா... எனக்கு ரியூசனுக்கு கனக்கக் கொப்பி வேணுமணை...." என்று பேரனின் குரல்

அவள் சிந்தனைக்குத் தடைபோட்டிருக்க வேண்டும் திரும்பினாள்.

என்னைக் கண்டதும் தான் கவலையாக இல்லாதவள் போலக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறாள் அந்த அம்மா.

இன்னமும் தன் தாய் வருவாள் என்றே நம்பிக்கொண்டு அம்மம்மாவின் மடியில் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தான் முதலாம் தரம் படிக்கிற சஞ்சீவன். தன் தாயை எனக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என ஆசைப்பட்டிருப்பான் போலும்.

"அம்மா 2ஆம் திகதி வருவா..." - என்றான். இப்போது அம்மா மெல்ல என்னுடன் கதைக்கத் தொடங்கினார்.

"இவையள் எல்லோரும் படிக்கினம்.... மூத்தவள் துளசி நாயகி ஓ.எல். படிக்கிறாள்... மற்றது கிருஷ்ண நாயகி... 7ஆம் வகுப்பு. இரண்டு பேரும் இண்டைக்குத்தான் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிச்சினம்... நிறச்சட்டையோட தான்... இனி கொப்பிகள் எல்லாம் வாங்கிக் குடுக்க வேணும்... பள்ளிக்கூடத்தில புத்தகங்கள் குடுப்பினம் தானே..." - இடைவெளிவிட்டுவிட்டு யோசனை கலந்தே பேசினாள்.

அவள் அருகிலிருந்த 'வாங்கு' ஒன்றில் 6ஆம் ஆண்டு படிக்கிற துஷ்யந்தனும் 4ஆம் ஆண்டு படிக்கிற வினோவும் சஞ்சீவனும் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்கள். - இவர்கள் இரத்தினம் அம்மாவின் பேரப்பிள்ளைகள்.

தம்பிக்கு 'சண்டே', 'மண்டே' சொல்லிக்கொடுத்துக் கொண்டிருந்தனர் அக்காவும் அண்ணாவும்.

தம்பி தமிழ் உச்சரிப்பிலேயே சண்டே, மண்டே என்று எழுதிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.



அவர்கள் கல்வி ஆர்வம் என்னை சிந்திக்கவைத்தது.

நெஞ்சைவருடவும், அம்மாவிடம் விடை வாங்கிக் கொண்டு புறப்பட்டேன்.

இன்னுமொரு முகாம் நோக்கிய என் பயணத்தின் முடிவில் நான் சந்தித்தது ஜோர்ஜ் என்ற மாணவனை. அப்போதுதான் எங்கோ நண்பனிடம் 'நோட்ஸ்' கொப்பிக்காகச் சென்றுவிட்டு வந்து கொண்டிருந்தான் ஜோர்ஜ்.

ஊரில் எல்லோருமே ஜோர்ஜ் என்று கூப்பிடுகிற அவன் பெயர் அருள்சீலன் ஜோர்ஜ் வோசிங்டன். பருத்தித்துறை முனைப்பகுதியில் இருந்து வந்திருக்கும் இவன் ஹாட்லிக் கல்லூரியில் கலைப்பிரிவில் கற்றுக் கொண்டிருப்பவன்...

சிரித்தவாறே என்னருகில் வந்திருந்தவன்... என் பேச்சுக்கு பதில் பேசினான்.

**சந்திப்பு :சிவசைலஜா**
**படங்கள் : லக்ஷ்மணன்**

பாஸ் பண்ணுவன் எண்ட நம்பிக்கையிருக்கு... ஆனா இந்த ரூமில இருந்து படிக்கேலாது ... பக்கத்தில எல்லாம் சின்னப்பிள்ளைகள் இருக்கினம்... ஒரே சத்தமாய் இருக்கும்.. இந்த அறைக்குள்ள ஐந்து குடும்பம் இருக்கிறம்..." என்ற படி தாமிருக்கும் அந்த (வகுப்பு) அறையைக் காட்டுகிறார்.

அப்போது -

அந்த ரூமிலேயே குடியிருக்கும் ஜெனற் சுஜித்தாவும் எங்கள் கதைக்குள் உள்வாங்கப்பட்டாள்...



அவள் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் கலைப்பிரிவில் கற்கிறாள்.

"லைற் வசதியெல்லாம் இருக்குத்தான்... ஆனால் இதுக்குள்ள இருந்து என்னெண்டு படிக்கிறது....." கேள்வி தொடுத்தாள்.

அவள் படிக்கும் இடமும் அந்த ரூமிலேயே இருந்தது.

ஜெனற் சுஜித்தா இரண்டு கொப்பிகளை வைத்திருந்தாள். அதுதான் இப்போது அவளிடம் எஞ்சி உள்ளவை... "மிச்ச மெல்லாம் வெள்ளத்தோட போயிற்றுது..." - என்றாள் பரிதாபமாக.

அவள் விட்ட இடத்தில் இருந்து ஜோர்ஜ் தொடர்ந்தான்.

"எங்கட ஏ.எல் பரீட்சையை 2,3 மாதம் பிந்திப் போட்டா நல்லது... எல்லா இடமும் பாதிக்கப்பட்டிருக்குத்தானே... குறைஞ்சது 2 மாதமாவது பிற்போடுமாறு பொது அமைப்புகள் சேர்ந்து கேட்கலாம்.. . எல்லாரும் சேர்ந்து கேட்டால் சரிவரும் ..." - எனத் தன் மன கவலையையும் எதிர்பார்ப்பையும் வெளியிட்டான்.

ஜோர்ஜ் 'ஐ' பல கனவுகளோடு படிக்கவைத்த அவன் அம்மாவைக் கண்டேன்....

ஜோர்ஜ் தான் அறிமுகப்படுத்தி வைத்தான்...

"இந்த முறை எப்படியும் சோதின எடுக்கத்தானே வேணும்... படிக்காமல் இருந்து என்ன செய்வது... வீணாக காலம் போக்கக் கூடாது தானோ..." என்று தன் மனக் கனவுகளைப் பகிர்ந்து கொண்டார் அவன் அம்மா.

அம்மா சொல்லி முடிப்பதற்குள்ளாகவே முந்திக் கொண்ட ஜோர்ஜ் -

"முல்லைத்தீவுப் பக்கமெல்லாம் எல்லாற்ர வீடுகளும் இல்லைத்தானே ... இது நாடு முழுவதுக்குமான அழிவு தானே.. என்பதால் பரீட்சை பிற்போடப்பட்டால் எல்லா மாணவரும் பலன் அடைவார்கள்..."-

அவன் பரீட்சையை பிற்போடுவது என்ற கருத்தை அறிவதிலேயே கூரியாய் இருந்தான்.

ஜெனற் சுஜித்தாவிடமும் ஜோர்ஜ் இடமும் விடை கூறிக் கொண்டு புறபட்டேன்.




## ஒய்ந்து விடு! இல்லையேல் காய்ந்துவிடு!!

வாழ்வதற்காகத் தானே
அன்னையே
உன்னடியில்
எங்கள் வாழ்விடங்களை
வகுத்து வைத்தோம்

நீ வாழவைத்தாய்
கடல் வளங்களையெல்லாம்
கை நிறையத் தந்தாய்
உண்டி நிறைய
உணவுதந்தாய்!

இன்று நீ...?
வாழவைத்த அன்னையே
இன்று மட்டுமேன்
எங்கள்
மொத்த வாழ்க்கையையும்
சூறையாடிச் சென்றாய்!

நீ அணைக்க வருவதாக
நீண்ட நாளாய் நினைத்திருந்தோம்
அழிக்க வந்ததேனம்மா?

பால் மணம் மாறாத
பச்சிளம் குழந்தைகளையும்
பலியெடுத்த நியாயமென்ன?

குருவியைப் போல்
கூடுகட்டி வைத்திருந்தோம்
சில நொடியில் அதன்மீது
நீ ஊழிக் கூத்து ஆடியதேன்?
வஞ்சனையம்மா
இது
பெரும் வஞ்சனையம்மா!

குண்டுகளும் கத்திகளும்
குடித்த உயிர்கள்
போதாதென்று
உண்டு பருக்க வந்தாயா?
எம்மை
துண்டுதுண்டாய் சிதைத்தாயா?

கடலம்மா!
எங்கள்
நிர்க்கதி பாரம்மா!

குடும்பம் குடும்பமாய்
நீ பிடுங்கி யெறிந்த
சோகங்களும்
கூட்டங்கூட்டங்களாய்
நீ உமிழ்ந்திட்ட
பிணங்களும்
இப்போது கூட
உன்னடியில் தானே
உறைந்து கிடக்கின்றன!

போர்தந்த வடுக்கள்
போதாதென்று
நீர்கொண்டு வந்தாயா
எம்மை அழிக்க?

மரண இரேகைகளை
மனங்களில் வரைந்து
நீ சாதித்துவிட்டதுதான் என்ன?

உறவுகளை இழந்து
கதறுகின்ற அழுகுரல்கள்
இன்னுமா உன்காதில்
விழவில்லை?


போதுமம்மா
உன் பொல்லாத
கடுஞ்சீற்றம்!

ஒரு தலைமுறையல்ல
ஒன்பது தலைமுறைகளாய்
சேர்த்துச் சேமித்ததெல்லாம்
ஒரு நாளில்
துவசம் செய்தது போதும்!

ஒய்ந்து விடு
இல்லையேல்
காய்ந்து விடு!

சூரியநிலா

# யாழ். பாணம்



## பாதிப்பு

சாதாரண மனத்தை விட - நீறு பூத்த நெருப்பின் நிலையில் - ஆழ் உறக்க நிலையில் - மனிதனது உள் மனமொன்று அவனுடன் ஐக்கியப்பட்டிருக்கிறது. சில அசாதாரண வேளைகளில் அது விழித்துக்கொள்வதால் கோபம், குரோதம், எரிச்சல், வெறுப்பு, பொறாமை, இயலாத்தனம் போன்ற உணர்வுகளால் வக்கிர எண்ணங்களும், கருணை, காருண்யம், கழிவிரக்கம், எதிர்வு உணர்தல் போன்ற உணர்வுகளால் பண்பான சிந்தனைகளும் வெளிப்படுவதாக மனத்துவ ஆய்வாளர்கள் இனம் கண்டுள்ளனர்; அவர்களது முடிவின்படி இதுவும் ஒருவகை மனநோயே.

பீடிகை பலமாக இருக்கிறதே என எண்ணுகிறீர்களா?

தனது விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு முன்னேற்றத்தால் உலகையே வென்றுவிட்டதாக மார்தட்டும் மனிதனின் ஆணவச் செருக்குக்கு, இயற்கையின் சூட்சுமத்துக்கு இத் தனை காலமாய் விடை காண இயலாமற்போன அவனது கையாலாகாத் தனத்தைச் சுட்டிக்காட்டுவது போலமைந்து விட்டது அண்மைய சுனாமி அனர்த்தம்.

உலகின் ஒரு தரப்பினருக்கு இழப்பு, துயரம், மன உளைச்சல் எனத் தோல்விகளை அளித்த இந்த அனர்த்தம், மற்றொரு தரப்பினரின் அபிலாஷை, ஏக்கம், எதிர்பார்ப்பு என்ற விருப்பங்கள் நிறைவேறக் காரணமாய் அமைந்ததும் ஆச்சரியம் அளிப்பதொன்றே.

இது அரசியல் அடிப்படையில் அமைந்த செய்தியல்ல; சமூகத்தின் அங்கமான ஸ்ரீமான் பொது ஜனத்தின் ஆழ்மனச் சிந்தனை வெளிப்பாடுகளின் ஓர் உதாரணம் மட்டுமே.

இயற் பெயராலோ அல்லது பெயரைக் குறுக்கிச் செல்லமாய் அழைக்கும் முறையில் குறிப்பிட்டால் கூடவோ, - அது தம்மையே சுட்டுவதாய் குற்றச்சாட்டெழும் என்பதால், அவரை அவரெனவே கொள்வோம். எவருக்குத் தொப்பி பொருந்துகிறதோ, அவரே அதை அணிந்துகொள்ளட்டும்.

வழமையாகவே கறார் பேர்வழியான அவர் நீண்ட காலமாகவே மச்சமாமிசப் பிரியர். ஊரின் மீன் சந்தையில் அவர் எந்தவொரு மீன் வியாபாரியினதும் வாடிக்கையாளரல்லர். வெள்ளிக்கிழமை தவிர்ந்த வாரத்தின் ஏனைய ஆறு நாள்களும் வீட்டுத் தேவைக்கு மீன்வாங்குவதுஅவரது நாளாந் தக் கடமைகளில் அடக்கம். பிள்ளைகள் அனுப்பும் வெளிநாட்டுப் பணத்தால் அவரிடம் எப்போதும் பணப் புழக்கம் அதிகம்.

நீதி, நியாயமற்ற வகையில் அன்றைய பெறுமதிக்குச் சற்றும் பொருந்தாத விதத்தில் - மிகக் குறைவான தொகையே அவரது கேள்வியாக - மீனுக்கு விலை கேட்கப்படும். அவரது பேரம் பேசலால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்ப்பதற்காக மீன் வியாபாரிகள் அவரை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. இது அவரது மனதை எப்போதும் உறுத்திவரும் ஒரு விடயம். நல்ல வகை மீன் தேர்ந்தெடுத்து, பேரம் பேசி, மீன் வாங்கி அவர் வெளியேறக் குறைந்தது ஒரு மணித்தியாலநேரம் எடுப்பது வழக்க மாகிவிட்டது. அத்தனை மீன் வியாபாரிகளும் அவரது குணக்குறியீடாய் அவரைப் 'பலாக்காய்ப் பால்' என்றே குறிப்பிட்டு அழைப்பர்.

எந்தவொரு மீன் வியாபாரியும் அவரது விமர்சனத்திலிருந்து தப்பியதில்லை; தங்கச் சங்கிலி, பெறுமதி மிக்க மோட்டார் சைக்கிள், இவற்றுடனான பட்டாடோபத்துடன் இம் மீன் வியாபாரிகள் உலாவுவதற்கு அவர்கள் அறாவிலைக்கு மீன் விற்றுத் தேடிய நியாயமற்ற தேட்டமே காரணமென்பது அவரது கூற்று. உயிரைப் பணயம் வைத்து கடலில் மீன் பிடிக்கும் மீனவருக்கும், தம்மைப்போல் அன்றாடம் மீன்வாங்கும் பொது மக்களுக்கும் இடையிலுள்ள இம் மீன் வியாபாரிகளால் சுரண்டப்படுவதாக வெளிப் படையாக அவர் விமர்சிப்பதுண்டு. ஆனால், தமது அக் கருத்தைக் கண்டித்தும், கேலிசெய்தும் தம்மை மட்டம்தட்டும் மீன் வியாபாரி கள் மீது அவருக்கு எப்போதுமே ஒரு காய்ச்சல்.

சுனாமி என்ற கடல் அனர்த்தத்தால், கடலையே நம்பி வாழ்ந்த மீனவர்கள் மட்டுமேயொழிய, மீனவர்களை நம்பித் தொழில் செய்த மீன் வியாபாரிகள் பாதிக்கப்படவேயில்லை என்பது அவரது வாதம். மீன் பிடித்தொழில் பாதிக்கப்பட்டதால் ஏற்கனவே வசதி வாய்ப்பைத் தேடிவைத்துள்ள மீன் வியாபாரிகள் கொஞ்ச நாள் ஓய்வு எடுக்கிறார்கள் எனவும் அவர் கூறிவந்தார்.

அனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதம் ஓடி மறையும் நிலையில், தற்போது மீனவர்கள் பிடிக்கும் மீன்களை உண்பதால் எவ்வித சுகாதாரப் பாதிப்பும் ஏற்படாதெனத் துறைசார் வல்லுநர்கள் உறுதியாகத் தெரிவித்து வருகின்றனர். அனர்த்தத்தையடுத்து பொதுவாகவே கடலுணவு உண்பதைத் தவிர்த்துவந்த பொது மக்கள், தற்போது மீன் உண்ண ஆரம்பித்ததை அடுத்து ஒரு மாதகாலமாய்படுத்துப் போயிருந்த மீன் வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

அனர்த்தத்தை அடுத்து அவரது வீட்டில் தடைப்பட்ட அசைவ உணவு வாய்ப்பு தொடர்ந்தும் தடைப்பட்டிருப்பது மட்டுமன்றி, இத் தடை நீக்கம் இலேசில் இடம் பெறுமென்பதற்கான அறிகுறி எதையும் காண முடியவில்லை.

மரக்கறி வகை வாங்கவென தினமும் சந்தைக்கு வரும் அவர் மீன் வியாபாரம் மீண்டும் களைகட்டுவதைக் காண நேர்ந்ததையடுத்து அவரது ஆழ் மனது விழித்துக் கொள்கிறது.

அயலூர் ஒன்றில் தனது நண்பரொருவர் சென்ற வாரம் வாங்கிய மீனை வெட்டியபோது மீனின் வயிற்றில் தங்கத்தோடொன்று இருந்ததாக அந்த நண்பர் தெரிவித்தாரென இவர் வைத்துக்கட்டிப் புனைந்த கதை வெகுவேகமாய் அப் பகுதி முழுவதும் பரவ, - முழுக் கிராமத்திலும் அன்று அதுபற்றியே பரபரப் பான பேச்சு.

காரியம் கச்சிதமா[illegible] நிறைவேறிவிட்டது. அடுத்த நாள் முதல் மீன் சந்தை வெறி[illegible]த் தொடங்கியது ஓரிரு நாள் பாவனையாளர் எவரும் மீன் வாங்காமையால், மீன் வியாபாரிகளும் நேற்று முதல் அந்தச் சந்தைக்கு மீன் வியாபாரத்துக்கு வருவதைத் தவிர்த்துக்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.

தனது பொறுப்பற்ற இக் கதைகட்டலால் அவரது வெறுப்புக்குப் பாத்திரமான மீன் வியாபாரிகள் எந்த வகையிலும் பாதிப் புறப் போவதில்லையென்றும், பாவம் ஏழை மீனவர்களும், பாவனையாளர் களான பொது மக்களுமே பாதிக்கப்[illegible] போகிறார்கள் என்பதையும் அவர் உணரத் தவறிவிட்டாரே!

என்ன செய்ய இயலும்? இவரைப்போன்[illegible] கூட சமுதாயம் என்ற ஆல மரத்தின் விழுதுகள் அல்லவா?

**- பொன்வேளன்**

# யார் உறவுகள்?

## சிறுகதை

நாங்கள் பனியிலும் குளிரிலும் கஸ்ரப்படுவது ஊரிலே இருப்பவர்களுக்குத் தெரியவில்லை. உறவுகள் இழந்து தனிமரமாய் இந்த மொழி தெரியாத நாட்டிலே உழைப்பது கடினமென்று அவர்களுக்குப் புரியவேயில்லை.

நினைத்த போதெல்லாம் காசனுப்பவேண்டும்.

நினைத்தபோதெல்லாம் ரெலிபோன் எடுத்துக் கதைக்கவேண்டும். இல்லையெனில், ஒரே பேச்சுத்தான்.

சித்தப்பாவுக்கும் மாமாமார்களுக்கும் காசனுப்ப வேண்டாமென்று கட்டளையும் வேறு.

எமது உணர்வுகள் புரிகிறதா? குமாரால் ரெலிபோனில் கத்த முடியவில்லை. விளக்கத் தெரியவில்லை.

குமார் தனது தங்கைமார் இருவருக்கும் ஊர் மெச்சத் திருமணம் செய்து வைத்தாயிற்று. தம்பி சிவாவுக்கு ஊர் சுற்ற மோட்டார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தாயிற்று. இனி இவனது முறை.

வெளிநாட்டில் மாடாய் உழைத்ததில் வீட்டிற்கு அனுப்பியது போக, தனக்கும் கொஞ்சம் சேர்த்து வைத்திருந்தான் குமார். கொஞ்சமல்ல பத்து லட்சம்.

தனது எட்டத்துச் சொந்தக்காரரில் ஒருவரான குமாரவேல் மாமாவின் மகள் மல்லிகாவைத் திருமணம் செய்வதற்காக வெளிநாட்டிலிருந்து புறப்பட்டு வந்தான்.

அங்கிருந்து வெளிக்கிடும்போதே ரெலிபோனில் ஆணித்தரமாக அம்மா சொல்லிவிட்டார் அந்தப் பத்து லட்சத்தையும் ஒருவருக்கும் கொடுக்காமல் தங்களுக்கே தரும்படி. தாங்கள் குமாரவேல் மாமாவிடமும் சீதனக் காசாகப் பதினைஞ்சு லட்சமும் வேண்டியாச்சென்றும் சொல்லப்பட்டது.

குமாரவேல் மாமாவுக்கு ஏது பணம்?

பாவம் இரண்டும் பெண் பிள்ளைகள் ஆயிற்றே. இவன் வரும்போது ரெலிபோன் எடுத்துக் கதைத்தான். குமாரவேல் மாமா ரெலிபோனில் அழுதார். ஏதோ கஸ்ரப்பட்டு காணியை ஈடுவைத்துக் காசு கொடுத்தாச்சு என்றார்.

அம்மாவுக்கு ஏனிந்தக் காசாசை என்று எண்ணியவனாகப் பிளேன் ஏறினான் குமார்.

குடும்பத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஒரு புறமும், காதலி மல்லிகாவைக் கைப்பிடிக்கப் போகிறோமே என்ற ஆசை மறு புறமுமாக கொழும்பு வந்திறங்கியவனுக்குப் பேரதிர்ச்சி.

கடல் பொங்கி சுனாமி ஆர்ப்பரித்தது. இவன்து கரையோரக் கிராமத்தையும் வழித்துத் துடைத்தது சுனாமி.

குமார் தனது ஊரில் இறங்கி ஓ...வென்று அழுதான். அம்மா எங்கே? அப்பா எங்கே? தங்கைமார் எங்கே? மோட்டார் சைக்கிளில் சுத்தித் திரியும் தம்பி சிவா எங்கே? ஐயோ.... அம்மா ..... இந்தாங்கம்மா.... நீங்கள் கேட்ட பத்து லட்சம் கொண்டு வந்திருக்கிறேன்.... எங்கையம்மா போய்விட்டீர்கள்.....? சுனாமி [illegible] ஆர்ப்பரித்தான் அவன்.

பனையோலைகளுக்குக் கீழே கண்டெடுத்த குமாரின் அம்மாவின் உடலைக் கொண்டு வந்து கிடத்தினார்கள். அதனருகே மல்லிகாவின் உடலையும் கொண்டுவந்து பரப்பினார்கள். மிகுதிப் பேர் எங்கேயென்றே தெரியவில்லை.

அம்மாவினதும் மல்லிகாவினதும் உடல்களைக் கட்டிப்பிடித்து அழுதான்.

ஊரவர், தெரிந்தவர், அறிந்தவர்கள் வந்து குமாரைச் சுற்றி அழுதார்கள். அங்கே எல்லோருக்குமே இழப்புக்கள் இருந்தன.

அழுது புலம்பியவன் சிறிது நேரத்தில் எழும்பி நடந்தான்.

ஊரைப் பார்த்தான். தனது புதுவீட்டைப் பார்த்தான். அனைத்துமே சிதைந்திருந்தது. குமாரவேல் மாமா ஈடு வைத்த காணி எங்கே? அது கூடப் புலப்படவில்லை. அவன் எல்லாவற்றையும் கடந்து அப்படியே நடந்தான்.

தம்பி குமார் நில்லப்பா - ஒரு பெரியவர் நிறுத்தினார். என்ன? என்பது போலப் பார்த்தான்.

நீ கொண்டு வந்த காசை ஊரவருக்குக் கொடுத்துவிட்டுப் போப்பா....

இல்லை ஐயா. இது ஊருக்கு இல்லை என்ர சொந்தக்காரர்களுக்கும் இல்லை. அப்ப யாருக்கப்பா? இது எல்லோருக்கும். இது சுனாமி நிதியத்திற்கு என்று கூறியவன், அப்படியே தனது வழியில் நடந்தான்.

இனி இவனுக்கு அனைவரும் உறவுகள்தான்.

**அ. சூரியன்**
**ஊறணி**

# ஏது உண்மை?

ஒரு ஒரு என்று
ஓடிய காலங்கள்
மலையேறிவிட்டன.

இது
திரும்பிப் பார்க்கின்ற காலம்

பிரளயமாய் பூமியதிர...
தூபமிட்ட
சங்கதிகளெல்லாம்
எதையெதையோ
சொல்ல நினைக்கின்றன.

இரத்தமும்...
இடிபாடுகளும்...
உணர்த்தாத விடயங்களை
இயற்கை உணர்த்தியதோ?

எவரெவரோ
வந்து போகிறார்கள்
வாய் வீச்சுக் காட்டுகிறார்கள்.
இவர்களுக்கெல்லாம்
என்ன புரிந்தது?

பாழடைந்துபோன நாடு
சொல்லாத விடயங்களை
பேரலை உணர்த்தியதோ?
யாருக்குப் புரிந்தது?
யாரெல்லாம்
உணர்ந்தார்கள்?

சத்தமாயும்
சந்தடியாயும்
புகுந்துகொண்ட இவர்களின்
திட்டம்தான் என்ன?

பாழடைந்த
நாட்டைப் பார்த்து
மனிதம் விழித்ததா?
அல்லது...
எது உண்மை...?

- சத்ரோன்

# பூமாதேவிக்குப் பிடிக்கவில்லை

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதமாகியுள்ள இவ்வேளையில் 'அதை' விடுத்து வேறு 'பகிடி'க் கதைகளைச் சொல்லவந்தால் எனக்குச் 'சமுதாய ஆத்மீகப் பார்வை' இல்லை என்றாகி விடுமே .... இப்படி நினைத்துக் கொண்




டிருக்கையிலே... ஒரு திருமுருகன் வந்தான் யான் உய்ய... ஆமாம் தமிழறிஞர் ஆறு.திருமுருகன் அவர்கள் தான் இவ்வாரமும் எனக்கு கை கொடுத்திருக்கிறார்.

கந்தரோடை, ஸ்கந்தவரோதயக்கல்லூரி நிறுவுநர் நாளும் பரிசளிப்பு விழாவும் சென்ற வாரம் நடைபெற்றன. அதிலே அவர் ஆற்றிய நிறைவுரையானது மிகவும் அற்புதமாக இருந்தது. எம்மை எல்லாம் நினைக்க - சிந்திக்க வைப்பதாகவும் அமைந்துவிட்டது.

மேற்படி விழா நவம்பர் மாதத்தில் நடந்திருக்க வேண்டும். அப்பொழுது காலநிலை சீரற்று மழை பொழிந்து கொண்டிருந்ததால் கடைசி நேரத்தில் விழா ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அன்று மட்டும் என்ன ? முதல் நாள்வரை கடும் வெய்யில் எறித்துக்கொண்டிருக்க, விழா நாள் என்று பார்த்துச் சொல்லி வைத்தாற்போல மழை... அது பற்றித் திருமுருகன் குறிப்பிடுகையில், 'எனக்கா சவால் விட்டீர்கள் ? காட்டவா எனது கெட்டித்தனத்தை?' என்று இயற்கையன்னை எமக்கு எச்சரிக்கை செய்வது போலத் தானே இது இருக்கிறது இயற்கையை யாரும் வெல்ல முடியாது என்றார். அன்றைய விழாவை மழை பெரிதாகக் குழப்பவில்லை என்றாலும் மழை சிணுசிணுத்துக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கந்தபுராணக் கலாசாரத்துக்குப் பெயர் பெற்ற யாழ் மண்ணில் கலாசாரமும் மனிதாபிமானமும் எவ்வளவுக்குக் கெட்டுப் போயிருக்கின்றன என்பதை அவர் 'கஜுரினா பீச்'சிலிருந்து தொட்டுக் காட்டினார்.

பேரலைக்கு உறவைப் பறிகொடுத்துப் பரிதவித்துக் கொண்டிருந்தவர்களிடம் உருக்குலைந்த ஒரு சடலத்தைக் கொண்டு வந்து 'இதுதான் அந்தச்சடலம்' என்று கொடுத்து ரூபா ஐயாயிரம் பெற்றுக்கொண்ட ஒரு நிகழ்வினையும் யாழ் போதனா வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவிலே உயிருடன் போராடிக்கொண்டிருப்பவர்களின் உறவினர்கள் வெளியிலே கவலையுடன் ஊண் உறக்கமின்றி 'நல்ல செய்தி'க்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களைச் சுற்றி அதிக தொகைக்கு வாகனம் விட வென்று இவர்களும் தான் ஊண் உறக்கமின்றி அவர்களின் முடிவு'க்காக அவர்களை நச்சரித்துக்கொண்டு. போட்டிபோட்டுக் கொண்டு காத்திருக்கிறார்கள்.

அந்த வக்கிரம் பிடித்த வாகனச் சொந்தக்காரர்களையும் அறிமுகம் செய்தவர் அவைகளுக்கு மேலாக இன்னொரு நிகழ்ச்சியினையும் சொன்னார். அது சென்ற ஆண்டு கீரிமலையில் மகா சிவராத்திரியின் போது நடந்ததாம்.

"கோயிலின் உள்ளே நகுலேஸ்வரப் பொருமானுக்கு விசேட பூசைகளும் வழிபாடுகளும் நடந்துகொண்டிருந்தது. வெளியே கடற்கரை மணற்பரப்பிலே பல பக்தகே(ா)டிகள் உல்லாசமாகப் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தனர். வழிபாடுகளில் கலந்துகொள்ளுமாறு வருந்தி அழைத்தபோதிலும் அவர்கள் அதனைப் பொருட் படுத்தவில்லை. கடைசியில் பெருமான் தீர்த்தமாட வந்த போதுகூட அவர்கள் அந்த இடங்களைவிட்டு அகலவில்லை. அவர்கள் எவ்வளவு தடுத்தும் கேளாமல்

## கலியுகம் வந்துவிட்டதாம்...

ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி நீரில் குதித்து புனித கங்கையைக் கலக்கி மாசுபடுத்திவிட்டனர். (நல்லூர் தீர்த்தக் கேணியில் 'பயிற்சி' பெற்றவர்களும் அவர்களில் இருக்கலாம் - ஆர் ) அன்று நகுலேஸ்வரப் பெருமான் அவர்கள் களங்கப் படுத்திய நீரிலே தான் தீர்த்தமாடினார்....

அன்று நல்லவர்கள் மனவேதனையடைந்தார்கள். கடல் அன்னைக்கும் அதெல்லாம் பொறுக்கவில்லை. சுனாமிப் பேரலையாகப் பொங்கியெழுந்து அட்டகாசம் புரிந்துவிட்டாள். கடல் அன்னை எமக்கு வாழ்வளிப்பவள்; அன்பே உருவானவள். அவளைத் திட்டாதீர்கள் "கொடிய அலையே' என்றெல்லாம் கவிதைகள் பாடிப்பயனில்லை. அவளை வணங்க வேண்டும் செய்த பாவங்களுக்கு அவளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். அப்பொழுதுதான் அவள் இனிமேலும் பொங்கி எழாமல் எம்மை வாழவைப்பாள்"

♦ ♦ ♦

வண்ணார்பண்ணை, சிவன் கோவில் சந்திக்கும் 'அரசடி' போலவே சில மகத்துவங்கள் உண்டு. காங்கேசன்துறைச்சாலை வழியாக நகருக்குள் நுழையும் நகரிலிருந்து வெளியேறும் பஸ்களின் தரிப்பிடமாகவும் அது திகழ்கிறது. சுவையான தேநீர் -பலகார வகைகளுக்காக அங்குள்ள 'சண்முகம்' கடைக்கு எங்கிருந்தோவெல்லாம் இருந்து ஒரு கூட்டம் வரும். 'தாம்பூலம்' போட்டுக் கொள்ளவும் 'நிஜாம்பாக்கு' வகைகள் வாங்குவதற்காகவும் வந்துபோகிறவர்கள் வேறு.... மாம்பழம். பலாப்பழ சீஸன்களில் அந்த வியாபாரங்களும் நடைபெறுவதுண்டு. அதைவிட மோட்டார்சைக்கிள் வாங்க, விற்க அவை சம்பந்தமான பேரம்-பேச்சு வார்த்தைக்குரியமையமாகவும் அச்சந்தி விளங்குகிறது.

அதற்கெல்லாம் நடுநாயகமாக-தலைமைதாங்குவது போலிருக்கும் அந்த ஆச்சியின் கடலைக்கடை சிவன்கோயில் கோபுர வாசலருகே, கிழக்கேயுள்ள மேலேசொன்ன 'மகத்து'வங்களை நோட்டம்விடுவது போன்றபாவனையில் சிறியமேசையில் அவள் கடை (கடலை) பரப்பியிருப்பாள். மேசைக்குப் பின்னால் அவள் ஒரு 'பேச்சாளர்' பாணியில் நிற்பாள். பேச்சு சுவாரஸ்யத்திலேயே அவள் 'கொல்வின்' போல அக்கம் பக்கம் நகர்ந்து ஆக்ஸன் காட்டவும் தவறுவதில்லை.

உதயன் அலுவலகத்துக்கு நான்போய் வரும்போது, எனக் கும் அந்தச் சந்திதான் கதி. பஸ்சிலிருந்து அங்கே தான் இறங்கிக் கொள்வேன். மீண்டும் திரும்பும்போதும் அங்கிருந்து தான் பஸ் எடுப்பேன். இடையிலே அந்த ஆச்சியையும் கவனிக்கத் தவறுவதில்லை. நகரிலிருந்து புறப்பட்டு வந்து அங்கு நின்று சனத்தை உள்ளே திணிக்கும் சிற்றூர்திக்காரர் களின் "தாராள மனத்தை"விமர்சிப்பதிலேயே அவளின் பெரும்பொழுது போய்விடும். தனியார் கல்வி நிலையங்களில் இருந்து அங்கு வந்து பஸ்சுக்கு நிற்கும் 'இளசு'களிடமும் அவள் கதை விடத் தவறுவதில்லை. அவள் சிரித்துக்கொண்டே சொல்லும் விமர்சனங்களுக்கு யாரும் எதிர்வார்த்தை பேசமாட்டார்கள்: கோபித்துக் கொள்ளவும் மாட்டார்கள். அப்படி ஒரு ராசி அவளுக்கு.

ஆழிப்பேரலை பற்றி அவள் சொன்னதாவது "கலியோகம் (யுகம்) வந்துவிட்டது. பூமாதேவிக்குப் பொறுக்கவில்லை; அதனால்தான் இதெல்லாம்" "வீட்டிலே இரண்டாம் பேருக்கும் தெரியாமல் இருக்க வேண்டிய குமருகளெல்லாம் றோட்டுக்கு வந்து இப்படியெல்லாம் நடக்கிறார்கள்" என்று ஒரு நடை நடந்து காட்டுகிறாள். அவர்கள் போடுகின்ற சட்டைகள் அதிலேயுள்ள வெட்டுக்களையெல்லாம் கூட அவள் சுட்டிக் காட்டினாள்.

அவள் யாரை மனதில் வைத்துக்கொண்டு சொன்னாளோ அவைகளை அங்குள்ள அவர்களும் தான் கேட்டுச் சிரித்து மகிழ்ந்தனர்.

**-சன் அங்கிள்**

# யாரொடு நோவோம்...?

நமது முன்னோர்கள் சமூகப் பாதுகாப்பை உணர்ந்து கூட்டு வாழ்க்கையே வாழ்ந்தனர். பல இடங்களிலும் கூட்டுக்குடும்ப அமைப்பே நிலை பெற்றிருந்தது. மக் கள் தமது கருமங்களைக் கூட்டாக ஒருவருக்கொருவர் உதவுதல் என்ற வகையில் மேற்கொண்டு வந்தனர். வீடு வேய்தல், கூட்டு இறைப்பு, கூட்டு அறுவடை என எல்லாக்கருமங்களும் அயலவர், உறவினர்களாலேயே செய்யப்பட்டு வந்தன.

இந்தச் செயலொழுங்கே கூட்டுறவாக மலர்ந்தது. நமது பிரதேசத்தில் கூட்டுறவு அமைப்புக்களை நிறுவி, அவற்றை வினைத்திறன் மிக்க மக்கள் சேவையை வழங்கும் அமைப்புக்களாக உருவாக்குவதில் நமது முன்னோர்-பெரியோர்-அர்ப்பணிப்புடன் வேவையாற்றியுள்ளனர்.

கூட்டுறவினால் நாடும் மக்களும் உயர்வடைவது என்ற தாரக மந்திரத்துடன் மக்களுக்குச் சீரிய வேவையாற்றி வந்தவை கூட்டுறவு அமைப்புக்களாகும். குறிப்பாக, தரமான பொருள்களை விநியோகித்தல், உள்ளூர் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல், மக்களுக்குத் தேவையான பல்வேறு சேவைகளையும் அளித்தல் என்ற ரீதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றம் பெற்றன. இவை தனியார் வியாபாரிகளால் மேற்கொள்ளப்படும் பதுக்கல், செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தல், கொள்ளை இலாபமீட்டல் போன்ற நுகர்வோரைப் பாதிக்கும் செயல்களிலிருந்து நுகர்வோரை மீட்கவும் வழிகாணும் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த காலங்களில் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட வேளைகளில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களே பங்கீட்டு அடிப்படையில் பொருள்களை மக்களுக்கு விநியோகித்தன. குறிப்பாக, 1970 களில் சுயசார்புப் பொருளாதாரத்தை வலியுறுத்தித் தென்னிலங்கையில் சுதந்திரக்கட்சி ஆட்சிப்பீடமேறிய வேளையில், கூட்டுறவு அமைப்புகள் வலுவுள்ள சக்திகளாக விளங்கின.

1977 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலிருக்கும் திறந்த சந்தைப் பொருளாதார அமைப்பு கூட்டுறவு அமைப்புகளை வலுவற்ற சக்திகளாக்கி விட்டது. கூடவே, யுத்தம் வட-கிழக்குத் தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள கூட்டுறவு அமைப்புகளின் நிதிக் கட்டுமானங்களைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கிவிட்டது.

இன்றுவரை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தபடி கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கான சேவையை வழங்கிக்கொண்டிருந்தாலும், நுகர்வோர் நலன்சார்ந்த விடயங்களில் சிலதிருப்தியீனங்களையும் வெளிப்படுத்திக் கொண்டேயுள்ளன. இது இன்று நேற்றல்ல. நீண்ட காலமாகவே அள்ளித் தெளித்தாற் போல ஆங்காங்கே நடைபெறுகின்றது.

அவை வெளிப்படுத்தப்படும் போது, ஒட்டுமொத்தமாகக் கூட்டுறவுத் துறைக்கான இழுக்காகவோ, கூட்டுறவாளருக்கான பாதிப்பாகவோ கருதப்படுகிறது. அதற்காகக் கண்டனமும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், சீரிய சேவையாற்றுபவர்கள் தாம் பாதிக்கப்படுவதாக ஒருபோதும் கருதமாட்டார். ஏனெனில், அவரளிக்கும் சேவை அவரது மனச்சாட்சி சார்ந்ததாகும்.

தனியார் அமைப்புகள் பாவனையாளர்களைப் பெரிதும் மதிப்பதில்லை என்றொரு குற்றச்சாட்டு உண்டு. ஆனால், நடைமுறையில் அவ்வாறில்லை. சங்கக் கடைகளில் நல்ல பொருள் வாங்கலாம்: விலை குறைவாக வாங்கலாம்: எடை அதிகம் பாதிக்கப்படாத வகையில் பொருளைவாங்கலாம் என்றஎதிர்பார்ப்பு முன்னர் மக்களிடம் இருந்தது. அத்துடன், சங்கம் தாம் சேர்த்து அமைத்த தமது நிறுவனம் என்ற எண்ணமும் அவர்களிடம் இருந்தது.

இன்றோ, மக்களின் மனநிலை மாற்றப்பட்டுவிட்டது. ப. நோ.கூ. ச. என்ற சுருக்கப்பெயருக்கு நமது குறும்பர்கள் பழு தான நோயுள்ள கூடாத சரக்குகள் விற்குமிடம் என்று கூறுமளவுக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் மலினப்படுத்தப்பட்டு விட்டது. இதற்குத் தனியார் துறையினரின் சூழ்ச்சி ஒரு காரணமென்றால், கூட்டுறவுத் துறையிலுள்ள புல்லுருவிகள் மறு காரணமாகும்.

இன்றுபல பொருள்களும் கூட்டுறவுக் கடைகளைவிடத் தனியாரிடம் மலிவாக உள்ளன. பல பொருள்களைத் தனியாரிடமே கூட்டுறவு அமைப்புக்கள் கொள்வனவு செய்கின்றன.

தனியார் கடைகளில் வாடிக்கையாளர்கள் வரவேற்கப்படுவது, கௌரவமாக நடத்தப்படுவது போன்ற நிலைமைகளையும் கூட்டுறவுக் கடைகளில் காண்பது அரிது. குறிப்பாக, தட்டுப்பாடு நிலவும் வேளைகளில் பங்கீட்டு முறைகளில் பொருள்களைப் பெறமுனையும் ஒரு சங்கத்தின் வாடிக்கையாளன் 'பொருள் வேண்டாம் ஆளைவிடு' என்றநிலையில் திரும்பிச் செல்கின்ற நிலைமை அநேக சங்கக் கடைகளில் உணரப்பட்டுள்ளது. இதற்குப் புறநடையாக, மக்களுடன் நல்ல உறவைப்பேணும் கிளை முகாமையாளர்கள் பலர் உள்ளதையும் நாம் மறுப்பதற்கில்லை.

தட்டுப்பாடான பொருளொன்றைப் பெறுவதற்காக இன்னொரு பொருளை வாங்குமாறு நிபந்தனை விதிப்பதோ, குறித்த ஒரு தொகைக்கு வேறு பொருள்களைக் கொள்வனவு செய்யுமாறோ தனியார் வியாபாரி கூட கட்டுப்படுத்துவதோ நுகர்வோரது உரிமைகளை மீறும் செயலாகும். நுகர்வோர் பாதுகாப்புச் சட்ட ஏற்பாடுகளின்படி குற்றமாகும். அவ்வாறிருக்க, கூட்டுறவுச் சங்கங்கள் நிபந்தனை விதிப்பதும் அவ்வாறு நிபந்தனை விதித்தமை பற்றிப் பத்திரிகைக்கான மறுப்பில் குறிப்பிடுவதும் அபத்தமானது. நிவாரணப் பணியே இன்று கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான பணியாகி விட்டது. அதை விடுத்தால் அவற்றின் இயங்கு நிலை மிகவும் தொய்ந்து போயிருப்பது புலனாகும்.

இதற்கு திறனற்ற நிர்வாகங்களும், பொறுப்பு வாய்ந்த பதவிகளில் இருப்போர் கூட்டுறவைச் சுரண்டிப் பிழைத்துச் சீரழித்தமையும் காரணமென்பது கசப்பான உண்மை. இதைப் பலரும் மறுதலிக்கலாம். ஆனால், குறித்த பிரதேச மக்களுக்கு இந்நிலைமையின் உண்மைத்தன்மை புரியும். பூர்வீக சொத்துக்களோ, தேடிய தேட்டமோ இல்லாமல் கூட்டுறவுத் துறைக்குள் இருந்தவாறே செல்வந்தரான பலருள்ளனர்.

அதேவேளை, மிக எளிமையான மிகக் கண்ணியமான கூட்டுறவுச்சேவையை வழங்கிக்கொண்டிருக்கும் கூட்டுறவாளர்களையும் இந்த இடத்தில் நினைவு கூராமலிருக்க முடியாது.

கூட்டுறவுத் துறை சார்ந்த திருப்பிதியீனங்கள், முறைகேடுகள் பற்றி எழுதக் கூடிய விடயங்கள் நிறையவுள்ளன. அது இப்பந்தியின் நோக்கமல்ல.

கூட்டுறவுத் துறை மக்களிடம் இழந்த நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்ப முனைப்போடு செயற்படவேண்டும். உலகளாவிய கூட்டுறவு அமைப்புக்களோடு கைகோர்த்து, தனியார் துறையினரின் சவால்களை முறியடித்து, மக்களுக்குத் திருப்தியான சேவையினை ஆற்ற முன்வரவேண்டும். திறன்மிகு நிர்வாகங்கள் உருவாக்கப்பட்டு இளைஞர்களும் உள்வாங்கப்பட்டு பன்முகப் படுத்தப்பட்ட வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதுவே கூட்டுறவின் நலன் நாடுவோரது நல்லவா!

**ஏகலைவன் எழுதுவது**

# நன்கு பழக்கமான எங்கள் அடையாளத்தை முன்பின் அறியாத இடங்களிலும் காண்பீர்கள்!

TVS

## எங்கும் எந்நேரமும் வாடிக்கையாளர் சேவை

TVS வலையமைப்பு நாளுக்கு நாள் இலங்கை முழுவதிலும் வியாபித்து வருகின்றது. நகரங்களில் மட்டுமன்றி தூரப் பிரதேசங்களிலுள்ள கிராமங்களிற்கூட ஏறத்தாள 500 விற்பனை நிலையங்களையும், சேவை நிலையங்களையும், உதிரிப்பாக முகவர்கள் நிலையங்களையும் கொண்டுள்ள இவ் வலையமைப்பு மேலும் விரிவடைகிறது. ஆகவே, நீங்கள் எங்கிருந்தாலும் எங்கு சென்றாலும் அவ்விடத்திலேயே ஒரு புத்தம்புதிய TVS மோட்டார் சைக்கிளை அல்லது அசல் உதிரிப் பாகங்களை வாங்க முடியும். கண்ணியமான நிபுணத்துவப் பராமரிப்புச் சேவையையும் பெற்றுக் கொள்ளலாம்.







GENUINE PARTS
24 Hour Service

TVS லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
757, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.
தொலைபேசி: 4614746 (10 தேடல் இணைப்புகள்)
தொலைநகல்: 4614906

United Motors Lanka Ltd.

26 ஆம் திகதிக்கு முன்னர்

# AA-(sri)

26 ஆம் திகதிக்குப் பின்னர்

# AA-(sri)

ஆழிப் பேரலை அனர்த்தத்தின் பின்னரும் ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் ஆகிய எமக்கு சர்வதே தரமதிப்பீட்டு முகவரான, இலண்டன் பி(F)ட்ச் நிறுவகத்தினால் AA-(Sri) எனும் தரமதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில், முதலும், முன்னோடியுமான ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ் பெற்றுள்ள இக்கௌரவம் எமது நிதியியல் வலிமையையும், ஸ்திரத்தன்மையையும் ஓங்கி ஒலிக்கிறது. இதன் மூலம், நாம் என்றும் உங்களுடன் இருப்பதை நிரூபித்திருக்கிறோம்.

LEO BURNETT

SRI LANKA INSURANCE CORP. LTD.

ஸ்ரீ லங்கா இன்ஷூவரன்ஸ்